சத்தி சக்திதாசனின்

# தமிழ்ப்பூங்கா


மலர் 3 இதழ் 11 ஆக்கம் : சத்தி சக்திதாசன் வெளியீடு : சத்தி சக்திதாசன் ஏப்பிரல் 2005

# இரண்டாவது ஆண்டு மலர்

வாசகர்களுக்கு எமது 

தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

[1]



ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல ஒவ்வொருமுறை விழுந்த போதும் எழுந்தான் என்பதே பெருமை

[1]




பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# இந்த இதழில்





- எண்ணம்
- எனது பாரதி
- கதை கேளுங்கள்
- சிந்தனைக்கு ஒரு துளி
- கவிதைத்தூறல்
- ஏதாவது எழுதலாமே !
- சிரித்து வாழவேண்டும்
- கண்ணதாசன் கார்னர்
- ஒருதரம் ஒரேதரம் - சிறப்புச் சிறுகதை
- இந்த இதழில் மலர்ந்தவர்
- டாக்டர் யேசுதாஸ் - சிறப்புக் கட்டுரை
- வைரமுத்துவின் வண்ணப்பூங்கா
- பார்க்க ! பேச ! கேட்க !
- வெங்கடேஷின் மலர்வனம்
- துருவநட்சத்திரம்
- உங்களுக்காக விஸ்வநாதன் - பொன்மேனி
- இதழிற்கோர் குறள்
- ஒரு இந்துவின் பார்வை
- சிந்திப்போமா !
- சின்ன சின்ன துளிகள்
- கனடாவிலிருந்து சிவபாலன்
- இலக்கியச்சோலை
- வாலியின் கலர்ப்பூக்கள்
- சுதந்திரப் பூங்காற்று - சிறப்புச் சிறுகதை
- சிறப்புக்கட்டுரை - கே-எம் விஜயகுமார்
- கவிக்களம்
- உங்கள் அன்பு அறிவிப்பாளர் - சிறப்புக்கட்டுரை
- கொஞ்சநேரம்




பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# எண்ணம் 11



அன்பான நண்பர்களே !

இரண்டு வருடங்கள் பறந்தோடி விட்டன. ஓராண்டு விழா மலரில் எண்ணத்தை வடித்தது ஏதோ நேற்றுப்போலொரு நினைவு , ஆனால் எனது கைகள் இப்போது வடித்துக் கொண்டிருப்பது இரண்டாவது ஆண்டுவிழா மலரின் எண்ணமாகும்.

தமிழ்ப்பூங்காவின் தத்தித் தத்தி நடக்கும் இலக்கியப் பயணம் எந்த இடத்தில் நிற்கிறது ? இது என்னை நானே கேட்கும் கேள்வி . பயணம் சிரமமாகத்தான் இருக்கிறது. பாதைகள் கரடுமுரடாகத்தான் தென்படுகிறது ஆனால் கூடப் பயணிப்பவர்களின் முகத்தில் தெரியும் மகிழ்ச்சி எனக்கு ஒரு உந்துகோலாக இருக்கிறது.

ஆமாம் வாசகர்களும் , நண்பர்களுமாகிய நீங்கள் கொடுக்கும் ஆதரவு , ஊக்கம் எனது கால்களைத் தளரவிடாது பயணத்தைத் தொடரச் செய்கிறது.

தமிழ்ப்பூங்காவை ஆரம்பிக்கும்போது தெரியாத பல விடயங்களை இப்போது அறிந்துகொண்டேன். எதைஎதையெல்லாம் உள்வாங்கிக் கொள்ள வேண்டும் , எதையெல்லாம் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனும் மனப்பக்குவம் என்னை மெதுவாக வந்தடைந்து கொண்டிருக்கிறது.

நான் எழுதுவதை , எனது கருத்தை யாராவது திருத்த முற்படும்போது சிந்திக்காமல் , உடனடியாக எனது கருத்தைப் பாதுகாக்கும் நிலைக்குப்பாயும் மனோநிலையிலிருந்து , "ஓகோ நான் சொல்வதை இப்படிச் சொன்னால் அதில் கூட வித்தியாசமான விளக்கம் இருக்கிறதோ ?" என மற்றவர் கருத்துக்குச் செவிசாய்க்கும் பண்பு முன்னையை விட இப்போது அதிகரித்திருப்பது போலத் தென்படுகிறது.

மேலே இருக்கும் தராசுப் படத்தைப் பார்த்திருப்பீர்கள். நான்காவது இதழலிருந்துதான் அந்தத் தராசு அங்கே நிலைகொள்ள ஆரம்பித்தது . அதற்கான பின்னணி என்ன? எண்ணம் என்ற தலையங்கத்தின் கீழ் எழுதும் போது என்னையே நான் எடை போட்டதுதான் அந்ததராசின் தோற்றத்திற்குக் காரணம்.

என் மனதில் நான் கொண்டுள்ள கருத்துக்கள் சரியாக எடைபோடப்படுகின்றனவா என ஒவ்வொருமுறை நான் எண்ணம் எழுத ஆரம்பிக்கும்போதும் என்னை நான் கேட்டுக் கொள்கிறேன். நான் உண்மையானவனாக , மனச்சாட்சிக்கு விரோதமின்றி நடந்து கொள்கின்றேனா என என்னை நான் வினவிக் கொள்வதற்கு இது ஒரு சந்தர்ப்பம் ஆகிறது.

இன்னும் நான் கற்றுக் கொள்ள வேண்டியது அநேகமுள்ளது. அந்தத் தராசின் சமநிலையை அடைய நான் இன்னமும் பல படிகள் ஏற வேண்டும். ஆனாலும் அந்த இலட்சிய நோக்கை எனக்கு அந்தத் தராசு ஞாபகமூட்டிக் கொண்டிருக்கிறது.

இந்த இரண்டு வருடங்களுக்குள் நானடைந்த அனுபவங்கள் ஏராளம். எனது மனைவியின் விபத்து , எனது வருடாந்த இந்தியப் பயணம் , சுனாமி , எனது முதலாவது புத்தக வெளியீடு என ஒவ்வொரு நிகழ்வுகளும் எனக்கு ஒவ்வொரு அத்தியாயங்களாக புதிய பாடங்களைப் புகட்டின.

தமிழ்ப்பூங்கா இன்றுவரை அரசியல் சார்பற்ற , சினிமாச் செய்திகளற்ற ஒரு இலக்கியப் படைப்பாகவே வந்து கொண்டிருக்கின்றது. நாட்டு எல்லைகளுக்கப்பாற்பட்டு தமிழ் எனும் அந்த இனிய நாரினால் கோர்த்துத் தொடுக்கப்பட்ட ஒரு வாசமிக்க தமிழ்மாலையாக "தமிழ்ப்பூங்கா" விளங்க வேண்டும் என்பதே எனது லட்சியக் கனவு.

தூயதமிழை வளர்க்க வேண்டும் என்பதல்ல எனது நோக்கம் . எனது நெஞ்சினில் துள்ளி விளையாடும் தமிழ் எனது நண்பர்களை வந்தடைய வேண்டும் என்பதே நோக்கம். தமிழ்ப்பூங்காவில் பங்களிப்போரில் தூயதமிழ் ஆதரவாளர்களும் உண்டு , நடைமுறைத்தமிழ் படைப்பாளிகளும் உண்டு , ஆன்மீகவாதிகளும் உண்டு , ஆன்மீகத்தை நோக்கி கேள்விக்கணைகளைத் தொடுப்பவர்களும் உண்டு. தமிழ் எதிர்காலச் சந்ததிகளுக்கிடையில் மறைகிறது என்றெண்ணி நிகழ்காலத் தலைமுறையைக் கோட்டை விட்டுவிடக்கூடாது.

என்றென்றும் என்னுடன் எனது பயணத்தில் கூடவரும் என் மனைவி மைதிலி , மற்றும் எனது நெஞ்சத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் எனது நண்பர்கள் தொடர்ந்து தரும் ஆதரவினாலும் , அண்ணாமலையானின் அருட்கிரகத்தினாலும் தமிழ்ப்பூங்காவை நான் தொடர்ந்து நடத்துவேன் எனும் அசைக்கமுடியாத நம்பிக்கை நெஞ்சில் நிறைய நன்றியுடன் விடைபெறுகிறேன்.

அடுத்த இதழில் சந்திக்கும் வரை
அன்புடன்
சத்தி சக்திதாசன்



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# எனது பாரதி



மாகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவுகளில் மூழ்கும் நாம் , அவரின் வாழ்வில் இருந்து எடுத்துக் கொள்ளும் பாடம் என்ன ? தன் சொந்த வாழ்வின் இன்பங்களைத் துறந்து தனது குடும்பம் ஏழ்மையெனும் கடலினுள் மூழ்குவதையும் பொருட்படுத்தாது தனது கனவுகளையே தனது முழுமூச்சாகக் கொண்டு தன் வாழ்க்கை முழுவதையும் தனது
தாய்த்திருநாட்டின் விடுதலைக்காகவும் , தன் தாய்மொழியின் மேம்பாட்டுக்காகவும் தியாகம் செய்த அந்த அரும் பெரும் மனிதனின் வாழ்க்கை எதை எமக்குக் கூறுகிறது ? பாரதி ஒரு பைத்தியக்கார வாழ்க்கை வாழ்ந்தார் என்ற சிலரின் கூற்றின்படி பார்த்தால் , அப்படி நாம் வாழக்கூடாது என்று எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்படலாம் . அப்படியானல்
ஏன்? இந்த மகாகவி இத்தகைய அளவில் போற்றப்படுகிறார் ? உயிரோடிருக்கும் போது உதாசீனம் செய்து விட்டோமே என்ற குற்ற உணர்வா ? இல்லை ! மாகாகவி சொன்ன , பாடிய கருத்துக்களில் இருக்கும் உண்மை எம்மைத் தணலாகச் சுடுகிறது . தன்னுடைய மனச்சாட்சியின் பிரகாரம் உண்மை என்பதை அப்படியே எடுத்துரைத்த வீரம் எம்மைக் கூச வைக்கிறது .

பாரதியின் கவிதைகளைப் பற்றித்தான் நாம் அதிகமாக பேசிக்கொள்கிறோம் ஆனால் அவர் கவிதைகளைத் தவிர பல கட்டுரைகளைப் படைத்திருக்கிறார். பல பத்திரிகைகளை நடத்தியிருக்கிறார். பல பத்திரிகைகளில் ஆசிரியராகவும் , எழுத்தாளராகவும் இருந்திருக்கிறார். கார்ட்டூன் என்றழைக்கப்படும் கேலிச்சித்திரத்தின் துணையோடு கருத்துக்களை எடுத்தியம்பியிருக்கிறார்.

பாரதியின் மனம் ஒரு வாசிகசாலை . சுதந்திரச் சோலையில் அடித்த தென்றல் காற்று . பாரதியின் அயராத கனவை புது வடிவத்தில் இன்றைய சமுதாயத்தின் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டியது எம் ஒவ்வொருவருடைய கடமையுமாகும். பாரதியின் படைப்புக்களைப் படித்து, சுவைத்து அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் மனம் படைத்தவர்கள் நம்மத்தியில் இருந்ததால் , இருப்பதால் அவரது ஆக்கங்கள் புது ஆய்வுகளோடு இன்றும் வலம் வருகிறது.

ஆனால் எதிர்காலச் சந்ததி இதை எந்த வடிவத்தில் உள்வாங்கப் போகிறது ? அந்தக் கருத்துக்கள் எவ்வகையில் மக்கள் மனதில் முன்னிலை வகிக்கப் போகிறது ? இது கணனி யுகம் , இணையத்தளங்களின் காலம் , இவரது ஆக்கங்கள் இணையத்தளங்களில் பாதுகாக்கப்படுவது மட்டுமின்றி , இளம் சந்ததி ஆர்வமுடன் அவர் செய்திகளை , சமுதாய முன்னேற்றக் கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ளக்கூடிய வகையில் , தமிழறிஞர்கள் இவற்றைச் சேகரிக்க முன்வரவேண்டும் .

இந்தப் புதுவருடத்திடுடனான 2வது ஆண்டு மலரில் நான் எனது பாரதியின் சிறப்பம்சமாக , பாரதியார் 1907ம் ஆண்டு சித்திரை , தமிழ்ப் புதுவருடத்தின் பாலாக வரைந்த கார்ட்டூன் படத்தையும் , அதற்குரிய அவரது விளக்கத்தையும் , கொடுத்து இருக்கிறேன்.

இப்படியான தகவல்களை அறியக்கூடிய வாய்ப்பு , தமிழ் இணையத்தளங்களின் வளர்ச்சியாலும் , அதன் பின்னால் தன்னலமின்றி உழைக்கும் நல்ல உள்ளங்களின் முயற்சியாலுமே சாத்தியமாகிறது,என்பதனையிட்டு பெருமையடைகிறேன்




ஏப்பிரல் 20 1907

வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர்,
வாழிய பாரத மணித்திருநாடு,

இன்றைமை வருத்தும் இன்னல்கள் மாய்க.
நன்மை வந்தெய்துக, தீதெல்லாம் நலிக,

அறம் வளர்ந்திடுக, மறமடி வறுக.
ஆரிய நாட்டினர் ஆண்மை பொடியற்றுச்

சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக
நந்தேயத் தினர்நாடேறும் உயர்க.

வந்தே மாதரம் வந்தே மாதரம்

சென்றவாரம் சனிக்கிழமையன்று தமிழர்களின் புது வருஷப்பிறப்பு நாள் , ஆதலால் அன்று நாம் விடுமுறை பெற்றுக்கொண்டோம். புதுவருஷம் நமக்கு மங்களமாகவே பிறந்திருக்கின்றது. இது முதலேனும் நாம் இடையறாது விடா முயற்சியுடன் ஸ்வராஜ்ஜியம் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் முயற்சி புரிய வேண்டுமென்பதாக நம்மவர்களிலே பலர் புதுவருஷப் பிறப்பன்று பிரதிக்கினை செய்து கொண்டார்கள்.

சத்தி சக்திதாசனின் ஆக்கம்



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

ஸ்வராஜ்ஜியம் பெறும் வழிகளாகிய ஸ்வதேசியக் கல்வி , அந்நிய வஸ்துப் பகிஷ்காரம் , ஸர்க்கார் உத்தியோக வெறுப்பு , பஞ்சாயத்துத் தீர்ப்புகள் முதலிய ஏற்பாடுகள் நமது நாட்டிலே பரவுவதற்குரிய பிரயத்தனங்கள் எவ்விதத்திலேனும் செய்ய வேண்டுமென நம்மவர்கள் நிச்சயம் செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் நமக்கு அனேக நற்சகுனங்களும் தோன்றியிருக்கின்றன. பத்துக்குடி சுதேசிக்கப்பல்கள் வந்து விட்டன .
பஞ்சாபில் பத்திரிகைக்காரரின் தண்டனை உறுதியாகி விட்டது. அதாவது தேசாபிமானம் என்று வாயால் பேசிக்கொண்டிருந்த நாட்கள் போய் , கஷ்டத்தைப் பாராட்டாமல் தேசத்திற்குழைக்கும் நாட்கள் வந்து விட்டன. தூக்கத்திலே விருப்பம் கொண்ட சென்னை மகாணத்தின் முகத்திலே தேசாபிமான ஜலத்தைக் வாரிக்கொட்டி எழுப்பி விடும் பொருட்டாக பாபு விபின சந்திரபாலா வந்து விட்டார்.

இன்னும் பல நற்குறிகளும் காணப்படுகின்றன. இவையனைத்தையும் பாழாக்கி விடாமல் காலத்தின் சின்னங்களை நமக்கனுகூலமான முறையிலே பயன்படுத்திக் கொள்வது நம்மவர்களின் கடமையாகும்.

************

நண்பர்களே ! புதுவருடச் செய்தியாக நமது பாரதி ஒரு கேலிச்சித்திரத்தின் மூலம் ஒரு கருத்தை எடுத்தியம்பி, அதன் விளக்கத்தை அக்காலத் தேவையான தாய்நாட்டின் விடுதலைக்கான பணியுடன் இணைத்து ஒரு சிறு கட்டுரை தீட்டியிருப்பது , அந்த கருத்துக் கனலின் வெப்பத்தை , அறிவுச் சுடரின் ஜோதியை எவ்வளவு திவ்வியமாக எடுத்துக் கூறியுள்ளார் என்று பார்த்தீர்களா ?

ஆக்கம் : சத்தி சக்திதாசன்

நன்றி : " மின்வெளியில் மணிமண்டபம் " ( திசைகள் இணையத்தளம்) தகல்களுக்காக

---

# கதை கேளுங்கள்

## உறவெனும் விலங்கு

திரும்பத் திரும்ப கழுத்தில் டையை அணிய முயற்சித்துக் கொண்டிருந்தான் சுந்தரேசன் . அருகே கட்டிலில் படுத்து குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்த சரோஜாவைப் பார்க்க பார்க்க அவனுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது.இன்னும் 10 நிமிடத்தில் புறப்பட்டால் தான் 7 மணி ட்ரெயினைப் பிடிக்க முடியும் , இன்றைக்கு சரியாக ஒன்பது மணிக்கு அவன் ஒரு கஸ்டமரைச் சந்திக்க வேண்டி இருந்தது , லேட்டாகப் போனால் மனேஜர் "பால்" கத்துவான். நேற்றிரவே இதைப்பற்றிச் சரோஜாவிடம் சொல்லி இருந்தான் .அவள் இதைப்பற்றிச் சிறிதும் அக்கறை கொள்ளாமல் குறட்டை விட்டுக் கொண்டிருந்தாள் , இப்போ எழுப்பினால் எரிந்து விழுவாள் . காப்பி சாப்பிடாமல் ஆபீசுக்கு போனால் என்ன என்று எண்ணியவாறு , தனது ப்ரீவ் கேசை எடுத்துக் கொண்டு " சரோஜா நான் வேலைக்கு போயிட்டு வாறேன் " என்று சத்தமாய்ச் சொன்னான் .
அவளோ மெதுவாக "ம்" என்று சொல்லி யவாறே புரண்டு படுத்தாள்.
கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தவனின் முகத்தில் சில்லென்று குளிர் காற்று அடித்தது , அப்போது நவம்பர் மாதமாகையால் சமர் வெளியேறிக் கொண்டு , விண்டர் மெதுவாக பின்கதவால் உள்ளே நுழைந்து கொண்டு இருந்தது.



"சீ என்ன வாழ்க்கையிது , ஒரே எந்திர வாழ்க்கை.நாய் மாதிரி உழைக்கிறன், எங்க இந்த சரோஜாவுக்கு விளங்குது " என்று மனத்துக்குள் அலுத்துக்கொண்டவன் , அவசரமாக ஸ்டேசனை நோக்கி நடந்தான். அந்தக் காலை வேளையி லும் புற்றீசல்களைப் போல பல மனிதர்கள் ஸ்டேசன் எனும் அந்த மையப்பகுதியை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஆண்களைப் பார்த்து " இவங்களுக்கு என்ன கவலை என்னைப் போல ஒரு சோம்பேறி மனி சியிட்டை மாட்டியிருக்கிறாங்களே?" எனவும் துள்ளித் துள்ளி நடக்கும் பெண்களைக் கண்டதும் " இவளி ண்ட புருசன் எவ்வளவு லக்கியாய் இருக்கவேணும் , உழைக்கிற பெண்டாட்டி கிடச்சிருக்கு" எனவும் எண்ணினான்.ட்ரெயின் அவனையும் கனமான அவனது இதயத்தையும் சுமந்து கொண்டு லண்டன் பிரிட்ஜ் நோக்கி விரைந்தது.ஸ்டேசனில் இறங்கி விரைவாக நடந்து ஆபிசுக்குள் நுழைந்தான் , நுழையும் போதே மெதுவாகப் பாலின் ஆபிசை எட்டிப் பார்த்தான்.

"அப்பாடா" என்று பெருமூச்சு விட்டான்.

ஒருவாறு கஸ்டமர் மீட்டிங் முடிந்து வந்து தனது கதிரையில் தொப்பென விழுந்தான் " யுயர் வைஃ ராங் ட்வைஸ்" (உன்னுடைய மனைவி இருமுறை போன் செய்தாள்) என்றான் பக்கத்து மேசையிலிருக்கும் ஸ்டீவ் .அவன் சொல்லி முடியவும் டெலி போன் அடிக்கவும் சரியாக இருந்தது.

"ஹலோ" என்றான் சுந்தரேசன்

" நான் தான் , என்ன காலம்பற சொல்லாமக் கொள்ளாம ஓடிட்டிங்க ? " என்றாள் சரோஜா

" கூப்பிடேக்க எழும்பினாத்தானே , சரி அதைப்பற்றி இப்ப என்ன இஞ்ச பக்கத்தில ஸ்டீவ் இருக்கிறான் , நான் பேந்து கதைக்கிறன் " என்றான் சுந்தரேசன்

" என்ன உடன எரிஞ்சு விழத் தொடங்கீட்டிங்க , நான் தங்கச்சி வீட்ட போயிட்டு ஈவினிங் தான் வருவன் , காருக்குப் பெற்றோல் இருக்கே ? " என்றாள் சரோஜா

" கட்டாயம் போக வேணுமே ? கொஞ்சம் பெற்றோலை மிச்சம் பிடிச்ச அடுத்த கிழமை மட்டும் இழுத்திடலாம் " என்றான் சுந்தரேசன் தயங்கியவாறே
" நான் எங்கையும் போறதெண்டாத்தான் உங்களுக்கு வீண் சிலவு , நீங்க உங்கட தங்கச்சியைப் பாக்கப் போகேக்க கார் என்ன தண்ணியிலேயே ஓடுது ? " என்றாள் சரோஜா



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

" சரி சரி என்ன என்டாலும் செய் " என்று சொல்லி விட்டு போனை வைத்தான் சுந்தரேசன்.

அவனுக்கு சரோஜாவை நினைக்க கோபப்படுவதா இல்லை பரிதாபப்படுவதா என்று தெரியவில்லை . திருமணமாகி நான்கு வருடங்கள் ஆகின்றன. அவளைப் பெண்பார்த்து திருமணமாகமுன் இருவரும் அடிக்கடி சந்திப்பது வழக்கம். அப்போதெல்லாம் " கெதியா நல்ல ஒரு வீடு வாங்க வேணும் , நானும் படிச்சிருக்கிறன் தானே , உடன ஒரு வேலை எடுத்து உங்களுக்கு உதவியா இருப்பன்" என்று சொல்லிக் கொஞ்சிக் கொஞ்சிப் பேசிய சரோஜாவா இப்படி மாறினாள் . திருமணமாகி நான்கு வருடத்தில் ஒருநாள் கூட வேலை செய்தவளில்லை , சுந்தரேசனும் சரி பாவம் செல்லப்பிள்ளையாக வளர்ந்தவள் என்று விட்டு விட்டான்.

அதன் பின்பு மனைவியின் ஆசையை வாழவைக்க கஸ்டப்பட்டு ஒரு நல்ல வீட்டை வாங்கினான் , அதற்கு பிறகாவது வேலைக்குப் போவாள் என்று பார்த்தால் ,அவள் அசையவே இல்லை . காண்பவர்களிடம் எல்லாம் " இவர் என்னை வேலைக்கு போக விட்டாத்தானே ? " என்று வேறு அங்கலாய்த்துக் கொள்வாள் . சுந்தரேசனும் மனதுக்குள் சிரித்துக் கொள்வதோடு சரி.

"இனி அங்க தங்கச்சி வீட்டைப் போறாள் , அவவும் , புருசனும் சரோஜாவுக்கு நல்லா ஏத்தி விடுவினம் " என்று மனதுக்குள் திட்டிக் கொண்டான் . சரோஜாவின் அப்பாவும் அம்மாவும் லெஸ்டரில் இருந்தார்கள், அவளின் அப்பா மட்டும் அவளுக்கு காண்கிற போதெல்லாம் புத்தி சொல்லுவார் ஆனால் அம்மாவோ " என்ன உமக்கு என்னைப் படுத்தினது போதாதே இப்ப அவளையும் கஷ்டப்படச் சொல்லுறீரே ? " என்று அடக்கி விடுவாள்.

அத்துடன் அவள் அப்பா அடங்கி விடுவார் . அவள் சகோதரி வனஜா இருக்கிறாளே ! அவளைப் பற்றி நினைக்க சுந்தரேசனுக்கு தலையெல்லாம் ஜிவு ஜிவு என்று ஏறியது .

சுந்தரேசன் - சரோஜா திருமணத்திற்கு 6 மாதங்களுக்கு முன்னரே வனஜா , கஜனைக் காதல் திருமணம் புரிந்து கொண்டாள் . எந்நேரமும் கஜன் தன்னை எப்படி அன்பாகப் பார்த்துக் கொள்கிறான் என்று கதை அளப்பதுவே அவள் தொழில். காதல் திருமணம் என்றாலே திருமணத்திற்குப் பின்னர் எப்போதும் சொர்க்கம் தான் என்று அறிவிலித்தனமாக எண்ணிக் கொண்டிருந்த சரோஜாவிற்கு எப்போதும் சுந்தரேசனை , கஜனுடன் ஒப்பிடுவதுதான் வேலை.

சரோஜாவின் அம்மாவும் எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போல ஒத்து ஊதி விடுவாள் . வனஜா இரண்டு வருடத்தில் ஒரு ஆண்குழந்தை பெற்றுக்கொண்டாள் . சரோஜாவின் அம்மாவுக்கு அது வேறு தொக்காகப் போய் விட்டது . எப்போ எடுத்தாலும் சுந்தரேசனுக்கு முன்னால் அதைக் குத்திக் காட்டுவாள்.

"ஐ ஹாவ் எ கோல் பார் யூ " (உனக்கு ஒரு கால் வந்தி ருக்கு) என்ற ஸ்டீவின் குரல் கேட்டு திடுக்கிட்டவன் போல " சாரி , ப்ளீஸ் பாஸ் த கோல் " ( மன்னிக்கவும் , தயவு செய்து காலைப் பாஸ் பண்ணு) என்றவாறு டெலிபோன் காலை ஏற்றுக் கொண்டான் .

திடீரென தங்கை மீனாவின் யோசனை வந்தது , அவளுக்கு வேறுவிதமான குறை அதாவது தனக்கு கொடுத்த சீதனம் , குறைந்த அளவு என்றும் அது தனக்கு கௌரவக்குறைவு என்றும் . பாவம் அவள் மாப்பிள்ளை குமாரோ தங்கமானவன் அவன் மீனாவைக் கண்டிக்காத நாட்களேயில்லை , ஆனாலும் மீனாவுக்கு இது ஏதோ வியாதி மாதிரி காணும் போதெல்லாம் பிதற்றிக் கொண்டிருப்பாள் .

சுந்தரேசனுக்கு தங்கை மீனா மட்டும் தான் , அம்மா யாழ்ப்பாணத்தில் . சரோஜாவை மணம் முடிப்பதற்கு முன்னதாகவே மீனாவை லண்டனுக்கு தன்னுடன் கூப்பிட்டுக் கொண்டான் . அப்பா காலமாகி 6 வருடங்கள் ஆகிவிட்டது , நடுத்தரவர்க்கங்களின் முத்திரையான "ஹார்ட் அட்டாக்" அவனது அப்பாவை ஒரேயடியாக முடித்து விட்டது..

சரோஜாவை அம்மா மணம் பேசி கடிதம் எழுதிய போது "மீனாவுக்கு கலியாணம் பண்ணாமல்..." என்று தயங்கினான் சுந்தரேசன் ஆனால் அவன் அம்மாவோ " சரோஜா நல்ல குடும்பத்துப் பிள்ளை , உனக்கு ஒத்தாசையா இருந்து உன்ட தங்கச்சீன்ட கலியாணத்தை முடிப்பாள் , நல்லாப்படிச்சவ " என்றெல்லாம் கூறி அவனைச் சம்மதிக்க வைத்து விட்டாள்.

கலியாணத்தின் போது சரோஜாவும் நல்லா அன்பாகத்தான் மீனாவோடு பழகினாள் , பின்பு வழமையான பிக்கல்,புடுங்கல் சுந்தரேசன் பார்த்தான் இனியும் மீனாவை வீட்டோட வைச்சிருக்கக் கூடாது என்று பாங்கில லோனைப் போட்டு ஒரு மாதிரி குமாரைப் பேசி மீனாவைக் கட்டிக் குடுத்திட்டான்.

அன்றிலிருந்து சரோஜாவும் எதற்கெடுத்தாலும் " உங்கட தங்கச்சிக்கெண்டா எல்லாம் செய்வியள் , நான் அப்பிடியே , எங்கேயோயிருந்து வந்தவ தானே ? " என்று முற்றிலும் மாறுபட்டவளாகி விட்டாள்.

சுந்தரேசனும் இனி என்ன செய்வது என்று சரோஜாவின் பக்க நியாயத்தையும் ஒருவாறு ஏற்கப் பழகியிருந்தான். ஆனாலும் சமயங்களில் அவனையும் மீறி அவனுக்கு அவள் நடப்பதைப் பார்த்து ஒரே விரக்தியாகப் போய்விடும்.

"ஆர் யு கோயிங் ஃபார் லஞ்ச் " என்று அடுத்த செக்சனில் வேலை செய்யும் எலிசபெத் கேட்ட போது நிமிர்ந்தவன் "யெஸ் லெட்ஸ் கோ " என்றவாறு அவளுடன் காண்டீனை நோக்கி நடந்தான்.

இந்தக் கம்பெனியில் அவன் வேலைக்குச் சேர்ந்து 18 மாதங்களே ஆகிறது, பலருடனும் அவன் நட்புடன் பழகினாலும் , ஏனோ எலிசபெத்துடன் மட்டும் ஒரு நெருக்கமான நட்புக் கொண்டிருந்தான்,சமயங்களில் சரோஜாவின் மீது விரக்தி யடையும் போது மனம் திறந்து எலிசபெத்துடன் பேசுவான் . அவளும் ஒரு உற்ற நண்பனுக்கு அறிவுரைபோல் ஆறுதல் கூறுவாள் .

எலிசபெத்தின் அப்பா ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர் , அம்மா ஆங்கிலேயப்பெண்மணி. இந்தக் கலப்பினால் ஸ்பெயின் நாட்டவருக்குரிய கருங்கூந்தலையும் , கரு விழிகளையும் ஆங்கி லேயப் பெண்களின் கூர்மையான அங்கங்களையும் கொண்டிருந்தாள் . அவளைக் கவர்ச்சிகரமான பெண் என்றுதான் கூறவேண்டும்.



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

அவள் ஏற்கனவே திருமணமானவள் , கணவனின் போக்குப் பிடிக்காததால் விவாகரத்து பண்ணி விட்டாள். இது நடந்தது சுந்தரேசன் அங்கே வேலைக்கு ஜாய்ன் பண்ண 6 மாதத்திற்கு முன்னர் என்று சொல்லியிருந்தாள்.

அவர்கள் இருவரும் தமது வாழ்க்கையின் இக்கட்டான சூழலைப் பற்றி அடிக்கடி காண்டீனில் அமர்ந்து பேசுவதுண்டு . சில சமயங்களில் ஆபிஸில் அவனது டீம் , பப்புக்குப் (Bar) போகும்போது அவனும் போவதுண்டு அங்கும் அவனும் எலிசபெத்தும் தான் ஒன்றாகப் பேசுவார்கள்.

காண்டீனில் பேசிக்கொண்டிருக்கும் போது " சுந்தர் , ஷால் வீ கோ ஃபார் எ ட்ரிங்க் திஸ் ஈவினிங் ?" ( இன்று மாலை பாருக்குப் போகலாமா ? ) என்று கேட்டாள், " சாரி லிஸ் ஐ ஹாவ் டு கோ ஹோம் " (மன்னித்து விடு நான் வீடு செல்ல வேண்டும்) என்றான் சுந்தரேசன் . " யூ மஸ்ட் பீ ஸ்கெர்ட் ஒஃப் யுயர் வைஃப் " (உன்னுடைய மனைவிக்கு நீ பயப்பிடுகிறாய்) என்றவாறே கடகடவெனச் சிரித்தாள் எலிசபெத் , ஒருகணம் அந்தக் கள்ளம் கபடமற்ற சிரிப்பில் தன்னை மறந்தான் சுந்தரேசன். வெண்கலங்களை உருட்டி விட்டாற்போல கணீரென்ற ஒலி அவன் காதுகளுக்குள் இனித்தது.

களைத்து விழுந்து வீட்டுக்குள் நுழைந்தான் சுந்தரேசன் , வீடு முழுவது மின்சார விளக்குகள் பளிச்சிட்டுக் கொண்டு இருந்தது . ஹாலில் டீ.வி அலறிக்கொண்டிருந்தது . சரோஜா உட்கார்ந்து ஒரு ஆங்கிலப் புரோகிராம் பார்த்துக் கொண்டிருந்தாள் . அவள் இருந்த மாதிரியைப் பார்க்கும் போதே , தனக்கு காப்பி கிடைக்கப் போவது இல்லை என்று தெரிந்து கொண்டான் .

இவ்வளவு கால தாம்பத்தியத்தில் ஒன்று மட்டும் அவனுக்கு நன்றாகவே தெரிந்தது. எப்போது அவளை அணுகக் கூடாது என்பதுவே அது . அந்த நேரங்களில் அவளுடன் வீண் தர்க்கங்கள் வேண்டாமே என்று ஒதுங்கிக் கொள்ள பழகிக் கொண்டான் . சிலசமயங்களில் இது என்ன இப்படி ஒரு வாழ்க்கையா? என்றும் எண்ணம் வரும் பின்பு சமாளித்துக் கொள்வான்.

" என்ன சரோஜா வீடெல்லாம் தீபாவளி மாதிரி லைட்டைப் போட்டு விட்டுட்டு , ஹாலில் இருக்கிறீர் ? தேவையில்லாத லைட்டை ஓவ் பண்ணினால் கொஞ்சம் காசு மிச்சம் தானே ?" என்றான் சுந்தரேசன்." " வந்தவுடனே தொடங்கீட்டார் , கொஞ்ச நேரம் நிம்மதியா இருக்க விட மாட்டியளே ? " சரோஜாவின் குரல் உயர்ந்தது.
ஹாலுக்குள் நுழைந்தவன் " தமிழ் டீ.வீ வேணும் வேணும் எண்டு பிடிச்ச பிடீல நிண்டு எடுத்தீர் , இப்ப இங்கிலிஸ் புரோகிராம் பார்க்கிறீர் , நீரும் என்னவோ எப்படியெண்டாலும் இந்த மனுசன் உழைக்கிற காசை அழிச்சுப் போடணும் என்டு பந்தயம் பிடிச்ச மாதிரி நடக்கிறீர் " என்ற சுந்தரேசனை இடை மறிச்சு " இஞ்சை ஏதோ மற்ற வீடுகளில மனுசர் செய்யாததை , செய்த மாதிரி குதிக்கிறீர் ,அங்க வனஜாண்ட மனுசன் உம்மை விட குறைய உழைச்சுக்கொண்டு என்ன அன்பாப் பார்க்கிறார் வனஜாவை, எனக்குக் குடுத்து வைச்சது இவ்வளவு தான் " என்றாள் சரோஜா

"எதுக்கெடுத்தாலும் வனஜாவை உதாரணத்துக்கு எடுக்கிறீர் , என்ட பிரண்ட் ரமேஷிண்ட மனுசியைப் பாரும் கிழமையில ஆறுநாளும் வேலை செய்து அவனுக்கு எப்பிடி ஹெல்ப் பண்றா என்டு" இழுத்தான் சுந்தரேசன்

" இஞ்சை பாரும் சும்மா அது இது எண்டு என்னைப் போட்டு டிஸ்டேர்ப் பண்ணாதையும் , அப்பிடியெண்டா நீர் அப்பிடிப்பட்ட பொம்பிளையைப் பாத்துக் கட்டியிருக்கலாமே ? " திரும்பவும் உச்ச ஸ்தாயியில் சரோஜா

அவளை அப்படியே அசையாமல் பார்த்த சுந்தரேசன் பலமாகச் சிரித்தபடி சென்று கட்டிலில் விழுந்தான்.அண்ணாந்து கூரையைப் பார்த்தபடி இருந்தவன் மனதில் , தன்னுடைய வாழ்க்கையை எண்ணி வேதனை மிகுந்தது . அவன் அம்மாவுக்கு அவன் படும் பாடு தெரிந்தால் பாவம் இந்தத் தள்ளாத வயதில் தனியாக இருக்குமவள் மனம் என்ன பாடுபடும் என்று எண்ணும் போது அவன் கண்கள் கலங்கியது.

உடைகளை மாற்றிக் கொண்டு எழுந்து சென்று சாப்பிடுவதற்கு என்ன இருக்கிறது என்று பார்த்தான் , பின்பு "சரோஜா சாப்பிட என்ன இருக்கு" என்று கேட்டான்.

ஹாலிலிருந்து " நான் வனஜா வீட்ட சாப்பிட்டுட்டு வந்திட்டன் , நேத்தையான் சாப்பாடு பிரிட்ஜில இருக்கு , சாப்பிட வேண்டியது தானே அதுக்கும் நான் வரவேணுமே ? " மீண்டும் அலறல்

பேசாம இருந்ததைச் சாப்பிட்டு விட்டு போய் கண்களை மூடினான் , விழிகள் மூடியதே தவிர மனம் உறங்க இல்லை.அவனது மனதில் "பெண்களுக்குத் தாலி ஒரு வேலி" என்ற வாசகம் நினைவுக்கு வந்தது. எனது வாழ்வில் தாலி என்று நான் அவளுக்குக் கொடுத்த பந்தம் தந்த உறவு என்னை விலங்காய்ப் பிணைத்துவிட்டதே என்று எண்ணி வெதும்பி யபடியே கண்ணயர்ந்து விட்டான்.

அடுத்த நாள் ஆபிஸில் அமர்ந்து கொண்டிருந்தவனின் மனம் இருப்புக் கொள்ளவில்லை . அன்றொருநாள் அவனது நண்பன் பாலனுடன் பேசிக் கொண்டிருந்தபோது " மச்சான் அன்பு இல்லாத வாழ்வில் இருந்து கரைச்சல் படுறதை விட நாகரீகமாக வெள்ளைக்காரர் செய்யிற மாதிரி பேசாம சந்தோசமாப் பிரிஞ்சிடுறது எவ்வளவோ மேல் தெரியுமே " என்று அவன் கூறியது ஏனோ ஞாபகத்திற்கு வந்தது .

திடீரென்று ஏதோ எண்ணியதைப் போல எழுந்து எலிசபெத்தின் மேசைக்கு வந்தான் " லிஸ் ! ஷால் வீ கோ ஃபார் தட் ட்ரிங்க் டுடே ? " ( இன்றைக்கு பாருக்கு போவோமா ? ) என்று கேட்டான் " ஓ சுந்தர் ! ஹூ இஸ் எ பிரேவ் போய் டுடே ? " (யார் இன்று வீரமானவன் ?) என்று சிரித்தவள் " ஒஃ கோர்ஸ் ஐ வில் என்ஜாய் இட் " (ஆம் நான் அதை விரும்புகிறேன்) என்று கூறினாள்.

அப்போது நவம்பர் மாதமாகையால் 6 மணிக்கே இருட்டி விட்டது , சுந்தரேசனும் , எலிசபெத்தும் தம்மை மறந்து சிரித்துப் பேசிக் கொண்டே தேம்ஸ் நதிக்கு அருகே இருக்கும் பார் ஒன்றினுள் நுழைந்தார்கள் . மங்கலான வெளிச்சத்தில் அனைத்தும் ஒருவிதமான மயக்க நிலையில் காட்சியளித்தது.



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

சுந்தரேசன் இருவருக்கும் பியரை வாங்கிக் கொண்டு வந்ததும் இருவரும் ஒரு மூலையில் உள்ள வட்டமான மேசையில் அமர்ந்தனர். அடக்க மாட்டாதவனாக தன் மனதினுள் அடக்கி வைத்த வேதனையை அப்படியே கொட்டிவிட்டான் சுந்தரேசன். விழிகள் அசையாது கேட்டுக் கொண்டிருந்தாள் எலிசபெத் , அவன் ஒவ்வொரு முறையும் உணைர்ச்சிப் பிரவாகத்தோடு பேசும்போது அவளின் மெல்லிய புருவம் பல கோணங்களெடுத்து முகம் வேதனையால் சுருங்கி விரிந்தது.

"சே எங்கோ பிறந்தவளுக்கு இருக்கும் இரக்கம் என்னைக் கரம் பிடித்தவளுக்கு இல்லாமல் போய்
விட்டதே" என சுந்தரேசனின் மனம் இல்லாத இனிமைக்காக ஏங்கியது. " சுந்தர் ஐ ரியலி பீல் சொரி ஃபார் யூ , அஸ் எ ஹஸ்பண்ட் யூ ஆர் பீங் வொண்டர்புல் . இவ் ஐ வேர் யுயர் வைஃப் , ஐ வுட் ட்ரெசர் யூ " ( சுந்தர் நான் உனக்காக மிகவும் வருத்தப்படுகிறேன் , நீ கணவனாக ஆற்றும் கடமைகள் சிறப்பானவை , நான் உன் மனைவியாக இருந்திருந்தால் உன்னைப் போற்றியிருப்பேன்) என்றாள்
எலிசபெத்.

அப்போது மூன்று கிளாஸ் பியரை உள்ளே தள்ளியிருந்தான் , ஏதோ எண்ணத்தில் " லிஸ் , யூ லுக் எக்ஸ்ரீம்லி பியூட்டிபுல் டுடே " ( நீ இன்று மிகவும் அழகாக இருக்கிறாய்) என்று சொன்னவன் நாக்கை கடித்துக் கொண்டான்.

"இஃப் யூ ஹாட் அ சான்ஸ் டு சீ மீ பிஃபார் யூ மரீட் , வுட் யூ ஹாவ் மரீட் மீ " ( திருமணமாக முன்னால் என்னைப் பார்த்திருந்தால் என்னை
மணமுடித்திருப்பாயா?" தூக்கிப் போட்டாள் எலிசபெத் . ஒருகணம் தடுமாறிய சுந்தரேசன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டவனாக " வை நாட் ?" (நிச்சயமாக) என்றான்.

இருவரும் சிரித்துக் கொண்டார்கள் . எலிசபெத்தின் கண்கள் அவன் கண்களை அப்படியே பொறித்தாற் போல் பார்த்தன . கைக்கடியாரத்தைப் பார்த்தான் மணி பதினொன்றைக் காட்டியது " ஓ லிஸ் இட் இஸ் கெட்டிங் லேட் , லெட்ஸ் கோ" என்றவனைத் தொடர்ந்து எலிசபெத்தும் வெளியே வந்தாள் . போகும் வழியிலே தனது கணவனை விவாகரத்து பண்ணிய பின்பு , சுந்தரேசனைச் சந்திக்கும் வரை ஆண்கள் என்றாலே சுயநலவாதிகள் என்ற எண்ணத்திலே தான் இருந்ததாகவும் , சமீபகாலமாகத்தான் தனக்கு தனிமை கொடுக்கும் துன்பம் தாங்கொணாத ஒன்றாக இருப்பதாகவும் , எலிசபெத் சொல்லிக் கொண்டே வந்தாள். லண்டன் பிரிட்ஜ் ஸ்டேசனுக்குள் வந்ததும் இருவரும் வேறு வேறு பிளாட்பாரம் நோக்கிப் போக வேண்டி வந்ததால் , விடை சொல்லிக் கொள்ள ஒருவரை ஒருவர் நோக்கினார்கள் , அவர்களின் கண்கள் அகல மறுத்தன , எலிசபெத்தின் முகம் மெதுவாக அவனை நோக்கி வந்தது , அவள் அதரங்கள் அவன் அதரத்தில் பதியும் போது " சாரி எலிசபெத் , ப்ளீஸ் எக்ஸ்யூஸ் மீ , சீ யூ " என்று கூறிக்கொண்டே தனது பிளாட்பாரத்தை நோக்கி நடக்கத் துவங்கிய சுந்தரேசனை திகைத்தவளாய் பார்த்துக் கொண்டு நின்றாள் எலிசபெத்.

தள்ளாடியபடியே ட்ரெயினில் ஏறி உட்கார்ந்தவன் மனதில் " சே என்ன காரியம் செய்யத் துணிஞ்சேன் ?" என்று வெட்க உணர்வு தலை தூக்கியது . அப்போதுதான் அவனுக்கு தான் சரோஜாவின் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன் என்று தெரிந்தது . அவள் அறிவில்லாதவள் தான் , சோம்பேறிதான் ஆனாலும் என் மனைவி என்று அவன் மனம் கூறிக் கொண்டது.

வீட்டின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவன் திகைத்து விட்டான் ! ஆம் மேல் வீட்டுக்குச் செல்லும் படியில் கண்களில் கண்ணீர் வழிய இருந்த சரோஜா ஓடி வந்து அவனை அணைத்துக் கொண்டாள் . " நீர் வெளியில பிரண்ட்ஸோட போறதெண்டாச் சொல்லிப்போட்டுப் போயிருக்கலாமே ? நான் காணைல்லை எண்டு பயந்து கொண்டெல்லே இருந்தனான் " என்றவளை அணைத்தவாறே , அறைக்குள் அழைத்துச் சென்றவன்"என்ன சரோஜா ஏதாவது நடந்ததே , நீர் ஒரு நாளும் இல்லாத வழக்கமாய் நடக்கிறீர் ?" என்றவனைப் பார்த்து ,

தேம்பியவாறே " கஜனோட பிரண்ட் பிரகாஷைத் தெரியும் தானே , அவனோட நான் சிலவேளைஉம்மோட ஏதும் பிரச்சனை எண்டால் கதைக்கிறனான் , ஆனா அவன் ..." என்றவள் பேசமுடியாமல் தேம்பித் தேம்பி அழுது விட்டு பின் ஒரு மாதிரியாக " உனக்கு உண்ட புருசனோட சந்தோஷம் இல்லாட்ட நாங்கள் சந்தோசமா இருக்கிறதில பிழையில்லை எண்டு சொல்லிக் கையை பிடிச்சுப் போட்டான், நான் அவனை அடிச்சுப் போட்டு ஓடி வந்திட்டன்,ஏதோ உம்மோட பிரச்சனை எண்டால் அது எல்லாக் குடும்பத்திலையும் இருக்குத்தானே , அதுக்காக உம்மில அன்பில்லை எண்டு அர்த்தமே ?" என்று ஏக்கத்துடன் அவனைப் பார்த்தாள்.

மனதுக்குள் சிரித்த சுந்தரேசன் " சரி விடும் , இதுதான் எல்லாரையும் கண்டவுடன நம்பக்கூடாது எண்டு சொல்றனான் , பரவாயில்லை வாரும் படுப்பம் " என்று சொல்லிக் கொண்டு கட்டிலில் விழுந்தான் . சிறிது நேரத்தில் ஒரு மிருதுவான கை அவன் மேல் இழுத்துப் போர்வையை மூடி விடும் உணர்வு ஏற்பட்டது.


இன்று அவன் விழிகள் மூடும் போது மனமும் உறங்கியது , ஏனோ அந்த உறவெனும் விலங்கு கொடுத்த சுமை இதமாகத்தான் இருந்தது.





பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# சிந்தனைக்கு ஒரு துளி !



மனதின் வடிகால் சிந்தனை . சிந்தனை மட்டும் இல்லையானால் மனிதன் பல சமயங்களில் மனதின் உணர்ச்சிகளுக்கு வடிகால் இன்றி உணர்ச்சி வெள்ளப்பெருக்கினுள் மூழ்கி விடுவான். ஆனால் சிந்தனை ஒவ்வொரு சமயங்களிலும் வித்தியாசமான வடிவங்களில் வித்தியாசமான சூழல்களில் எழுவதால் அதன் அடிப்படைகளும் வித்தியாசமானவையாக இருக்கின்றன. சிந்தனைகளை தன்னை விசாரிக்கும் வலூக்கறிஞரசாக மாற்றும் வல்லமை கொண்டிருந்தோமேயானால் மனிதத்துவப் படிகளில் முதலாவதை எட்டிப்பிடித்தவர்களாகி விடுவோம். ஒன்றேயொன்றை நாமனைவரும் அறிவோம் , அதாவது மனதில் அலையாடும் அனைத்தையும் வார்த்தைகளில் நாம் வடிப்பது இல்லை , அதனால் தான் எமது முடிவுகளை மாற்றிக்கொள்ளும் சௌகரியம் எமக்குக் கிடைக்கிறது. என்றுமே எப்போதுமே எமது நினைவுகளைச் சுத்திகரிக்கும் மனபக்குவம் எம்மை வந்தடைய வேண்டும் . அந்த நிலை வரும்போது நிம்மதியும் கூடவே கைகோர்த்துக் கொண்டு வரும் .

சத்தி சக்திதாசன்

************************************************************************************************************************************
***********************

# கவிதைத்தூறல்

## குழந்தைக்கு வயது

என் குழந்தைக்கு வயது
இரண்டேதான் !
முன் நினவினில் கருவாய்
நிகழ்ந்தது சேயாய்
தன் தரத்தினில் தனியாய்
தவழ்ந்தது தமிழாய்
பண் இசைத்தது மொழியாய்
நிறைத்து உணர்வாய்
புண் ஆகிய நெஞ்சின் களிம்பாய்
புலர்ந்த காலைப் பொழுதாய்
விண் நிறைத்த வெண்முகிலாய்
விசைதரு தமிழுணர்வாய்
கண் காக்கும் இமையாய்
கவிவடிக்கும் நெஞ்சாய்
தென் திசையின் காற்றாய்
பெண் கழுத்தில் மணியாய்
பெரும்பரணி மொழியாய்
உன் கைகளில் தமிழ்ப்பூங்கா - ஆம்
உண்மையில் வயது இரண்டேதான்

சத்தி சக்திதாசன்

## புலர்ந்த புத்தாண்டு

தமிழர் மனங்களில் பூக்கும் புத்தாண்டு
தருவது என்றும் புத்துணர்வே

முடிந்தது எல்லாம் மறைந்தது என்று
முன்னால் இருப்பதை நோக்கிடுவோம்

இன்னல்கள் வாழ்வில் வருவது சகஜம்
இதயம் என்றும் தளர்ந்திட மாட்டோம்

சித்திரை மாத வெண்ணிலவு என்றும்
சிறப்பது எமது வருடப்பிறப்பால்

கடலது எழுந்து கரைத்த போதும்
கலங்கா இதயம் கொண்ட தமிழர்

நிகழ்வுகள் எமை நிறுத்தமுடியா
நிச்சயமான மனிதர் நாம்

புலர்ந்த இந்தப் புதுவருடம் தனில்
புதிதாய்ப் பலதும் புனைந்திடுவோம்

சத்தி சக்திதாசன்

## விழித்து விட்டேன்

விடிந்தும் கூட
விடியா உலகில் - நான்
விழித்து விட்டேன்

கண்ணின் முன்னே நாடகங்கள்
காட்சியாக்கும் மானிடர் தனைக்
கண்டு கொண்டதால் - நான்
விழித்து விட்டேன்

மண்ணின் மீதும் அவர்
பொன்னின் மீதும் ஆசை
பெருக்கி , மனிதம் தன்னை
மறந்தது கண்டே - நான்
விழித்து விட்டேன்

நீதியை விற்று
நியாயத்தைச் சுட்டு
நாளைய விற்று
நேற்றை வாங்கும் மூடர் தனை
நேரில் கண்டதால் - நான்
விழித்து விட்டேன்

சத்தி சக்திதசன்

0000000000000000000000000000000000000000000000000000000000



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# ஏதாவது எழுதலாமே !

ஏதாவது எழுதலாமே என்று உட்கார்ந்தேன் !

குழந்தைகளாக இருந்து பின் சிறுவர்களாக , இளைஞர்களாக , தற்போதைய நிலையிலிருக்கும் எமக்கு அன்றிருந்த அதே லட்சியங்கள் எத்தனை இன்றும் நிலைத்திருக்கின்றன ? மிகவும் அர்த்தபூர்வமான கேள்வி.

காலங்கள் மாறிக்கொண்டு போகும் போது நாமும் மாறிக் கொண்டேதான் போகிறோம் , எமது மனத்தின் உணர்ச்சிகள் , வாழ்க்கையின் தேவைகள் அந்தந்தக் காலத்திற்கேற்றவாறு அந்தந்த வயதுக்கேற்றவாறு மாறிக்கொண்டேதான் போகிறது.

இவற்றில் எவை காலத்தின் கட்டாயத்தினூடாக மாறியது , எவை சுயநலத்தின் காரணமாக நாமாக மாற்றிக் கொண்டது. அறிவு முதிர்ச்சியின்மை காரணமாக நடைமுறைக்கு ஒவ்வாதவைகளை இலட்சியமாகக் கொண்டிருந்து விட்டுப் பின் , வயது முதிர்ச்சியூடாக அனுபவம் எனும் பாடங்களின் வாயிலாக அடைந்த அறிவுமுதிர்ச்சியினால் உலக நியதிகளுக்கேற்ப எம்மை மாற்றிக் கொள்வது எந்தவகையிலாவது தவறாகக் கணிக்கப்படுமா ?

இந்தக் கேள்விகளை ஏன் கேட்கிறேன் என்று நீங்கள் குழம்புவது எனக்குப் புரிகிறது . கேள்விகளுக்குக் காரணம் இருக்கிறது.

பலவருடங்களாக புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களை எடுத்துக் கொள்வோம். தமது தாய்நாட்டுக்குப் பல எதிர்பார்ப்புக்களுடன் செல்கிறார்கள் . விடுமுறை முடிந்து வரும்போது அநேகம்பேர் , முன்பு இருந்தது போல் இல்லை . அங்கே இருந்த சந்தோசம் , நிம்மதி இப்போ இல்லை , நாங்கள் இருந்தபோது அப்பப்பா அது மகிழ்ச்சி நிறைந்த காலம் என்கிறோம்.

இப்படி மிகவும் அறுதியாக தற்காலத்தைப் பற்றி முடிவெடுக்கும் நாம் ஒன்றை மட்டும் மறந்து விடுகிறோம் , அதாவது நாம் மகிழ்ச்சி மிகுந்த காலம் என்று எமது மனதிலே கொண்டுள்ள அந்தத் தாய்நாட்டு நினைவுகளை கொண்டிருந்தபோது எமது வாழ்க்கையின் எதிர்பார்ப்புகள் வித்தியாசமனவை. எமது தேவைகள் முற்றிலும் வேறுபட்டவை . அப்போதைய அந்தக் காலகட்டத்தினிலே இருந்த சூழலுக்கும் இப்போதைய சூழலுக்கும் இருக்கும் வேறுபாடுகள் மிகையானவை . அந்தக் காலகட்டத்தை இப்போதையக் காலகட்டத்தோடு ஒப்பிட்டு நாடு மாறிவிட்டது என்ற காரணத்தினால் தான் நாங்கள் அதேபோன்ற உணர்வுகளைக் கொள்ளமுடியாதிருக்கிறது என்று எண்ணுவது தவறு.

காலத்தின் மாற்றங்களினால் நாடு மாறியிருப்பது ஓரளவிற்கு உண்மையாகவிருந்தாலும் அது மட்டுமே காரணமாக இருக்க முடியாது.

இதை ஏன் கூறவேண்டி இருக்கிறது என்றால் , எமது தாய்நாட்டுக்குத் திரும்பிப் போகபோகிறோம் என்று எண்ணும் பலர் அங்கே விடுமுறையில் சென்று விட்டு , அந்தச் சூழ்நிலைகள் தமக்கு ஒத்துவரவில்லை என்று கண்டுவிட்டு , ஒரு குற்ற உணர்வோடு வாழ்வது போன்ற ஒரு நிலைமையைச் சில இடங்களில் காணக்கூடியதாக உள்ளது.

தாய்நாட்டை விட்டு பலவருடங்கள் புலம்பெயர்ந்து வேறு ஒருநாட்டிலே இருக்கும் போது அந்த நாட்டுச் சூழ்நிலகளோடு எம்மைப் பிணைப்பது வழமையே , அதற்காக நாம் தாய்நாட்டை மறந்தவர்கள் என்றோ அன்றி ஏதோ தவறு புரிகிறோம் என்று எண்ணுவதோ தவறு என்பது எனது அபிப்பிராயம் . எமது தாய்நாட்டுப்பற்று நிச்சயமாக எமது மனங்களில் துளிர் விட்டுக் கொண்டுதானிருக்கிறது . எமது சகோதரர்களின் மீதான மனிதாபிமானம் மனங்களில் படிந்துதானிருக்கிறது.

புலம்பெயர் நாட்டுத் தமிழ்ப் பிரஜைகளாக வாழ்வது கூட தமிழுக்குச் செய்யும் தொண்டேயொழிய வேறில்லை . தமிழர்கள் தங்கள் கலாச்சாரம் வழியமர்ந்த எழுத்தாக்கங்களை தத்தமது புலம்பெயர் நாடுகளின் மொழிகளிலே படைப்பது கூட தமிழ்த் தொண்டுதான்.

காலமாற்றத்தோடு ஏற்படும் எதிர்பார்ப்புகளின் மாற்றங்களை அனுசரித்து எமது மனங்களில் ஏற்படும் மனநிலைத் தாக்கங்களை புரிந்து கொண்டு தான் வாழும் சூழலுடன் தன்னை , இணைத்துக் காணும் நிம்மதி ஒன்றேதான் ஒரு மனிதனுடன் கூட வரும் என்பதை மறந்து விடக்கூடாது .

சத்தி சக்திதாசன்

*************************************



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# சிரித்து வாழவேண்டும்



12 மணிக்கு சாப்பிட வேண்டிய மாத்தி ரையை 6 மணிக்கே விழுங்கிட்டேன் சார்

அப்புறம் ?

கடிகாரத்தின் முள்ளை 12 மணி என்று தி ருப்பி வைச்சுக்கிட்டேன்

*******************

என் கணவருக்குச் சில சமயங்களில் என்னை அடையாளம் தெரிய மாட்டேங்குதுடி

நிஜமாகவா ?

ஆமாம் ! என்னைப் பார்த்தாப் பயப்படமாட்டேங்கிறாரு

********************

டீக்கடையில உன்னை ஏன் அடிச்சாங்க ?

பொண்ணு பார்க்குற பழக்கத்தில பஜ்ஜி சாப்பிட்ட உடனே ஊருக்குப் போய் கடுதாசி போடுறேன்னு சொல்லீட்டேன்

***************************

தந்தை : ஆபிரகாம் லிங்கன் உன் வயதில் சொந்தமாக உழைத்து சம்பாதிதுக் கொண்டிருந்தார்.

மகன் : உங்கள் வயதில் அவர் அமேரிக்க நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார் தெரியுமோ ?

முதல்ராத்திரியில என் கணவர் பெரிய குண்டைத் தூக்கிப் போட்டிட்டாரடி

என்னடி சொன்னாரு … …

தனக்குச் சமைக்கத் தெரியாதென்னுட்டாரு.. ..

****************

கணவன் : ஊரெல்லாம் ஒரே காய்ச்சலா இருக்கு குடிக்கிறதுக்கு வெந்நீர் கொடு

மனைவி : நீங்க ஏன் வீணா பயந்து சாகிறீங்க அது மூளைக்காய்ச்சல் உங்களுக்கு வரவே வராது.

***************************

ஒருவர் : பேய்களை அடக்குவது எப்படின்னு ஒரு புத்தகம் எழுதிக்கிட்டிருந்தானே ! உங்க பையன் திருமணத்திற்குப் பின் என்ன செய்யுறான்?

மற்றவர் : பேய்களோட வாழ்வது எப்படின்னு புத்தகம் எழுதிக்கிட்டிருக்கான்.

**************************

நான் அடிக்கடி தூக்கத்திலெ உளர்றேன் சார்

என்ன தூக்கத்திலேயுமா ?

************************

நான் பிச்சை எடுக்கிற மாதிரி அடிக்கடி கனவு வருதே ஏன்?

சினிமாப் படம் எடுக்கப்போறீங்கன்னு அர்த்தம்

நன்றி : மரூபின் இணையத்தளம்

000000000000000000000000000



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# கண்ணதாசன் கார்னர்



இந்த இரண்டாவது ஆண்டு சிறப்பிதழில் கவிஞர் கண்ணதாசன் அவர்களின் ஒரு அருமையான கவிதை ஒன்றை எடுத்துப்பார்க்க விழைகின்றேன் . கவிஞரின் மீது நான் கொண்ட அபிமானம் அளவு கடந்தது. அவரைப் பற்றி அறிய எழுந்த ஆவலினால் நான் படித்த நூல்கள் பல . அவை எனக்குக் கொடுத்த செய்திகள் பல.
கவிஞரின் கனவு தனது கட்டுரைகள் , மற்றும் படைப்புக்களில் இருந்து எடுக்கும் பாடத்தினால் வருங்கால இளைஞர்கள் பயன் பெறவேண்டும் என்பதே. வாழ்க்கை முறையை மாற்றி சரியான மார்க்கத்தில் செல்ல அர்த்தமுள்ள இந்துமதம் ஒன்றே போதுமானது. அந்தப் படைப்புக்களில் பதிந்திருப்பது அனைத்தும் உண்மை அனுபவத்தின் நிழல்களே . வாழ்க்கையின் துன்பம் எனும் அந்தக் கொடூர வெய்யிலில் இருந்து இந்த நிழலில் இளைப்பாறும் போதே , நிழலின் உண்மை அர்த்தம் எமக்குப் புரிகிறது.
எங்கே கவிதை ஒன்று கீழே வருகிறது பார்ப்போமா !

## நினைக்கத் தெரிந்த மனமே .. ..

நினைவுகளே நினைவுகளே
நின்று விட மாட்டீரோ !
கனவுகளே கனவுகளே
கலைந்துசெல்ல மாட்டீரோ !
இரவுபகல் இப்படி நீர்
என்னை வதைப்பதனால்
உறவுகளை விட்டேநான்
ஓடத் துணிந்து விட்டேன் !
நிம்மதியாய்ச் சிலநேரம்
நீட்டிப் படுத்திருந்து
செம்மையுறும் கற்பனையில்
சிறகடிக்கப் பார்க்கின்றேன்
முன்னாள் கதைகளெல்லாம்
முகம் காட்டுகின்றனவே
இந்நாள் துயரமெல்லாம்
இணைந்துவரு கின்றனவே !
மனதைப் பிடித்திழுத்து
மயக்கத்தைச் சேர்த்தணைத்து
வாழுகின்ற தத்துவத்தை
வகையாகப் பாடுகின்றேன் !
என்னை மறுபடி நான்
ஏறெடுத்துப் பார்க்கையிலே
பின்னுமோர் துன்பப்
பெருங்கதைதான் மூளுதம்மா !
பட்டகடன் தீர்ப்பேனோ ?
பாதகரைப் பார்ப்பேனோ ?
பாமரர்க்கு மேடையிலே
பரிந்துரைக்கப் போவேனோ ?
கொட்டுகின்ற தேளையெல்லாம்
கும்பிட்டு நிற்பேனோ ?
கொல்லுகின்ற சூழ்நிலையைக்
குடித்து மறப்பேனோ ?
நுவலும் கவிதையிலோர்
நூல்புனைய எண்ணுகிறேன்
அவலக் கவிதையின்றி
அடுத்தொன்றும் தோன்றவில்லை!
கவலைக்குக் காரணமென்
கழுத்துவரை வந்ததின்றித்
தமிழில் எடுத்துரைக்கத்
தரமில்லை என்னசெய்வேன் ?
சொல்லி அழுதுவிட்டால்
துயரமெல்லாம் தீர்ந்துவிடும்!
சொல்லவொரு நண்பரில்லை
சொல்வதற்கும் வார்த்தையில்லை !
தனியே படுத்தழுது
தலையணையை நனைப்பதன்றி
இனியோர் பரிகாரம்
எவரும் உரைப்பதில்லை !
மாற்றமொன்று தேடுகிறேன்
வழியொன்றுங் காணவில்லை!
ஆற்றும்வழி தேடுகின்றேன்
ஆறவில்லை தேறவில்லை !
காற்றொன்றை இந்தக்
கட்டையிலே விட்டுவைத்த
கூற்றுவனைக் காணாமல்
குழப்பம் அகல்வதில்லை !

நண்பர்களே ! கவிதை நாயகனின் வார்த்தைகளைப் பார்த்தீர்களா ? தன் வாழ்க்கைப் பாதை போகும் வளைவுகளை அழகாய் கவிதை வரிகளிலே எடுத்தியம்பி தன் கலங்கிய நினைவுகளை கவிதையாய் நமக்கு தந்து விட்டார்.

ஒவ்வொருவருக்கும் ஒரு சமயத்தில் தம்முடைய நெஞ்சத்தில் ஓடும் சோக நதியின் வேகம் தாக்குப் பிடிக்க முடியாது இருக்கும் , அத்தகைய பொழுது ஒன்றிலே தனது வாழ்க்கைப் பாதையை அழகான தமிழிலே வினவுகிறார் கவியரசர்.

ஒவ்வொரு வரிகளும் அவரது மனதின் எண்ணக்கீற்றுக்களை அப்படியே அழகாக பிரித்துக் காட்டுகிறது. தான் வாழ்ந்து உணர்ந்த அந்த ஒரு நிமிட உணர்வுகளை கவிதை வரிகளாய் தீட்டி தமிழால் அலங்கரிக்கிறார் கண்ணதாசன்.

இன்றோ , நாளையோ என்றோ பறந்து விடப்போகுதெம் உயிர்.அதற்குள் நமது வாழ்வின் கோலங்களைப் பற்றி நாம் போடும் கணக்குகள் தான் எத்தனை ?

தன்னுடைய வாழ்விலே தான் சந்தித்த வேதனைகளை தேன் கூட்டிலிருந்து , தேனியிடம் கடிபட்டுக்கொண்டே எமக்குத் தேனெடுத்து தருவது போன்ற இக்கவியின் அருங்குணம் தான் என்னே !

தொகுப்பு : சத்தி சக்திதாசன்

நன்றி : கண்ணதாசன் கவிதைகள் (கவிதைக்காக)



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# சிறப்புச் சிறுகதை

## ஒருதரம் ஒரேதரம்



இத்தோட இரண்டாவது தடவை டாய்லெட்டுக்கு போயிட்டு வந்து விட்டான் கிஷோர் . மணியைப் பார்த்தான் சரியாக மாலை ஆறு மணிக்கு இன்னும் 5 நிமிடங்கள் தானிருந்தன . ஒருவாறு கஷ்டப்பட்டு 3 மாதங்களுக்கு முன்னால் தான் மணி பார்க்கக் கற்றுக் கொண்டான் . ஸ்கூலில் மணிபார்க்கச் சொல்லிக் கொடுத்து பார்க்கத் தெரிந்தும் , இரண்டு மூன்று நாட்களுக்கு அம்மாவிடம் சொல்லவேயில்லை.
கிளாஸ் டீச்சர் அவன் என்னவோ இரண்டு தடவைகள் சொல்லிக் கொடுத்ததும் பிடித்துக் கொண்டு விட்டான் என்று நன்றாகப் புகழ்ந்தாளெனினும் , அவனுக்கு தனது நண்பர்கள் , பீட்டர் , ஜேம்ஸ் இருவரிடம் பலமுறை சரியாக மணிபார்க்கத் தெரியும் என்று நிச்சயப்படுத்தப்படும் முன்னர் அம்மாவுக்குச் சொல்ல விருப்பமில்லை.

நடப்பது தெரியும் தானே , அம்மா ரொம்ப மகிழ்ச்சியாக அப்பாவிடம் ஓடிப்போய்ச் சொல்லுவாள் , அப்பாவும் " டேய் கிஷோர் இங்கே வா" என்று கத்தியதும் , தான் தயங்கித் தயங்கிப் போய் அவர் முகத்தைப் பார்க்க அஞ்சியவாறு நிலத்தைப் பார்த்தவாறு நிற்பான். " எங்கே மணியைப் பார்த்து சொல்லுடா" என்று கர்ஜிப்பார், தான் ஒருசமயம் பிழையாகச் சொல்லி விட்டாலோ " முட்டாள் பயலே ! சரியா மணி பார்க்கத் தெரியல்ல , அதுக்குள்ள இவள் வேற உன்னோட புகழ் பாடிக்கிட்டு " அர்ச்சனை மகா கும்பாபிஷேகம் போல நடக்கும் . எண்ணிப்பார்க்கவே அவன் உடம்பு நடுங்கியது.

அதேதான் நடந்தது . அம்மாவிடம் சொல்ல அப்பா கர்ஜனையுடன் பரிசோதிக்க , ஏதோ கடவுள் புண்ணியத்தில் சரியாகச் சொல்லி விட்டான் . அதுக்கும் சும்மா விட்டாரா என்ன ? " பக்கத்து வீட்டில இருக்கிற ஸ்டுவேர்ட்டைப் பார் அவனுக்கு நாலு வயதுதான் ஆகிறது , அவனுக்குத் தெரியிற அரைவாசி விஷயங்கள் , ஆறு வயதுக் கழுதை உனக்குத் தெரியாது " மீண்டும் கர்ஜனை . பரிதாபமாக அம்மாவைப் பார்த்தான் , அவள் கண்களில் கனிவோடு ஆறுதலாகப் பார்த்தாள் . அவள் என்ன செய்வாள் , வாயைத் திறந்தால் அவளுக்கு வாய் மூடாதபடி அர்ச்சனைதான்.

மறுபடியும் நினைவலைகளில் இருந்து விடுபட்ட கிஷோரின் கண்களில் ஒரு வித மருட்சியோடு , நெஞ்சத்தை திகில் கவ்விப் பிடித்துக் கொண்டிருந்தது . சரியாக மாலை 6 மணி 15 நிமிடத்திற்கு அப்பாவின் கார் வந்து உள்ளே நிற்கும் . அதற்கு முன்னால் தான் சிட்டிங் ரூமில் இருந்து விளையாடிய இடத்தை போய் பார்த்துக்கொண்டான் . அப்பாவின் கர்ஜனைக்குக் காரணமான பொருள் ஏதாவதை மறந்து போட்டிருப்பானோ என்று.

அவனது கண்களில் தனது நண்பன் பீட்டரை ஏற்றிக் கொண்டு செல்வதற்காக அவனது அப்பா காரில் வந்து ஸ்கூல் வாசலில் காத்திருக்கும் போது " டாட் " என்று கொண்டே பீட்டர் அவன் அப்பாவை நோக்கி ஓடுவதும், பீட்டரின் தந்தை அவனை அப்படியே அணைத்துக் கொள்வதும் மனக்கண்ணில் தெரிந்தது. அப்படிக்கூட அப்பா இருப்பார்களா ? அந்தச் சின்ன மனதில் ஏக்கம் வேரிட்டது.

சீ தான் அப்பக்கத்து வீட்டு நாலு வயது ஸ்டுவார்ட்டாக மாறக்கூடாதா ? அவனைத்தானே அப்பா புத்திசாலி என்று எண்ணுகிறார் . ஆறு வயதுச் சிறுவனின் முகத்தில் ஏமாற்றத்தின் ரேகை.

அம்மாவுக்கோ , அப்பா வந்தவுடன் சுடச்சுட சாப்பாடு தயாராக இருக்க வேண்டும் என்ற கவலை. இல்லாவிட்டால் சிங்கம் அவளையல்லவா கடித்துக் குதறி விட்டு விடும். மனதுக்குள் தான் வழமையாகப் போகும் அந்த பிள்ளையார் கோவிலில் இருக்கும் பிள்ளையாரை எண்ணி "
" பிள்ளையாரப்பா , அப்பா வருவதற்கிடையில் அம்மா சமையலை முடித்து விட வேண்டும் " என்று வேண்டிக் கொண்டான் . பிள்ளையாரைக் கேட்டால் எல்லாம் தருவார் என்று அம்மாதானே சொன்னாள் . அந்தப் பிஞ்சு உள்ளம் தன் அன்னையின் மீது விழும் வசைமாறியை தெய்வத்தின் துணை கொண்டு தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டது.



திரும்பவும் மணியைப் பார்த்துக் கொண்டான் கிஷோர். இன்னும் ஐந்து நிமிடங்கள் தானிருக்கின்றன நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது .

" கிஷோர் , அப்பா வரப் போறார் , நல்ல பையனாகப் போய் பாடப் புத்தகத்தை எடுத்து படி , இல்லாட்டி அப்பாவுக்கு கோபம் வந்து விடும்" என்றாள் அம்மா.

"சரி அம்மா" என்று கூறியபடி தனது ரூமிற்குள் சென்று புத்தகத்தை எடுத்துக் கொண்டு கதிரையில் அமர்ந்தான்.

பீட்டரும் , ஜேம்ஸும் பேசும்போது , ஏதோ கதை கேட்பது போல அவர்களது வாயைப் பார்த்துக் கொண்டிருப்பது அவனுக்கு ஞாபகம் வந்தது . " என்னுடைய டாடிக்கு எனக்கு கணக்கு சொல்லிக் கொடுப்பதுதான் பிடிக்கும் , மம்மி தான் இங்கிலீஷ் சொல்லிக் கொடுப்பா" என்று பீட்டர் சொல்ல " எனக்கு எல்லாமே மம்மி தான் சொல்லிக் கொடுப்பா , டாடி எனக்கு டின்னர் ரெடி பண்ணி வைப்பார் " என்று பதிலுக்கு ஜேம்ஸ் சொல்ல , அந்தச் சின்ன உள்ளத்தில் இப்படிக்கூட அப்பா,அம்மா சேர்ந்து அன்பாக இருப்பாங்களா ? என்ற அங்கலாய்ப்பு ஏற்படும்.



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

டேபிளில் இருந்த கடிகாரத்தைப் பார்த்தான் மணி மாலை 6.25ஐக் காட்டியது. அப்பா இனி எந்தச் சமயத்திலும் வந்து விடலாம். அவருக்கு நான் டைம் டேபிள்ஸ் படிப்பதுதான் பிடிக்கும் இன்றைக்கு 10வது டேபிளை படித்து முடித்து எப்படியாவது அப்பாவுக்குச் சொல்லிக் காட்டி விடவேண்டும் என்றெண்ணி , விறுவிறுப்பாக டைம் டேபிள்ஸ் சொல்லத் தொடங்கினான்.

மறுபடியும் அந்தச் சின்ன மனம் சிறிதாக அலை பாய்ந்தது . இம்முறை ஸ்கூல் ஸ்போர்ட்ஸ் மீட்டிங் நாள் அப்பா வரும்போது தான் தனது திறமையான ஓட்டப்போட்டியில் வெற்றியீட்டிக் காட்ட வேண்டும் என்ற ஆவலில் , லஞ்ச் இடைவேளைகளில் பீட்டர்,ஜேம்ஸ் இருவருடனும் ஒரே ஓட்டப் போட்டி தான்.

அம்மாவிடம் கேட்டே விட்டான் " டாடி , வருவாரா மம்மி , என்னோட ரேஸைப் பார்க்க ? "

" கேட்டுப் பார்க்கலாம்" நம்பிக்கையில்லாமல் தான் அம்மா சொன்னாள்.


அன்று இரவு தனது அறையில் தூங்க முடியாமல் இருக்கும் போது அப்பாவும் , அம்மாவும் பேசிக் கொண்டிருந்தது கேட்டது

" ஏங்க கிஷோர் ரொம்ப ஆசைப்படறான் , அவனோட ஸ்போர்ட்ஸ் டேக்கு வர முடியாதா ? " தயங்கியவாறே அம்மா

" சும்மா போடி பைத்தியக்காரி , ஏதோ எல்லாத்திலையும் முதல் பரிசை தட்டிட்டு போகப்போற மாதிரி இல்ல நீ சொல்றாய் , மததவங்களை இவன் கலைச்சுக்கிட்டு போறதைப் பாக்க நான் வேற லீவு எடுக்கணுமா ?" ஏளனமாக அப்பா.

அம்மாவின் ஆயுதமான மௌனம் அவளைக் கவ்விக் கொண்டது.

கிஷோருக்கு "டாடி நான் நல்ல பிரக்டீஸ் பண்ணி இருக்கேன் , நான்தான் வின் பண்ணுவேன்" என்று கத்த வேண்டும் போல இருந்தது . அதன் விளைவுகளைப் பற்றி எண்ணும் முன் தூக்கம் தழுவிக் கொண்டது.
நினைவுகளிலிருந்து மீண்டும் திரும்பியவன் "என்ன 7 மணிக்கு 5 நிமிடங்கள் இருக்கிறது டாடியைக் காணவில்லை " மனதுக்குள் எண்ணிக் கொண்டே அம்மாவிடம் வந்தான் "என்னடா டாடியை இன்னும் காணவில்லை ? " அம்மாவும் முகத்தைச் சுருக்கியவாறு சொன்னாள்.



அம்மாவின் மடிமீது உட்கார்ந்தவன் கண்ணயர்ந்து விட்டான் . காலிங் பெல் அடிக்கும் சத்தம் கேட்டு விழித்தவன் , அம்மாவின் பின்னால் வாசற்கதவுக்குச் சென்றான். அம்மா கதவைத் திறந்தாள்.

அங்கே !
ஒரு ஆண்போலிஸும் , பெண்போலீஸும் நின்று கொண்டிருந்தார்கள் . தொப்பிகளைக் கழட்டியவாறே " உள்ளே வரலாமா ? " என்று கேட்டவர்களை அம்மா உள்ளே அழைத்து சென்று சிட்டிங் ரூமில் உட்காரச் சொன்னாள், அம்மாவின் சட்டை நுனியைப் பிடித்தவாறு கிஷோர் ,திகிலுடன் போலீஸாரை பார்த்தவாறு நின்றான். இதுதான் முதற்தடவை போலிஸ் அவனுடைய வீட்டிற்குள் வந்தது. இதுவரை போலிஸுக்கும் அவனுக்குமுள்ள உறவு " தொந்தரவு செஞ்சீன்னா , போலீஸ் பிடிச்சுக் கொண்டு போயிடும்" என்று அவன் டாடி மிரட்டுவதோடு முடிந்திருந்தது.

அவன் இளைய இதயத்தில் , ஒரு சமயம் டாடிதான் என்னைப் பிடித்துக் கொண்டு போக அனுப்பியிருப்பாரோ? என்ற எண்ணம் இழையோடியது.

" உங்களது கணவர் ஒரு ஆக்ஸிடெண்டில் , அகப்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் ஹாஸ்பிட்டலில் சேர்க்கப்பட்டிருக்கிறார் , நீங்கள் உடனடியாக வருவது நல்லது" என்றாள் அந்தப் பெண்பொலீஸ் மிகவும் பரிதாபமாக அம்மாவைப் பார்த்தபடி.

" ஐயோ , தெய்வமே ! " அம்மாவின் கண்களில் கண்ணீர் ஆறாக ஓடியது அப்படியே கிஷோரை அணைத்துக் கொண்டாள்.

ஏனென்று புரியாமலே கிஷோரின் கண்களிலும் கண்ணீர் துளித்தது.

அவசரம் அவசரமாக போலிஸ் காரில் இருவரும் ஹாஸ்பிடலுக்குச் சென்றார்கள் , அம்மாவின் சட்டை நுனியைப் பற்றியபடியே கிஷோர் அம்மாவைப் பின் தொடர்ந்தான்.

அங்கே ஒரு கட்டிலில் தலை முழுவதும் கட்டுக் காயங்களுடன் , கைகளில் பிளாஸ்டிக் டியூப்புகள் பொருத்தியபடி அவன் அப்பா.கர்ஜிக்கும் சிங்கம் இப்போ அடிபட்ட சிங்கமாக அனுங்கிக் கொண்டிருந்தது. மம்மி , டாடியை அணைத்துக் கொண்டே அழுதாள்.
" கிஷோர் எங்கே ? அவனைப் பார்க்கணும்" அனுங்கினார் அப்பா , கிஷோர் அம்மாவின் பின்னால் இருந்து விடுபட்டு டாடியின் முன்னே வந்தான் , அருகே வரும்படி கண்ணால் சைகை காட்டினார், சென்றான் அப்படியே அவனை இறுக அணைத்துக்கொண்டு " கிஷோர் ஐ லவ் யூ " என்று சொல்லி முத்தமிட்டார் , இவ்வளவு நாட்களும் கிடைக்காத ஒரு பாதுகாப்பான சுகத்தை கிஷோர் அந்த ஒருகணம் அனுபவித்தான்.
அவரின் கைகள் தளர்ந்தன , கண்மூடியது டாக்டர்கள் கையை விரித்தனர் , அம்மா கிஷோரை அணைத்தபடியே கதறினாள் . கிஷோரின் மனதில் அந்த ஒரு நிமிட இன்பத்தை உடைத்துக் கொண்டு கண்களில் கண்ணீர் வந்தது
" பிள்ளையாரே ! ஒருதரம் , ஒரேதரம் அப்பாவின் அணைப்பிற்காக ஏங்கினேன் ஆனால் அதுதான் கடைசி அணைப்பென்றால் அது வேண்டாமே " பிஞ்சு மனம், வெம்பியது.

ஆக்கம் : சத்தி சக்திதாசன்



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# இந்த இதழில் மலர்ந்தவர்

திரு கிருஷ்ணா வைகுந்தவாசன்



இந்த உலகில் அவதரிப்பவர்களில் தங்களின் லட்சியத்திற்காக , கொண்ட கொள்கைவழி நின்று தமது சொந்த லாபங்களைக் கருத்திற் கொள்ளாது வாழும் மனிதர்கள் சிலரே.
ஈழத்தில் தமிழ்த்தாய் பெற்ற மைந்தர்களில் ஒருவரான திரு.கிருஷ்ணா வைகுந்தவாசன் அவர்களும் அப்படியான ஒரு மனிதரே ! ஒரு எண்ணத்தை நினைவிற் கொண்டதும் , அதிலிருந்து பின்வாங்காது கிடைத்த நேரம் முழுவதையும் சமுதாயத்திற்கு பயன்படும் வகையில் செலவிட்டு தமிழ் மக்களின் மனதினிலே ஒரு நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்டவர் , ஐயா வைகுந்தவாசன் அவர்கள். இலண்டனிலே நடக்கும் தமிழ் வைபவங்கள் , அரசியற் கூட்டங்கள் , விழாக்கள் என ஒன்றையுமே தவற விடாது சமூகமளிப்பவர் ஐயா அவர்கள் . மிகவும் மென்மையான சுபாவம் , தெளிவான சிந்தனை அனைத்தையும் ஒருங்கே பெற்ற ஐ.நா புகழ் வைகுந்தவாசன் ஐயா அவர்கள் , கடந்த 03.01.2005 அன்று லண்டனில் காலமானார்.

ஐயாவுடன் பழகிய அனுபவத்தாலும் , ஈழத்தமிழர்கள் போராட்டத்தில் ஐயா ஆற்றிய அளப்பரிய பங்கினாலும் , எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் மீது அவர் வைத்திருந்த அளவு கடந்த அபிமானத்தினாலும் இந்த இதழில் தமிழ்ப்பூங்காவில் மலர்கின்றார்.

ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள காரைநகர் பகுதியிலுள்ள கோவளம் தனில் 15/04/1920 ம் ஆண்டு பிறந்து ,அளவெட்டியை வசிப்பிடமாக கொண்டவர் தான் திரு கிருஷ்ணா வைகுந்தவாசன்.

இவரின் வாழ்வின் வெற்றிக்கும் , ஆற்றிய பணிகளின் வெற்றிக்கும் பின்னனியாக அமைந்தவர் காரைநகர் மண்ணின் மகள் மகேஸ்வரி எனும் ஐயாவின் துணைவியாரே என்று சொன்னால் மிகையாகாது.

இவரது பணிகள் லண்டனில் மட்டுமே நடைபெற்ற ஒன்றல்ல . ஈழத்திலே வாழ்ந்த காலங்களிலே பொதுப்பணிகளிலே தம்மை முற்றாக இணைத்துக் கொண்டவர் திரு வைகுந்தவாசன் ஐயா அவர்கள்.

இளமைக்காலங்களில் ஒரு தீவிர இடதுசாரி தொழிற்சங்கவாதியாக , இடையறாது பணியாற்றினார். இடதுசாரி தொழிற்சங்கங்களை கட்டியெழுப்ப ஈழத்தி லே 1940களில் இருந்து அயராது பாடுபட்டார்.

1947 - 1950 வரை சுமார் 25000 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை பொது அரச சேவை சங்கத்தின் பொதுச் செயலாளராகவும் , ஒரு இலட்சம் உறுப்பினர்கள் அடங்கிய கூட்டுத் தொழிற்சங்க சம்மேளனத்தின் இணைக் காரியதரிசி ஆகவும் பணியாற்றி ஈழத்திலே தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார்.

ஈழத்திலே சிங்கள இடதுசாரித் தலைவர்களுடன் தோளோடு தோள் கொடுத்து , இனப்பாகுபாடின்றி வர்க்கப்பேதத்தை உடைக்கப் பாடுபட்டவர். 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தின் பின் தொழிற்சங்கங்களில் காணப்பட்ட இனத்துவேஷத்தைக் கண்டு மனம் வெதும்பி , தொழிற்சங்கத்திலிருந்து வெளியேறி , தமிழின மேம்பாட்டிற்காக உழைக்கத் தொடங்கியவர். அது மட்டுமின்றி 1950 தொடக்கம் 1953ம் ஆண்டு வரை கொழும்பில் "Peoples Voice" மக்கள் குரல் எனும் ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராகவிருந்து துணிவாக பல செய்திகளை எடுத்தியம்பினார்.

1960 இல் ஐயா சட்டத்துறையில் நுழைந்து இலங்கை நீதி மன்றத்தில் பணிபுரிந்தார். இலங்கைத் தமிழர் பிரச்சனைகளையும் , இலங்கை அரசின் இன ஒடுக்குமுறையின் காரணமாகவும் 1971ம் ஆண்டு ஈழத்தை விட்டு வெளியேறி சாம்பியா நாட்டில் பணியாற்றியவர்.

1971 இலிருந்து 1977 வரை சாம்பியா நாட்டில் நீதிமன்ற பதிவாளராகவும் , பின்பு நீதிபதியாகவும் கடமையாற்றினார்.

1977ம் ஆண்டு லண்டனுக்கு வந்து சட்டத்தரணியாகத் தொழில்புரியும் வேளையிலே ஈழத்தமிழர் பிரச்சனைகளுக்காக குரல் கொடுத்தார்.

அனைத்துக்குமே சிகரம் வைத்தாற்போல 1978ம் ஆண்டு தனியொரு மனிதனாக ஐ.நா சபையினிலே நுழைந்து ஈழத்தமிழர்களின் பிரதிநிதியாக குரல்கொடுத்து , ஈழத்தமிழர் பிரச்சனை உலகளாவிய ரீதியில் வெளிக்கொணரப்படுவதற்கு காரணமானார்.

1982ல் தமிழீழம் எனும் ஒரு அரசை ஈழத்திற்கு வெளியே நிறுவப்போவதாக அறிவித்து உலக நாடுகளை உற்றுநோக்கப் பண்ணினார்.

லண்டனிலே "தமிழர் ஒருங்கிணைப்புக் குழு" எனும் அமைப்பைத் தனியொரு மனிதனாக தோற்றுவித்து , லாபநட்டங்களை கணக்கிட்டுக் கொண்டிருந்த மற்றைய அமைப்புகளின் முன்னால் துணிந்து செயலாற்றி , பல முனைகளிலும் ஈழத் தமி ழர்
பிரச்சனைகளுக்கு பிரசாரக் குழலாக இருந்தார். இந்திராகாந்து உட்பட உலகத் தலைவர்கள் பலரையும் சந்தித்து , ஈழத்தமிழ் பிரச்சனையை முதன்மைப்படுத்தினார்.

ஐயா வைகுந்தவாசன் இந்த உலகை விட்டு மறைந்திருக்கலாம் , ஆனால் தமிழ் மக்கள் மனங்களை விட்டு மறையவில்லை.

சத்தி சக்திதாசனின் ஆக்கம்



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# சிறப்புக் கட்டுரை

## டாக்டர் கே.ஜே.யேசுதாஸ்

கேரளாவில் பிறந்து தமிழ் இசை உலகில் தனக்கென நிரந்தரமான இடத்தைப் பிடித்து , தமிழ் நெஞ்சங்களில் நீங்காமல் நிறைந்திருக்கும் இந்தக் காந்தக் குரலோனைப் பற்றி இந்தச் சிறப்புக் கட்டுரையில் சீர்தூக்கிப் பார்ப்பது எனக்குக் கிடைத்த பாக்கியம் என்றே கருதுகிறேன். தமிழ் எனும் அந்த இனிய மொழியை சங்கீதம் எனும் தேன் தடவி கானமழையாய்ப் பொழிவதில் இவர் வல்லுனர்



தமிழ்த் திரையுலகம் கொடுத்த எத்தனையோ சிறந்த பாடகர்கள் மத்தியில் , கர்நாடக சங்கீதத்தில் கானமழை பொழியும் ஆற்றல் நிறைந்தவர் டாக்டர் கே.ஜே.யேசுதாஸ் அவர்கள். சங்கீதத் திறமையினால் எண்ணிக்கையற்ற பல விருதுகளைப் பெற்றவர் இவர். சுனாமி அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட ஈழ மக்களுக்காக கொழும்பில் சமீபத்தில் கலைநிகழ்ச்சி நடத்தி நிதியுதவி அளித்த பெருந்தகை.

கேரளாவின் பழம் பெரும் துறைமுக நகரான கொச்சின் கோட்டையில் 1940ம் ஆண்டு , ஜனவரி மாதம் 10ம் திகதி ஆகஸ்டின் ஜோசப் பாகவதர் , அலிக்குட்டி ஜோசேப் ஆகியோரின் தலைமகனாக அவதரித்தார் யேசுதாஸ் அவர்கள். தந்தையார் கர்நாடக சங்கீதத்தில் சிறந்தோங்கியதுடன் , மேடை நாடக நடிகராகவும் விளங்கினார். யேசுதாஸ் அவர்களுக்கு கர்நாடக சங்கீதத்தின் அடிப்படைகளை 5 வயது முதற்கொண்டே அவரது தந்தையார் கற்றுக் கொடுத்தார். சங்கீத உலகிலே ஒரு அற்புதம் நிலைகொள்ளத் தொடங்கியதும் அப்போதே. அவரின் சங்கீதத் திறமையைக் கண்டு குடும்பம் எவ்வளவு கஷ்ட நிலையிலிருந்தாலும் , இவருக்கு முறையாக சங்கீதம் கற்பிக்க தந்தையார் எண்ணினார்.



தனது முதலாவது குரு தனது தந்தையே எனத் தெரிவிக்கிறார் இந்தக் கலைஞர். மற்றைய மானசீகக் குருவாக ஸ்ரீ நாராயணன் அவர்களை குறிப்பிடுகிறார். குறிப்பாக ஸ்ரீ நாராயணன் அவர்களின் "ஒரே இனம் , ஒரே மதம் , ஒன்றே இறைவன்" எனும் தத்துவம்

இளம்பிராயம் முதல் தன்னை ஈர்த்தது என்கிறார் யேசுதாஸ். முகமது ராபி , சேம்பை வைத்தியநாத பாகவதர் , பாலமுரளிக் கிருஷ்ணா ஆகியோரின் சங்கீதம் தன் மனதினில் நிலையற இடம்பெற்றுள்ளது என்று கூறுகிறார்.

இவர் தமிழ்த் திரைப்பட உலகில் காலடி பதிக்க உதவியவர் தமிழக இயக்குனர் திரு கே.பாலச்சந்தராகும் . அவரது " பொம்மை" எனும் திரைப்படத்தில் , "நீயும் பொம்மை நானும் பொம்மை நினைத்துப் பார்த்தால் எல்லாம் பொம்மை " எனும் திரைப்படப்பாடல் மூலமே கே.ஜே.யேசுதாஸ் தமிழ் நெஞ்சங்களுக்கு அறிமுகமானார். சமீபத்தில் இவரது தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றை நான் பார்த்தேன் . அப்போது தனது இந்த முதலாவது தமிழ்ப்படப் பாடலைப்பற்றி மிகவும் சுவாரஸ்யமாகக் கலந்துரையாடினார்.

தனக்கு இந்தப் படத்தில் சந்தர்ப்பம் கிடைத்து , கே.பாலச்சந்தர் அவர்கள் செட்டுக்கு வரச் சொன்னதும் ஏதோ ஒரு பெரிய இசைக்குழுவின் மத்தியில் பாடப்போவதாக எண்ணினாராம் , ஆனால் அங்கே இரண்டே , இரண்டு வாத்தியக் கலைஞர்களும்,டைரக்டர் பாலச்சந்தரும் மட்டுமே இருந்தார்களாம். மேற்கூறிய பாடலை எண்ணிப்பார்த்தால் அதில் மிகக்குறைந்த வாத்தியங்களே இருப்பது உங்களுக்கு ஞாபகம் வரலாம்.இதை மிகவும் உணர்ச்சிபூர்வமாக எடுத்துரைத்தார்.

பலமொழிகளிலும் பாடும் வல்லமை படைத்தவர் திரு,யேசுதாஸ். இதுவரை 16 தடவைகள் கேரள மாநிலத்தின் சிறந்த பின்னனிப் பாடகருக்கான விருதைப் பெற்றுள்ளார்.

1989ம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலக்கழகத்தினால் கௌரவ டாக்டர் பட்டம் அளித்துக் கௌரவிக்கப் பட்டார்.

இவர் மகிழ்ச்சிகரமான 30 ஆண்டுகால திருமண பந்தத்தில் திளைத்துள்ளார் . இவரது மனைவி பிரபா . திரைப்படங்களில் தோன்றாத காரணம் தனது மனைவியின் வேண்டுகோளே என்று கூறுகிறார்.

இவருக்கு வினோத் , விஜய் , விஷால் என மூன்று ஆண்பிள்ளைகள் உண்டு . இவர்களில் இரண்டாவது மகனான விஜய் தந்தைவழி மிகச்சிறந்த பாடகராக வருவதற்குரிய சகல அம்சங்களும் பொருந்தியவராக இருக்கிறார். ஏற்கனவே திரைப்படங்களில் பின்னனிப் பாடல்கள் பாடியுள்ளார்.

அடிப்படையில் கிறீஸ்தவ மதத்தைதச் சார்ந்தவராக இருந்தாலும் , எம்மதமும் சம்மதமே என நடைமுறையில் நிரூபித்தவர் யேசுதாஸ். சங்கீதத்தையே முதன்மையாகக் கொண்டு தன் வாழ்நாள் முழுவதும் இசைக்காக அர்ப்பணித்து வாழ்ந்து வரும் ஒரு உன்னதக் கலைஞர் டாக்டர் யேசுதாஸ் அவர்கள்.

அவசரமாக ஓடிக்கொண்டிருக்கும் உலகத்திலே மனிதநேயம் மிகுந்த கலைஞர்களின் பங்களிப்பு உலகில் சமாதானம் எனும் வெண்புறாவை உயர்த்திப் பிடிக்க உதவும் வல்லமை கொண்டது. இந்த உயரிய கலஞரின் நினைவுகளில் சங்கமிப்பது மனதுக்கு மிகப்பெரும் இதமளிக்கிறது.

ஆக்கம் : சத்தி சக்திதாசன்



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# வைரமுத்துவின் வண்ணப்பூங்கா



பத்மஸ்ரீ வைரமுத்து அவர்களின் வண்ணப்பூங்காவில் ஆண்டுமலராக என்ன மலர் மலரப் போகிறது ? கவிஞர் வரைந்த கட்டுரைகளிலே எனது மனதைக் கவர்ந்த ஒரு கட்டுரைத் தொகுப்பு " இதனால் சகலமானவர்களுக்கும் " .
இவை மிகவும் எளிமையாக வரையப்பட்ட யதார்த்தக் கட்டுரைகளாகும் .
கவிஞர் கவிதைகளிலே உணர்ச்சிக்கு , மொழி கலந்து விருந்தளிப்பது போல , கட்டுரையிலே அனுபவம் எனும் அழகான பாடத்திற்கு தமிழெனும் மொழி சேர்த்து எமது மனங்களை ஆழமாகத் தொட்டு விடுகிறார்.
அந்த வரிசையிலே நான் மேலே குறிப்பிட்ட அந்த கட்டுரைத் தொகுப்பிலிருந்து இந்த இரண்டாவது ஆண்டு மலரின் சிறப்பாக ஒரு கட்டுரையை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். கருத்துகளைக் கவனியுங்கள் அவை தமிழ் எனும் அமுதோடு விளையாடும் அழகை ரசியுங்கள் !

## மலர்களோடு பேசுங்கள்

எனக்கொரு சந்தேகம் .
உலகத்திலேயே மலர்களைப் புரிந்து கொள்ளாத தேசம் நம் தேசம்தானோ ?
மலர்களை, தாவரங்களின் எச்சம் என்று தப்பாகப் புரிந்து கொண்டோமோ ?
ஒரு பூ தன் நிறங்களால் தன்னை விளம்பரப்படுத்துகிறது.
தன் வாசனையால் தன்னைப் பிரச்சாரம் செய்கிறது.
பூமி சேமித்து வைத்த சின்னச் சின்ன ரகசியமாய் அது செடி கொடிகளில் அவிழ்கிறது.
ஆனால் பூக்களுக்கு வண்டுகள் தரும் மரியாதையை வாழும் மனிதர்கள் தருவதேயில்லை.
பூஜை - மணமேடை - மனைவி - மரணம் இவைகளோடு தவிர மனிதன் மலர்கள் பற்றித் தனியாகச் சிந்திப்பதில்லை.
வேப்பம்பூவை ரசமாகவும் - செம்பருத்தியை மருந்தாகவும் - வாழைப்பூவை வடையாகவும் பார்த்துப் பழகிவிட்ட நமக்கு எதிலும் லௌகீகத்தைத் தவிர இன்னொரு பார்வை இல்லாமல் போய்விட்டது.
இனிவரும் நூற்றாண்டுகளில் பூக்களில் பெட்ரோல் வடிந்தாலொழியப் பூக்களை மனிதன் நோக்கவே மாட்டான்.
பெண் வயசுக்கு வந்ததைக்கூட புஷ்பவதியானாள் என்று மங்கள வழக்காய்ச் சொல்லத் தெரிந்த நாம் மரஞ்செடி கொடிகள் புஷ்பவதியாகும் போது மஞ்சள் நீராட்டு விழா நடத்துகிறோமா ?
பூக்கள் நம் வாழ்வில் சம்பந்தப்பட்ட அளவுக்கு பூக்களின் வாழ்வில் நாம் சம்பந்தப்படவில்லை.
அடர்ந்த ஆலைப்புகையினால் தாஜ்மகாலின் கன்னம் கறுத்துவிட்ட மாதிரி நமது வாழ்க்கைப் பரப்பில் தங்கம் விளைந்த பிரதேசங்கள் தரிசுகளாகி வருகின்றன.
தலையணையின் கத்தத்திலிருந்து ஒருவீட்டின் சுகாதாரத்தைக் கண்டு பிடித்துவிட முடியும்.
மலர்களை மதிப்பதிலிருந்து ஒரு நாட்டின் நாகரீகத்தைக் கண்டு பிடித்துவிட முடியும்.
அப்படியானால் நமக்கிருப்பது முற்றாத நாகரீகம் தான் என்ற முடிவுக்கு வரவேண்டியவனாயிருக்கிறேன்.
ஒவ்வொரு பூவும் இந்தப் பூமியின் நகல்.
ஒவ்வொரு பூவும் சந்தோஷத்தின் திடவடிவம்.
ஒரு பூவை சற்று நேரம் உற்றுப்பார்த்தால் என் மனிதப்பிறப்பு மறந்துவிடுகிறது.

"மனமே !
அந்த மடல் மேல் படு .
அந்த வெல்வெட் பரப்பில் விளையாடு.
பூவின் தலைவழி குதித்து மகரந்தத்தண்டில் இறங்கி உள்ளிருக்கும் தேனில் மூழ்கித்திளை.
எவ்வளவு நேரம் உன்னை மறக்கிறாயோ அவ்வளவு நேரம் உன் ஆயுள் நீளும்."
பூவைப் பார்க்கும் போதெல்லாம் இப்படித்தான் புலம்பத் தோன்றுகிறது.
இந்த மலர்கள் மனிதன் பறப்பதற்கு தேவதைகள் விட்டு விட்டுப் போன சிறகுகள்.
ஆனால் அந்தச் சிறகுகளை மனிதர்கள் பறிப்பது பறப்பதற்கல்ல.
வைத்தியனுக்கு அது மருந்து.
வண்டுக்கு அது உண்டிச்சாலை.
பக்தனுக்கு அது காணிக்கை.
வியாபாரிக்கு அது சரக்கு.

" வியாபாரிகளே ! வியாபாரிகளே !
ரோஜாக்கள் விற்று
எதை வாங்குவீர் ?
ரோஜாக்களை விட உயர்ந்ததாய் ! "

என்று ஒரு கவிஞன் பாரசீகத்தில்; அழுதது என் கன்னத்தை நனைக்கிறது
இங்கே மலர் என்பது பெரும்பாலும் கடவுளோடு சம்பந்தப்பட்டிருக்கிறது.
இல்லையேல் காமத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறது.
இரண்டையும் விட மோசமாய் தலைவர்களின் பிறந்தநாளுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது.
இங்கே ஆணுக்குக் காமம் தொடங்கும் போதுதான் பூ அவனது வாழ்வுக்குள் வருகிறது.
பூ எனபது அவனுக்கு புணர்ச்சியின் குறியீடாக ஆகிவிடுகிறது.
அரவிந்தம் - அசோகம் - மா - முல்லை - நீல என்னும் ஐவகைப் பூக்களோடு மன்மதன் ஆஜராகும் போது காமத்துக்குள் மலர்கள் காணாமல் போய்விடுகின்றன.
ஒருபக்தன் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குகிறபோது பூக்கள் பக்திக்குள் புதைந்துவிடுகின்றன.
சில தலைவர்களுக்குச் சூட்டப்படுகிறபோது மாலையிலுள்ள மலர்கள் கண்ணீரை உதிர்க்கின்றன. சில மலர்கள் கண்களையே உதிர்த்துவிடுகின்றன.
சடலங்களில் சாத்தப்படுகிறபோது அந்த மலர்களும் சேர்ந்து மரித்துக் கிடப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது.



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

பெண்களால் சூடப்படும்போது மட்டும் பூக்களுக்கு இன்னும் உயிர் இருப்பதாகவே உணரமுடிகிறது.
ஆனால் தங்களைவிடப் பூக்களுக்கு விளம்பரம் வந்துவிடக்கூடாது என்று பெண்கள் எல்லோரும் பின்புறமே அணிகிறார்கள்.
இந்த மரபுகளில் எதையுமே நான் மறுதலிக்கப் போவதில்லை .
ஆனால், ஒரு பூவின் அனுபவம் என்பது அதன் லௌகீகப் பயன்பாட்டிலேயே முடிந்து விடுவதில்லை.
மலர் எனபது விலங்கிலிருந்து மனிதனை வித்தியாசப்படுத்துகிற சங்கதி எனபது ஏன் இன்னும் விளக்கப்படவில்லை ?
மனிதா !
பூ என்பது உன் உயிர் பார்க்கும் கண்ணாடி என்பது ஏன் இன்னும் உணர்த்தப்படவில்லை?
ஒரு பூ என்பது மனசை மலர்த்துகிறது என்பதும் புத்தர் தோற்றுப்போன இடத்தில் கூட ஒரு பூ வெற்றி பெறமுடியும் என்பதும் ஏன் இன்னும் புரிந்து கொள்ளப்படவில்லை ?
மலர்களைப் பேணுகிற மனிதன் மனதினைப் பேணுகிறான்.
ஆனால் மலர்களைப் பேணுதல் என்பது நம் சடங்குகளோடு சம்பந்தப்பட்டதல்ல.
பூக்களை உயிரோடு தரிசியுங்கள்.
கொடிகளில் குலுங்கும் பூக்களைக் குடும்பத்தோடு குசலம் விசாரியுங்கள்.
பூவே ! நீ போனவாரம் எங்கே இருந்தாய் என்று புன்னகையோடு கேளுங்கள்.
பூக்களோடு சிலமணி நேரமாவது சிநேகம் பாராட்டுங்கள்.
சில்லு சில்லாகிக் கிடக்கும் வாழ்க்கையைச் சேகரிக்கவே நேரமில்லையே.. .. இதில் பூக்களோடு உரையாடலா .. ..? போடா பைத்தியக்காரா என்று பரிகசிக்காதீர்கள்.
இருள் போன பிறகு தான் உதிப்பதாய் உத்தேசம் என்று சூரியன் சும்மாயிருந்தால் பகலுக்கு ஏது முகவரி ?
சுற்றும் பூமி சுற்றிக் கொண்டேதான் இருக்கும்.பற்றும் தீ பற்றிக் கொண்டேதான் இருக்கும்.
வழிநடைப் பயணம் கஷ்டம்தான்.
வாழ்க்கையின் நாவில் அவ்வப்போது தேன் தடவுங்கள்.
மலர்களைப் பேணுங்கள்.
மலரோடு வாழுங்கள்.
இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால் -
அடுத்த கிரகங்களில் ஆராய்ச்சியில் இறங்கி விட்டோமே , பூமியில் எல்லாம் பார்த்தாகி விட்டதா ?
இன்னும் பார்க்கப்படாத பூக்கள் உதிர்ந்து கொண்டேதான் இருக்கின்றன !

****************

எனதருமை நண்பர்களே !

கவிஞர் வைரமுத்து அவர்கள் கட்டுரையில் கவிதை நயத்தைக் கலந்து யதார்த்தம் எனும் உண்மைக் கருத்தை எமக்கு உகந்த வகையில் அள்ளித் தெளித்திருகிறார்.

மேலோட்டமாக பார்க்கும் போது என்ன கவிஞர் மலர்களுடன் பேசு என்று கூறுகிறாரே ! என நீங்கள் குழம்பலாம் .

கற்பனை , இயற்கையோடு சம்பாஷணை இவையெல்லாம் ஒரு கவிஞனின் உளிகளாகும் . இவையன்றி அழகிய கவி எனும் சிற்பத்தைச் செதுக்க முடியாது. ஆனால் கவிஞர் வைரமுத்துவின் உன்னதம் என்னவென்றால் எமது சாதாரண வாழ்க்கையில் நாம் எதனை இழந்து நிற்கிறோமோ அதை இனிமையாக எமக்கு ஞாபகமூட்டுவதுதான்.

ஆமாம் இந்த அவசரமான வாழ்க்கையில் நாம் ரசிக்க வேண்டிய , பார்க்க வேண்டிய எத்தனையோ இயற்கை இன்பங்கள் இருக்க நாம் அடுத்த கிரகங்களில் என்ன இருக்கிறது என்ற அநாவசியத்தில் இறங்கியிருக்கிறோம்.

இல்லாததைத் தேடி இருப்பதை இழந்து விடாதீர்கள் என கவிநயத்தோடு எம்மை நிஜத்தில் ஆழ்த்துகிறார் ஆனால் அதில் நாம் மூழ்குவதோ தமிழ் எனும் தேனருவியிலே !

****************************

# பார்க்க ! கேட்க ! பேச !




தீயதைப் பார்க்காதே ! தீயதைக் கேட்காதே ! தீயதைப் பேசாதே மூன்று புத்திஜீவிக் குரங்குகள் எமக்குச் சொல்லும் உபதேசம் . இவற்றின் பின்னால் இருக்கும் வாழ்க்கைத் தத்துவத்தைப் பற்றி எம்மில் எத்தனை பேர் யதார்த்தமாகச் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறோம் . எமது முன்னோர்கள் கூறிய அறிவுரைகளை , பத்திரிகைத் தாளால் சுற்றி , பீரோவின் மேல் வைத்து விட்டு எட்ட நின்று , பார்த்துப் பிரமிக்கும் மனோநிலையிலேயே இந்த அறிவுரைகளையும் நாம் பார்க்கிறோம் என்பது எனது அபிப்பிராயம்.

எமக்கு பார்க்க , கேட்க , அவையிரண்டையும் வைத்துப் பேசக் கூடிய வல்லமை இருக்கிறது . ஆனால் அவையின் உபயோகத்தினால் ,மற்றவர்களை இன்புறச் செய்கிறோமா ? இல்லை வேதனையடையச் செய்கிறோமா ? இது எம்மை நாமே கேட்க வேண்டிய கேள்வி . என்ன இவன் ஏதோ தத்துவ ஞானி போல பேச வந்து விட்டானே என்று நீங்கள் எண்ணலாம் . இல்லை நண்பர்களே ! சில சமயங்களில் சில எளிமையான கேள்விகள் எழும்போது அதற்குப் பாரிய சிந்தனைகளை உற்பத்தி செய்யக்கூடிய வல்லமை இருக்கிறது . ஒரு பெரிய நதியின் ஆரம்பம் ஒரு சிறு ஊற்று என்பதைப் போல . உண்மைகள் பேசப் படத்தான் வேண்டும் அது சில உள்ளங்களை வருத்தினாலும் கூட , ஆனால் தீர விசாரிக்காத உண்மைகள் என்றுமே பொய்கள் தான் ! ஏனெனில் எம் கண்களே எம்மை ஏமாற்ற வல்லன .



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# வெங்கடேஷின் மலர்வனம்



நண்பர் வெங்கடேஷ் எளிமையாக , யாவரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் ஆய்வுக் கட்டுரைகள் வடைப்பதில் வல்லவர். சமீபத்தில் நடந்து முடிந்த சர்வதேசப் பெண்கள் தினம் பற்றி யாவரும் அறிந்து இருப்பீர்கள் . அதற்கு ஏதுவாக நண்பர் வெங்கடேஷின் 24 வது நேசமுடன் இதழில் வெளிவந்த ஒரு பெண்கள் பத்திரிகைகள் சம்மந்தமான ஒரு பார்வையை இங்கே வைக்கிறேன் . இத்தகைய ஆற்றல் வாய்ந்த ஆய்வு எழுத்தாளர்கள் எம்மத்தியில் திகழ்வது , தமிழ் எழுத்துத் துறைக்கு ஓர் பலமான அடிப்படையைக் கொடுக்கிறது . நண்பர் வெங்கடேஷ் அவர்களின் எழுத்தாற்றலில் மூழ்க இதோ அவரது கட்டுரை !

வாங்கி வந்த வரம்
=================

எங்கள் வீட்டுக்கு பக்கத்தில் உள்ள நூலகத்தில் இருந்து நிறைய பத்திரிகைகள் வருகின்றன. அதில் முக்கியமானவை பெண்கள் பத்திரிகைகள். மங்கையர் மலர், பெண்ணே நீ, தங்க மங்கை, ராணி, தேவி, சினேகிதி, குமுதம் சிநேகிதி, லேடீஸ் ஸ்பெஷல், அவள் விகடன், கோகுலம் கதிர் என்று வரிசையாகப் பல பத்திரிகைகள். இதில்லாமல் ஆங்கிலப் பெண்கள் பத்திரிகைகள் நிறைய வருகின்றன.

பத்திரிகை வாசிப்பவர்களில் பெண்களே அதிகம் என்ற கண்டுபிடிப்பின் தொடர்ச்சியாகத்தான், இந்தப் பெண்கள் பத்திரிகை வளர்ச்சி ஏற்பட்டிருக்கவேண்டும். இன்றைய தேதியில், மங்கையர் மலரும் அவள் விகடனும்தான் இந்த ரேஸில் முதலில் இருப்பதாகச் சொல்கிறார்கள். மங்கையர் மலர் ஆசிரியராக இருந்த மஞ்சுளா ரமேஷுக்கு ஊருக்கு ஊர் வாசகிகள், ரசிகைகள் கூட்டம் அதிகம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இன்று அந்த இடத்தில் ரேவதி சங்கரன் வந்திருக்கிறார். இந்த வாரக் கல்கியில், ரேவதி சங்கரனின் புகைப்படத்தை வெளியிட்டு, மங்கையர் மலரின் புதிய ஆசிரியராக பொறுப்பேற்றுள்ள விவரத்தை நன்றாக விளம்பரப்படுத்தியுள்ளார்கள். மங்கையர் மலருக்கு உள்ள பிராண்ட் வேல்யூவின் தொடர்ச்சியாகவே இதைப் பார்க்கிறேன்.எல்லாப் பெண்கள் பத்திரிகையும் நான் படிக்கிறேன். பல்சுவை இதழ்களின் உள்ளடக்கத்தை எப்படி வரையறை செய்துவிடமுடியுமோ அதே போல், பெண்கள் பத்திரிகையின் உள்ளடக்கத்தையும் வரையறை செய்துவிட முடியும்.

1. பெண் சாதனையாளர்கள், வெற்றிக் கதைகள் - பேட்டி, கட்டுரை.

2. பெண்கள் தங்கள் துயரங்களைப் பகிர்ந்துகொள்ளும் / ஆலோசனை கோரும் பகுதி
3. மருத்துவ, சட்ட, அந்தரங்க ஆலோசனைகள் கோரும் பகுதி
4. சுயமுன்னேற்றக் கட்டுரைகள்
5. பொதுவான விஷயங்கள் - அழகுக் குறிப்புகள், சமையல் குறிப்புகள், ஜோதிடம், ஆன்மிகம்.தொடர் கதைகள்,
6. சிறுகதைகள், கவிதைகள்.

விஷயங்கள் இதுதான். ஆனால், அதை வழங்கும் விதங்களில்தான் வித்தியாசம். உதாரணமாக, மங்கையர் மலரிடம் ஒருவிதமான அடங்கிய தொனி உண்டு. எந்த கட்டுரையானாலும் எதையும் உரத்துப் பேசாது. கட்டுரைகளை முடிக்கும் இடத்தில் கூட பஞ்ச் லைன் வைக்கமாட்டார்கள். மற்றொரு தனித்துவம், அதன் துணுக்குகள். மங்கையர் மலர் வந்தவுடன், என் வீட்டில், இந்த கட்டங்கட்டப்பட்ட துணுக்குகளைத்தான் முதலில் படிக்கிறார்கள். பெரும்பாலும் வீட்டுக்கு உபயோகமான குறிப்புகள் அவை. பின்னர், கடைசி பக்கங்களில் உள்ள வரன், பெண் தேடும் வரி விளம்பரங்கள். குமுதம் சிநேகிதி எல்லாவற்றையும் உரத்துப் பேசுகிறது. அந்தப் பத்திரிகையின் பக்கங்களில் உள்ள லேஅவுட்டும் வண்ணங்களுமே இந்தச் சத்தத்தைப் பிரதிபலிக்கும்.

இதுநடுவே, அவள் விகடன், ஒரு அழகுப் பெட்டகமாக உருவெடுத்திருக்கிறது. உணர்வு ரீதியாக, பல பெண்களுக்கு, இந்த இதழ் மனதுக்கு நெருக்கமாக இருப்பதைக் காண்கிறேன். இது ஒரு வகை ரசாயனம். மிகக் கவனத்தோடு செய்கிறார்கள்.

ராணியும் தேவியும் பத்தாம் வகுப்பு படித்துவிட்டு, வீட்டில் முடங்கிப் போன பெண்களைக் குறிவைத்து நடத்தப்படுவன. மருந்துக்கும் ஒரு அடுக்கு மேலான கட்டுரை ஒன்றும் அதில் இடம்பெற்றுவிடாது.

லேடீஸ் ஸ்பெஷல், தங்க மங்கை இரண்டும் ஒருவிதமான நிறைவின்மையோடே இருக்கின்றன. இரண்டிலும் சில அம்சங்கள் குறைவாகவே இருக்கின்றன. அந்த அளவுக்கு ரசிக்க முடியவில்லை.

பெண்ணே நீ, வேறொரு பாணியைப் பின்பற்றுகிறது. நகர்புற, கிராமப்புற ஏழைப் பெண்களை பிரதிப்லிப்பதையே இந்தப் பத்திரிகை செய்கிறது. கூடவே, அரசியல் ரீதியான தலையங்கங்கள் இடம்பெறுவது இந்தப் பத்திரிகையில்தான்.

அறிவுஜீவி வட்டாரங்களில் இந்தப் பத்திரிகைகள் மேல் வைக்கப்படும் விமர்சனங்களில் சில

1. இவையெல்லாம் இன்டெலெக்சுவலாக எங்கேஜ் செய்வதில்லை.
2. பெண்களின் அடிப்படையாகச் சொல்லப்படும், திருமணம், கருத்தரிப்பு, குடும்பம் பற்றி எந்த மாற்றுக் கருத்தையும் முன்வைப்பதில்லை.
3. பெண்களின் கலகக் குரலை இவை பிரதிபலிப்பதில்லை.
4. மேலும், குடும்ப அலகைப் பேணுவதிலும், ஆணுக்குத் "துணை"யாக இருப்பதையும் இவை பல ஆண்டுகளாக - பழமையை - பாதுகாக்கவே முனைகின்றன, கேள்வி கேட்க முனைவதில்லை.
5. பெண்களுக்கான சுயம் என்ற ஒன்றை இவை காணத் தவறுகின்றன.

என்னுடைய 21 வயதில், இதையேதான் நானும் சொல்லிக்கொண்டிருந்தேன். இப்பத்திரிகைகள் எல்லாம் வாசிக்கவே தகுதியற்றவை என்று கருதிய காலங்களும் உண்டு. புரட்சிகரமாக ஒரு வாழ்வை அமைத்துக்கொள்ளப் போகிறேன் என்ற நம்பிக்கையில் கூறியவை அவை.

இன்று யோசிக்கும்போது, கருத்து கருத்தாகவும், வாழ்க்கை வேறாகவும் இருப்பதைக் காண்கிறேன். நாம் எப்படி இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறோமோ அப்படித்தான் இருக்கிறது. குடும்பம் என்ற அலகை என்னால் உடைத்துக்கொள்ள முடியவில்லை. கருத்தரிப்பு, குழந்தைகளைப் பாதுகாக்கும் பொறுப்புகளை என் மனைவியின் மேல்தான் சுமத்தியிருக்கிறேன். பணம் சம்பாதிப்பது ஆணின் கடமை என்ற பழைய கருத்தாக்கத்தோடு, நான் வேலைக்குப் போக, என் மனைவியை வீட்டுக்குக் காவலாகவும்தான் வைத்திருக்கிறேன்.



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

பலர், வேறு விதமான வாழ்வை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாங்கி வந்த வரம் அது என்றே நினைத்துக்கொள்வேன். அவர்களால், மேலே சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் வாழ்வைப் பொருத்திக்கொள்ள முடிந்திருக்கிறது.

நான் எனக்குக் கொடுக்கப்பட்ட வரத்தோடு வாழ்கிறேன். அதில் மங்கையர் மலர், அவள் விகடன் எல்லாவற்றுக்கும் இடம் உண்டு.

நன்றி : நேசமுடன்

*******************************************


# துருவநட்சத்திரம்

சத்தி சக்திதாசன்

துருவநட்சத்திரம் துருவிப் பார்க்க முனைவது மண்ணுலகில் மறையும் மனிதத்துவத்தின் மகிமை . மனிதத்துவத்தை எதைக் கொண்டு எடை போடுகிறோம் ? சிந்தியுங்கள் சிலவேளைகளில் சித்திரங்கள் வரையப்படலாம்.

## மனிதத்துவத்தின் எடை

சத்தி சக்திதாசன்



மதுக்கடையிலே தாளை வீசும்
மனிதன் அவனின்
மனதினிலே ஊற்றோடும்
மனிதத்துவத்தின் விலை
மாறுமோ ?

களித்தாட காசை இறைக்கும்
கடற்கரை விடுமுறை
கண்ட மனிதன்
கண்டிருப்பனோ ஏழையின்
கண்ணீர் ஆற்றை !

உழைத்தும் முழுநேர
உணவைக்காணா
உழவுத் தோழனவன்
உள்ளத்தில் இன்று
ஊஞ்சலாடும் மனிதத்துவத்தின்
உண்மை என்ன ?

காமப்பசி தணிக்க
கரையும் பணத்தைக்
கணக்கிலெடுக்கா மனிதர்
கடைசிவரை உணர்வரோ
கல்லுடைக்கும் தோழன்
கைகளின் தழும்பை !


தொழிலை மறந்து
தொலைத்த எதிர்காலம் தனை
தோன்றாக் கனவின்
தோற்றமாய்க் கொண்ட
தோற்ற மனிதர் அறிவாரோ
தோழன் தினமும்
தோள்களில் சுமக்கும் பளுவை !

வயிற்றில் பசியுடன்
வாழ்வில் துயரத்தை
வரவாய்க் கொண்ட ஏழை
வசந்தம் காணும் மகிழ்வை
வருவித்துத் தருவாரோ
வாழ்வில் ஜெயித்தோர் ?

காந்தியின் போதனை அறியார்
கருத்திற் கொள்ளார் புத்தனின்
கருணை வேதம்
கர்த்தரின் அன்புக்கு
கடுகும் இல்லை அர்த்தம் உலகில்
கண்பரோ இவர் மனிதத்தின்
கடைசி வெற்றி ?

ஊதாரித்தனம் உண்டு இவரிடம்
உள்ளம் முழுவதும் கள்ளம்
ஊசலாடும் பேராசை
உண்டாமோ மனிதநேயம்
உறுதியாய்த் தெரியும்
உருப்பட மாட்டார் !

நியாயத்தராசில் என்ன எடை
நீதிக்குச் சொல்வீரோ ?
நேற்றைய வெற்றிகள்
நிகழ்ந்தது சுயநல பலத்தால்
நிச்சயம் சொல்லுவேன் இங்கே
நிலைக்கவில்ல மனிதத்தின் வெற்றியே!



மனிதத்துவத்தின் எடை
மனிதநேயத் தராசில்
மனிதர்களால் நிறுக்கப்படும்வரை
மாறாது உலகின் அனர்த்தங்கள் !


***********





பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

## உங்களுக்காக விஸ்வநாதன்




இந்த தமிழ்ப்பூங்காவின் நான்காவது இதழுடன் , நம்மோடு இணைந்தவர் இந்த இரண்டு வருடப் பயணத்தில் கூடக் கைகோர்த்து வந்ததை எண்ணிப் பெருமிதமடைகிறேன்.
நண்பர்களை அடைவது பாக்கியமென்றால் , இலக்கிய ஆற்றல் மிகுந்த சிந்தனைச் சிற்பிகளை நண்பராக அடைவது மாபெரும் பாக்கியமென்பேன். இந்த நல்ல படைப்பாளியின் ஆக்கத்தைப் படித்து ரசித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு இவரைப்பற்றி நான் கூறத் தேவையில்லை. இந்த நாடகம் பூர்த்தியானது , இவரின் மேலும் பல ஆக்கங்கள் இடம்பெறும் எனபதை மிகவும் மகிழ்விடன் தெரிவிக்கிறேன் .

# பொன்மேனி

(வரலாற்று நாடகம்)

ஆக்கம் : திரு விஸ்வநாதன் கண்டராதித்தன்

இந்த நாடகத்தில் பங்கேற்கும் பாத்திரங்கள்




1. இராஜராஜன் (சக்கரவர்த்தி)
2. மும்முடிச்சோழ பிரம்மராயன் (தளபதி)
3. பாராக்கிரம சோழ மூவேந்த வேளார் ( அமைச்சர்)
4. திருமழபாடி பட்டர் வெங்கடவன் மழுவாடி
5. விற்காவுடையார் (கோவில் நிர்வாக அதிகாரி)
6. சிவகுமார தசபுரியன் (கண்டராதித்த சதுர்வேதி மங்கலத்து அவைத் தலைவர்)
7. அமலன் உத்தம சோழன் (ஊராளும் நிர்வாக அதிகாரி)
8. தர்மப் பிரியன் (கணக்கர்)
9. காரி அரையன் (கோவில் பணியாள்/ஒற்றன்)
10. பறை கொட்டுவோன்
11. பூங்கொடி (பொன்மேனியின் தோழி)
12. பொன்மேனி (திருமழபாடி பட்டரின் மகள்/தளபதியின் காதலி)



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

## காட்சி - 5

இடம் : திருமழ்பாடி கோவில்
நேரம் : காலை நேரம்

பாத்திரங்கள்

தளபதி பிரம்மராயன்
சக்கரவர்த்தி இராஜராஜன்
வாரியத் தலைவர்கள்
வாரியப் பெருமக்கள்
பொன்மேனி
பூங்கொடி
மக்கள் கூட்டம்

[ மக்கள் சக்கரவர்த்திகளைப் பார்க்க ஆவலோடு காத்திருக்கின்றனர். தங்களுடைய குறைகளை ஓலைகளில் எழுதி அவைகளை எல்லோரும் கைகளில் வைத்திருக்கின்றனர்.மக்களோடு மக்களாகப் பொன்மேனியும் போங்கொடியும் இருக்கின்றனர். குதிரைகள் குளம்பொலி , மக்கள் கசமுச சப்தம் ]

குரல் : குறை தீர்க்க வருகின்ற மாமன்னர் .. ..
மக்கள் : வாழ்க ! வாழ்க !!
குரல் : சோழர் குலச் சக்கரவர்த்தி .. .. ..
மக்கள் : வாழ்க ! வாழ்க !!
தளபதி : பொதுமக்களே ! எல்லோரும் அமைதி காக்க வேண்டுகிறேன். வெள்ளப் பாதிப்பால் பெரும் அவதிக்குள்ளாகியிருக்கும் மக்களைக் காணும் பொருட்டும் , அவர்களின் குறைகளை அறிந்து தீர்க்கும் பொருட்டும் நமது சக்கரவர்த்திகள் உங்கள் ஊருக்கு வருகை தந்திருக்கிறார்.. .. .. எல்லோரும் தங்கள் குறைகளடங்கிய ஓலைகளை வரிசையாகக் கொண்டு வந்து அமைச்சரிடம் கொடுக்கலாம்.
[மக்கள் கசமுச சப்தம்]

பூங்கொடி : ஏய் பொன்மேனி .. .. திட்டம் நிறைவேறாதுபோல் இருக்கிறதே .. .. ஓலைகளைத் தளபதி வாங்குவார் என்று நினைத்தேன். ஆனால் அவர் பேசிவிட்டுப் போய்விட்டார்.. ஆனால் அமைச்சரல்லவா வாங்கிக் கொண்டிருக்கிறார்.. ம் .. .. இப்போ என்ன செய்வது ?
பொன்மேனி : ஆமாம் .. ம் .. (யோசனைக்குப் பின்) இருந்தாலும் அவர் பக்கத்தில் தானே தளபதி நின்று கொண்டிருக்கிறார் ? .. எப்படியாவது வரிசையில் நின்று கொடுத்துவிடடி .. .. ..
பூங்கொடி : ம் .. ஹூம் .. (பெருமூச்சு) தூண்டில்காரனுக்கு மிதப்பின்பேல் தான் கண் என்பது போல உனக்கு உன் காரியம் தான் பெரிது .. ஓலையை நீ எப்படியாவது தளபதியிடம் சேர்த்து விடத்துடிக்கிறாய் .. ஆனால் அதில் உள்ள சிரமம் உனக்கு எங்கே புரியப் போகிறது .
பொன்மேனி : (உற்சாகத்துடன்) ஏய் பூங்கொடி .. .. இங்கே பாரேன் .. .. தளபதி மேடையிலிருந்து இறங்கி வடக்குப்புறமாக நடந்து வருகிறார்.. .. யாரையோ அவர் தேடுவது மாதிரித் தெரியவில்லை .. ? ம் ..
பூங்கொடி : அடிகிறுக்கு .. கிறுக்கு .. அவர் வேறுயாரையவது தேடினாலும் உன்னைத் தேடுகிறார் என்று எப்படி எடுத்துக் கொள்வது ? சக்கரவர்த்திகளை அருகில் வைத்துக் கொண்டே இந்த மகாராணியைத் தளபதி வலை போட்டுத் தேடுவாராக்கும் .. ..
பொன்மேனி : ஏய் .. என்னிடம் வம்பளந்து கொண்டு நேரத்தைக் கடத்தி விடாதே .. நமது கலிங்குவாரியத் தலைவரிடம் ஏதோ தனியாகப் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் திரும்பவும் சக்கரவர்த்திகள் அருகில் செல்வதற்குள் இப்படியே நீயும் வடக்குப் புறமாகச் சென்று கொடுத்து விட்டு வந்து விடடி... .. ம் .. சீக்கிரம் ..
பூங்கொடி : (மெல்லிய குரலில்) ஏய் .. நீ நிற்பதைப் பார்த்துவிட்டார் போலிருக்கிறது .. இங்கே பார் .. நம்மையே பார்த்துக்கொண்டு, கலிங்கு வாரியத்தலைவரிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்.. .. ஓலை என் கையில் இருப்பதையும் பார்த்து விட்டார். ஐயோ .. அவரே கிளம்பி நம்மை நோக்கி வந்து கொண்டு இருக்கிறாரடி .. ..
பொன்மேனி : (பூங்கொடி பின்னால் ஒளிந்து கொண்டு) அய்யய்யோ .. .. நம்பிடமே வருகிறார் .. இப்போது என்ன செய்வது ?
பூங்கொடி : ச்சீ .. .. என் தோளை விடுடி ..
தளபதி : (கனைத்துக் கொண்டு சத்தமாக ) என்ன ? பெண்களெல்லாம் தனியாக வரிசையில் நின்று சக்கரவர்த்திகளிடம் ஓலையைக் கொடுக்கலாமே !



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

பூங்கொடி : இல்லை , ஆமாம் .. .. இது தளபதியாரே .. வணக்கம் .. பொன்மேனி ஓலை ..
பொன்மேனி : (கிசுகிசுத்து) உளறாமல் சொல்லடி .. ஏய் ..
பூங்கொடி : இது ஓலை .. உங்களிடம் தர .. சக்கரவர்த்திகள் ..
தளபதி : (சமாளித்துக்கொண்டு) ம் .. புரிகிறது .. (சத்தமாக) நானே ஓலையைச் சக்கரவர்த்திகளிடம் சேர்த்துவிடுகிறேன். பாவம் .. பெண்கள் .. நீங்கள் வீட்டிற்குச் செல்லுங்கள், கூட்டத்தில் எவ்வளவு நேரம் நிற்பீர்கள் .. ? நானே இதற்கு ஒரு நல்ல முடிவாக எடுத்து நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் வீட்டிற்குச் செல்லலாம் .. பாவம் .. நீங்கள் பெண்பிள்ளைகள் ..

[தளபதி சென்றதும் ]

பொன்மேனி : அப்பாடா .. ஒரு வழியாக ஓலை சேர வேண்டியவர் கையில் சேர்ந்து விட்டது . .. ஏய் .. பூங்கொடி ! நீ .. என்ன சமயத்தில் உளறிக்கொட்டி எல்லோர் மத்தியிலும் காரியத்தைக் கெடுத்துவிடுவாய் போல இருக்கிறது .. நீயும் உன் முழியும் .. ..
பூங்கொடி : சரி .. .. சரி .. .. தொணதொணக்காதே ! போகலாம் .. ..
பொன்மேனி : (கெஞ்சலாக) பூங்கொடி .. ..
பூங்கொடி : ம் ..
பொன்மேனி : எனக்கொரு சந்தேகம் ..
பூங்கொடி: (சலிப்பும் கிண்டலுமாக) என்னடியம்மா இன்னும் சந்தேகம் ? ஓலையைத்தான் கொடுத்து விட்டோம் .. அப்புறம் என்ன ?
பொன்மேனி : நான் அவருக்கு எழுதின ஓலை என்று தெரியாமல் சக்கரவர்த்திகளிடம் கொடுக்க வேண்டிய ஓலை என்று கருதி அவரிடம் சேர்த்து விட்டால் என்னடி செய்வது ?
பூங்கொடி : (தலையிலடித்துக் கொண்டு) ம் .. ஐய்யோ .. உன் சந்தேகத்தைத் தீர்க்க யாராலும் முடியாது. அவருக்கு எழுதப்பட்ட ஓலை என்பதை அவர் நன்றாகப் புரிந்து கொண்டுதான் சமாளித்துக் கொண்டு "க்கும் .. க்கும் .. .. " என்று ஜாடையாகக் கனைத்தாரே நீ கவனிக்கவில்லையா ?
பொன்மேனி : (அப்பாவித்தனமாக) ம்ஹீம் .. நான் கவனிக்கவில்லை
பூங்கொடி : அதையெல்லாம் நீ எங்கே கவனித்திருக்கப் போகிறாய் ? நீ அவர் கண்களையல்லவா கவனித்துக் கொண்டிருந்தாய் ..
பொன்மேனி : ச்சீ .. போடி .. அவர் கண்களைப் பார்த்தபின் வேறுபக்கம் என் கண்கள் அசைய மறுக்கின்றன ..
பூங்கொடி : போதும் .. போதும் .. உன் தலைவர் புராணத்தை ஆரம்பித்து விடாதே .. இனிமேல் என்னால் தாங்க முடியாது .. சீக்கிரம் புறப்படு .. ..

( காட்சி முடிவு )

*****************************************************


## காதல் மன்னன் காலமானார்



தமிழகத்தின் திரையுலகில் கொடிகட்டிப் பறந்தவர்களில் ஒருவரான , காதல் மன்னன் என அழைக்கப்பட்ட திரு.ஜெமினி கணேசன் அவர்கள் கடந்த 22.03.20005 , அதிகால 01.15 மணியளவில் தனது 84 வது வயதில் சென்னையில் காலமானார். 1020ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் திகதி பிறந்த இவரது இயற்பெயர் ராமஸ்வாமி கணேஷ் .


மூன்று பெண்களை மணந்த இவர் மொத்ததில் ஏழு பெண்களையும் ஒரு ஆணையும் மக்களாக அடைந்தார். அரசியலில் எந்தவிதமான ஈடுபாடு அற்றவராகவே கடைசிவரை வாழ்ந்து வந்தார். தனக்கு வாழ்வில் உதவியவர்களை என்றுமே நினைவில் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். தமிழக முன்னணி நடிகைகளில் ஒருவராகத் திகழ்ந்த சாவித்திரி இவரின் மனைவியரில் ஒருவர் எனபதுவும் குறிப்பிடத் தக்கது.

இவரது முதலாவது திரைப்படம் 1947ம் ஆண்டு வெளிவந்த மிஸ் மாலினி எனும் திரைப்படமே . நடிப்பாற்றலின் வழி பத்மஸ்ரீ பட்டம் பெற்றிருந்தார். மற்றுமொரு இவரது அருமையான தமிழ்த்திரைப்படம் அமரர் கல்கியின் பார்த்திபன் கனவு எனும் திரைப்படம் .



Kalyana Parisu (1959)

பல அருமையான தமிழ்த் திரைப்படங்களை தமிழ் நெஞ்சங்களுக்கு அளித்தவர் எனும் வகையில் இவருக்கு தமிழ்ப்பூங்கா சார்பில் அஞ்சலி செலுத்திக் கொள்கிறோம்.



தொகுப்பு : சத்தி சக்திதாசன்



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# இதழிற்கோர் குறள்




கலைஞரின்தமிழாற்றல் எனும் கடலோடு கலக்க ஓடி வரும் அன்புத் தமிழ் நெஞ்சங்களெனும் நதிகள் இங்கே பொங்கும் தமிழலைக் கண்டு தம்மை மறந்து மயங்கி நிற்கின்றன. குறள் எனும் அந்த இரண்டு அடி அதிசயத்தை , தமிழெனும் அமிழ்தெடுத்து நமக்கெல்லாம் விருந்தாக்கும் இந்த வார்த்தை விற்பன்னரின் வகை சொல்ல வார்த்தையுண்டோ ?
எங்கே வாருங்களேன் கனியான தமிழை கனிவாகச் சுவைப்போம் !



குறளோவியத்திலிருந்து

" நகை தந்தார் - நகை தந்தேன். தொட்டார் - சுட்டேன் . தழுவினார் - தழுவினேன் . தொடர்ந்தார் - படர்ந்தேன் . பிரிந்தார் - இருக்கிறேன் ! ".

வேதனையை விழி மூலம் விளக்கி நிற்கிறாள் அவள். இன்னொருத்தியோ இடுப்பொடியாமல் இருப்பதற்காக தோழியின் தோளைப் பிடித்துக் கொண்டிருக்கிறாள்." உயிரைக் காவடித் தண்டாகக் கொண்டு காமநோயும்,நாணமும் இரு பக்கமும் தொங்குகின்றன; நான் என்ன செய்வேன்? " - என்று துவளுகிறாள் அந்தத்தோகை.

காமமும் காணும் உயிர்காவாத் தூங்குமென்
நோனா உடம்பி னகத்து

அவள் குமுறலை உணர்த்துகிறது இந்தக்குறள். இவர் நிலைதான் இதுவென்றால் என்றன் நிலையோ அதைவிட மோசம் - என்று மழைக் கண்களைக் காட்டுகிறாள் மற்றொருத்தி.

காதலன் விடைபெற்றபோது அவள் கூறிய வார்த்தை என்ன தெரியுமா ? "நீ போகவில்லையென்றால் என்னிடம் சொல்! போய்த்திரும்புகிறேன் என்று சொல்வதானால், நீ திரும்பும் வரையில் உயிரோடு இருப்பவளிடம் விடைபெற்றுப் போ !"

இப்படிச் சொல்லிக் காதலனை திணறடித்தவள் அவள் . பாவம் ; அவளால் காமநோயை பிறர் அறியாமல் மறைக்கவும் முடியவில்லை; அந்த நோயைத் தந்த காதலனிடம், நோயின் கடுமை பற்றி விபரிக்கவும் வெட்கமாயிருக்கிறது. இப்படித் திண்டாடுகிறாள் அந்த வண்டாடும் மலர்க்குழலாள்.

கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும்

"உடலிற் பூசிய சந்தனத்தின் ஈரம் காய்வதற்குள் அவசரப்பட்டார் : பாடச் சொன்னார் : உடனே இதழ் மூடச் சொன்னார் : இசை கசக்கிறதோ ? என்றேன். இல்லை இதழ் இனிக்கிறது என்றார். விளக்கைக் காட்டி அணையுங்கள் என்றேன் ,அணைத்தார் உயிர் அணு ஒவ்வொன்றையும் தேனில் நனைத்தார். பக்கத்தே சிறிது நகர்ந்தேன். உடனே எனது உடல் எங்கும் பசளை நிறம் பரவி விட்டது. அந்தப் பிரிவைக்கூட என்னால் தாங்க முடியவில்லையே : இந்தப் பிரிவை எப்படியடி தாங்குவேன்? என்று வருந்துகிறாள், அந்த வண்ணமணிச் சிலையாள்.

புல்லிக் கிடந்தேன் : புடைபெயர்ந்தேன் : அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு

**************************************

நண்பர்களே !

கலைஞரின் தன்மை தனித்துவமானது . அதை அவர் கையாளும் முறை மாதுளைப் பழத்தை உடைத்து ,அதனுள் இருக்கும்மாதுளை முத்துக்களை சுவைக்கக் கொடுப்பது போன்ற ஒரு இனிமையான பாணி.

தமிழ் வருணனையைப் பாருங்கள் !

திண்டாடுகிறாள் அந்த வண்டாடும் மலர்க்குழலாள் என்னே அருமையான ஒரு உவமான , உவமேயம் . அவளது கூந்தல் மலரைப் போன்றதாம் , அதனை மலரென்று எண்ணி வண்டு வந்து சுவைப்பதற்காக மோதுகிறதாம் . ஒரு குயவன் களிமண்ணை எவ்வாறு கையாண்டு அழகிய கலைவண்ணங்களைப் படைக்கிறான் , அப்போது அவன் கைகளில் அந்தக்களிமண் எப்படி பிசையப்படிகிறதோ ? அதே போலத் தமிழ் கலைஞரின் வார்த்தைகளில் மிதந்து கலைவண்ணமாக எம்மை வந்தடைகிறது.

காதல் உணர்வுகளை கன்னித்தமிழுடன் கலந்து கண்ணியமாக எமக்கு விருந்தாக்குகிறார் இந்தத் தமிழ்ச் சொல்வேந்தர்.

ஆக்கம் : சத்தி சக்திதாசன்



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# ஒரு இந்துவின் பார்வை



அன்றிலிருந்து இன்றுவரை ஆனந்தமான வாழ்வு என்று எமது மனதிலே ஒன்றை வகுத்துக் கொண்டு அதைத்தேடி ஓடிக்கொண்டிருக்கிறோம் . ஒரு உண்மையான இந்துவாக சமுதாயத்தை நோக்கிய பார்வை எப்படி இருக்க வேண்டும் ? எமது வாழ்வின் தேவையின் உச்ச மட்டம் என்ன , அடி மட்டம் என்ன என்று எமக்கு உண்மையாகவே தெரிகின்றதா ? எமக்கு எது தேவை என்று எண்ணுகிறோமோ அதைத் தேடும் முயற்சியில் அடிப்படை நிம்மதியை இழந்து விடுகிறோமா ? இவையெல்லாம் மனதில் நியாயமாக எழுப்பப்படவேண்டிய கேள்விகளே .

தேவைகளின் இருப்புகளே கண்டுபிடிப்புக்களுக்கு அத்திவாரமாகின்றன . வாழ்க்கை வசதிகளைத் தேடும் முயற்சியின் படிகளிலே ஏறித்தான் மக்களின் துயர் துடைக்கும் நோய் தீர்க்கும் மருந்துகளைக் கண்டு பிடிக்கும் விஞ்ஞானி உருவாகின்றான். தேடும் அந்த ஆனந்த வாழ்க்கையை விரைவாக அடைய வேண்டியே மோட்டார்கார் , ஆகாயவிமானம் ஆகியன உருப்பெற்றன.

வாழ்வை ஆரம்பிக்கும் போது எமது அடிப்படைத் தேவைகள் மட்டுமே எமக்கு இலட்சியமாகின்றன . அந்த அடிப்படைத் தேவைகளை அடைந்து விட்ட பின்னாலோ , அவசரகாலங்களுக்கு என சிறிய அளவில் சேமிப்பது எமது தேவையாகின்றது , ஆனால் பின்பு இந்தத் தேவையின் எல்லைகள் விஸ்தரிக்கும் போது தான் நாம் எம்மையே இழக்க முற்படுகிறோம்.நமக்காக தேவைகள் எனும் நிலை மாறி தேவைகளுக்காக நாம் வாழத் தொடங்குகிறோம். அங்கேதான் நிம்மதி கொஞ்சம் , கொஞ்சமாக கையசைத்து விடைபெறத் தொடங்குகிறது. பின் எப்படி நாம் இந்த நிலையை வெற்றி கொள்ளலாம் ?

இதை வெற்றி கொள்ளக்கூடிய புத்திமதி வழங்கும் அறிவு எனக்கில்லை. ஏனெனில் நானும் அந்த வளையத்துக்குள் தான் வளைய வந்து கொண்டிருக்கிறேன். ஆனால் என் மனதிலே உருவாகும் கேள்விகளை ஒரு இந்து எனும் நிலைப்பாட்டில் இருந்து கொண்டு உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறேன்.

வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகளின் விளக்கத்தை மதத்தின் அடிப்படையில் பார்ப்பதன் மூலம் கலங்கலாக இருக்கும் நினைவுகள் தெளிவடையுமா ? என்ற ஒரு ஆராய்ச்சியே !

மனிதர்கள் என்றுமே மனிதர்களாகத்தான் இருப்பார்கள் . வாழ்வில் எல்லாக் குழப்பங்களுக்கும் விடை கண்டு விட்டார்களாயின் வாழ்வின் பல செயல்கள் அர்த்தமற்றுப் போய்விடும் . ஆனால் அதற்காக தொடர்ந்து இதற்கான விடைகளைத் தேடும் முயற்சி நின்றுவிடக் கூடாது என்பது எனது அபிப்பிராயம்.

இந்த இடத்தில் உங்களில் அனைவருக்கும் தெரிந்த ஒரு கதையை நினைவுபடுத்த விரும்புகிறேன் . இந்தக்கதை பல விதமாகப் பலருக்குக் கூறப்பட்டிருக்கலாம் ஆனால் கருத்து ஒன்றே பிரதானமானது.

ஒரு நாட்டின் அரசன் வாழும் அரண்மனைக்கு எதிர்த்தாற் போல , ஒரு பரதேசி வாழ்ந்து வந்தான்.
அந்நாட்டு மன்னனோ தூங்குவதோ அரிது . அந்நிய நாட்டு மன்னன் போர் தொடுத்து விடுவானோ ! நாட்டு மக்கள் பசிப்பிணியின்றி வாழ்கின்றார்களோ , தனது அரசாட்சி மகிமையானதோ ! எனப் பல எண்ணங்கள் தினமும் அவனை வாட்டுவதாலும் கொண்ட பொறுப்புக்களாலும் தூக்கம் அவனது கண்களைத் தழுவுவதோ அருமை என்றாகி விட்டது. ஆனால் அந்தப் பரதேசியோ தினமும் மகிழ்வாகவாழ்ந்தான் , தெருவெங்கும் திரிந்து பிச்சை கேட்பான் , கிடைப்பதை வைத்து தனது அன்றையத் தேவைகளைப் பூர்த்தி செய்து , தினமும் தூங்கப் போகுமுன்னர் மகிழ்வாக தனை மறந்து பாடிக் கொண்டே தூங்குவான். அந்தப் பரதேசியின் மகிழ்வைக் கண்ட அரசனுக்கு எரிச்சல் வந்தது. எப்படி இவன் ஆனந்தமாக இருக்கிறான் என்றெண்ணி இந்தக் கேள்வியைத் தனது அமைச்சரிடம் கேட்டான் . அமைச்சரும் இதற்கான விடையை இன்னும் இரண்டொரு தினங்களில் அரசரே கண்டு கொள்வார் என்று கூறினார். அடுத்த நாள் இரவு தொடக்கம் அந்தப் பரதேசியின் பாடல் நின்றது , அவன் முகத்தில் எப்போதும் அச்சமும் , பீதியும் நிறைந்து காணப்பட்டது . அரசனும் இதைக் கண்டு ஆச்சரியமுற்றான் . இரண்டு தினங்களின் பின்னர் அந்தப் பரதேசி அரசனைத் தேடி வந்தான். அவன் அரசனிடம் தனது கையிலிருந்த பொற்கிழியைக் கொடுத்து "மகாராஜா , இரண்டு தினங்களுக்கு முன்னர் எனது வீட்டின் முன்னால் இந்தப் பொற்கிழியைக் கண்டெடுத்தேன் , அன்றுமுதல் இதை எவ்வாறு பாதுகாப்பது எனும் கவலையே எனது நெஞ்சத்தில் நிறைந்துள்ளது, நிம்மதியைப் பறிகொடுத்து விட்டேன், தயவுசெய்து இதை எடுத்துக் கொள்ளுங்கள் , எனது ஆனந்ததைத் திரும்பத் தாருங்கள்" என்று கூறிச் சென்றான். அப்போதுதான் அரசனுக்குத் தெரிந்தது தனது கேள்விக்கான விடையைத் தனக்கு உணர்த்த தனது அமைச்சர் ஆடிய நாடகமே அது என்று.

தேவைக்கதிகமாகக் கிடைத்ததும் , ஒன்றுமிலாதபோது இருந்த ஆனந்தத்தை இழந்து , அமைதியற்ற ஒருவன் ஆனான் அந்தப்பரதேசி.


இந்த சத்தமான சந்தேகமே இந்த இதழில் ஒரு இந்துவின் பார்வையாகிறது.

இது சத்தி சக்திதாசனின் ஆக்கம்



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# சிந்திப்போமா !



சிந்திப்பு இன்றி மனித வாழ்வு முற்றுப்பெறாது . என்றோ , எப்போதோ , எங்கேயோ சந்தித்தவர்களின் தாக்கம் எமது இதயத்தில் எப்போதும் ஓரமாய் ஊறிக் கொண்டுதானிருக்கும் . ஆனால் சில சமயங்களில் மறக்கக் கூடாதவர்களை மறந்து விடுகிறோம். நினக்கக் கூடாதவர்களை நினைத்துக் கொண்டிருக்கிறோம். இந்தச் சந்தியிலே எம்மால் மறக்கக் கூடாவர்களை மனதில் இருத்துவதே எனது முயற்சி. சிந்திப்புக்களை சித்திரமாக்கி அதை அழகாய் மனமெனும் ஓவியத்தாளில் வடித்துப் பார்ப்பது மிகவும் முக்கியம் . சாதனைகளை சாதித்தவர்கள் நிச்சயமாய் எமது எண்ணமெனும் நீச்சல் தடாகத்தில் நீச்சல் போட வேண்டியவர்களே ! அந்த வரிசையில் இந்த இதழில் சமீபத்தில் மறைந்த தமிழ்நாட்டு இசைக்குயில் எம்.எஸ்.சுப்புலஷ்மி அவர்களை நினைவு கூறுவோம்.



16ம் திகதி , செப்டெம்பர் மாதம் , 1916ம் ஆண்டு மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கருகாமையில் வாழ்ந்த வழக்கறிஞருக்கும் , வீணையில் சிறந்து விளங்கிய பெண்மணிக்கும் மகளாக அவதரித்தார் எம்.எஸ். சுப்புலஷ்மி அவர்கள். அவருடைய தாயாரின் பெயர் சண்முகவடிவு . இவரின் பெயரின் முன்னால் உள்ள எம்.எஸ் என்பன மதுரை , சண்முகவடிவு என்பதனையே குறிக்கும் .

1940 ஆண்டு காங்கிரஸ் கட்சியின் முன்னனிப் பிரமுகரான திரு.சதாசிவம் அவர்களை மணமுடித்தார். இவரது மேடை நிகழ்ச்சிகளை அமைப்பதில் பெரும் பங்கு வகித்தவர் இவரது கணவரேயாகும். எம்.எஸ் அவர்களது 15 , 16 வயதினில் ஊரில் நடக்கும் திருமண வைபவங்களில் பாடுவார். அப்போது அங்கே வந்துள்ள விருந்தினர்கள் , மணிக்கணக்கில் தம்மை மறந்து ரசித்திருப்பார். அத்தகைய காந்தக் குரல் கொண்டவர் தான் எம்.எஸ் அவர்கள்





1973ம் ஆண்டு டெல்லி பல்கலைக்கழகத்தினால் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இந்தப் பட்டத்தை இவருக்குக் கையளித்தவர் திருமதி.இந்திரா காந்தி அம்மையார் .இது தவிர பத்மபூஷன் உட்பட எண்ணற்ற விருதுகளைப் பெற்றுள்ளார் நம் தமிழ்நாட்டுக் கவிக்குயில் எம்.எஸ். கர்நாடக சங்கீதத்தின் கடலான எம்.எஸ் , திரைப்படங்களிலும் பாடியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு கர்நாடக சங்கீதக் கச்சேரியை நடத்திய பெருமை இந்தத் தமிழ்நாட்டுக் கவிக்குயிலையே சாரும்.

இத்தகைய பெருமைகளை உலகம் வாழ் தமிழ்மக்களுக்குத் தேடித்தந்த இந்த இசைமேதை சமீபத்தில் இசையுலக ரசிகர்களையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திப் மரணமானார். இவரை சிந்திப்பது தமிழர்கள் அனைவருக்கும் ஒரு பெருமையேயாகும்

0000000000000000000000000000

# சின்னத் துளி

நான் ஒரு வெண்மேகம் எனக்கு வடிவம் கிடையாது , பாதை கிடையாது. மனமோ எதிர்காலமோ கிடையாது. இங்கே , இப்போது மட்டும் இருப்பது. காரணமற்ற ஒரு மனமே மதிஉணர்வுள்ளது. சொந்தமான தடம் கிடையாது.அலைந்து திரிவது .

ஓஷோ




பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# கனடாவிலிருந்து சிவபாலன்

சிவபாலன் - கனடா



## பிரச்சனை என்றால் என்ன ?

எமது வாழ்க்கையிலே பல பிரச்சனைகள் ஒன்றின் வழித்தொடரலாக மற்றையது எனும் பாங்கில் தோன்றிக்கொண்டிருக்கும். இவற்றிற்கெல்லம் ஒரு தீர்வைக் காணாமல் விட்டுவிடுவதே புத்திசாலித்தனமான ஒரு வழிமுறை என்றுகூட சில சமயங்களில் எம்மை இவை எண்ண வைக்கின்றன.

வாழ்க்கை எமை நோக்கி வீசும் பிரச்சனைகளை முழுமையாக சமாளிக்கும் திரணற்றதே மனித மனம்.

நாம் ஒவ்வொரு பிரச்சனையையும் பகுதிகளாக , தனியாக ஒரு முழுமையான வகையல்லாமல் தீர்க்க முற்படுகிறோம் . பிரச்சனைகள் ஏற்படும்போது அவைகளுக்கு உடனடித் தீர்வுகள் காண்பதல்ல முடிவு . அவைகளைத் தீர ஆராய்ந்து மன உறுதியின் மூலம் விடிவு காணமுடியுமா என்று ஆராய வேண்டியவர்களாகிறோம்.

பிரச்சனைகளுக்கு என்ன முடிவு என்பதல்ல முக்கியம் , அவற்றை எப்படி அணுகுகிறோம் என்பதுவே முக்கியம். ஏனெனில் சுதந்திரமற்ற அணுகுமுறை ஒரு கட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுறையாகவே இருக்கும். அதனால் விளையும் தீர்வுகள் மேலும் பிரச்சனைகளை உருவாக்க வல்லவை.

ஒரேயொரு சுதந்திரம் தானுண்டு , அதுதான் மதச் சுதந்திரம். மதச் சுதந்திரம் என்றால் என்ன ? உள்நோக்கமான ஆத்மார்த்தமான கேள்விகளுக்கு பொறுமையுடன் ஆழமான விடைகளை முழுமையாக அறிவது , குறிப்பாக இடைப்பட்ட எந்தவிதமான இடையூறுகளையும் எதிர்கொண்டு, இறுதியான ஒரு ஆராய்ச்சி முடிவை அடையக்கூடிய வல்லமையை அடைவதுவே .

மதச்சுதந்திரம் அடையக்கூடியதொன்றா ? வரையறுக்கப்பட்ட சமய சம்பந்தமான கோட்பாடுகளிலிருந்து எமது அறிவை விலக்கி வைத்திருப்பதன் மூலம் , மதத்தின் அடிப்படையில் விளைந்த தத்துவக் கருத்துக்கள் சிக்காமல் பாதுகாப்பதன் மூலம் மனித மனமானது ஒருவிதமான மதச் சுதந்திரத்தை அடைவது சாத்தியமானதுவே.

இந்த மதத் சுதந்திரம் ஒன்றே எமக்கேற்படும் ஒருங்கிணைந்த , தனியான பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வைத் தர வல்லன. ஒரு மனது மதச் சுதந்திரத்தின் வலிமையை அறிந்து கொண்டது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

விருப்பு , வெறுப்பு , தேடல், தேவை , உணர்ச்சிகளின் ஆதிக்கம் இவற்றிலிருந்து அதனால் தன்னை விடுவித்துக் கொள்ள முடியும்.

மனித மனதை நிபந்தனைகளில் இருந்து , வாழ்க்கை நியதிகளில் இருந்து செயற்பாடுகளின் முலமாகவா அன்றிச் சிந்தனைகளின் வழிமுறைகளினாலா விடுவிக்க முடியும் ? ஒரு முன்னெச்சரிக்கை மனதில் எழும் சிந்தனை வழிமுறைகளை அவைகளின் கர்ப்பக்கிரகத்திலேயே எரித்துச் சாம்பலாக்கி விடுகின்றன . சிந்தனைகள் அனைத்துமே காரணமுடையவை , சுதந்திரமான சிந்தனை என்று எவையுமே குறிப்பிட முடியாது.

எமது சிந்தனைகளை நிபந்தனை எனும் தளைகளிலிருந்து , சிந்தனைச் சக்கரத்தின் உதவியின்றி விடுவித்துக் கொள்ளலாம்.

எனது மனதை நான் விடுவிக்க வேண்டுமெனும் சிந்தனை தோன்றிய கணத்திலேயே மனமானது நிபந்தனை எனும் கயிற்றால் கட்டப்பட்டு விடுகிறது. ஒரு முடிவைக் காண வேண்டும் எனும் இலட்சிய வேட்கை மனதைச் சுற்றி நிபந்தனைகளை விதித்து விடுகின்றது.

அங்கே ஒரு முரண்பாடு பரிமணிக்கிறது . எமது மனதை கவ்வியிருக்கும் நிபந்தனையின் இருப்பு எமக்கு தெரியக்கூடிய ஒரு நிலையானது, முரண்பாட்டை இல்லாதொழிக்க உதவுகிறது. இந்தத் தெளிவு ஒன்றே பலசமயங்களில் எமது மனங்களில் தோன்றும் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவாய் அமைந்து விடுகிறது.





பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# இலக்கியச்சோலை



இம்முறை இலக்கியச் சோலையில் கண்ணுக்கு விருந்தாவது எது ? நண்பர் ஆர்.வெங்கடேஷ் தொகுத்து வழங்கும் "தமிழ் சமாச்சார்.காம் " எனும் அழகிய இணையத்தளத்தை வியப்போடு நோக்குகிறேன். இது கூட ஒரு அழகிய தமிழ் இலக்கிய மாலை என்றே சொல்லுவேன். வளரும் எழுத்தாளர்கள் தமது வார்த்தைகளோடு சொற்சிலம்பம் ஆட ஒரு களம் அமைத்துக் கொடுத்திருக்கிறார் இனிய நண்பர் ஆர்.வெங்கடேஷ்.

இந்த இணையத்தளத்தை நடத்துவது மட்டுமல்ல நண்பர் வெங்கடேஷ் அவர்களின் பணி. மிகவும் ஆர்வமாக கலைமகள் , காலச்சுவடு , கானல் , அமுதசுரபி என்பன உட்பட மிகவும் பிரசித்தி பெற்ற நல்ல இலக்கிய இதழ்களை இணையத்திற்கு கொண்டு வர உழைத்த்வர்களில் மிகவும் முக்கியமானவராக திகழ்கிறார் நண்பர்.

இந்த இணையத்தளத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட அனைத்து இதழ்களுக்கும் ஒரு இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள். அத்தோடு மற்றும் முக்கியமான தமிழ் சம்மந்தப்பட்ட அனைத்துத் தளங்களுக்கும் இந்தத் தளத்திலிருந்தே செல்லக்கூடிய வகையில் இணைப்புக்களை கொடுத்துள்ளார்கள்.

தமிழகம் , ஈழம் , உலகம் ஆகியவற்றின் முக்கிய செய்திகளை தமிழக முன்னணிச் செய்திப் பத்திரிகைகளின் , செய்திகளை அட்டவணைப்படுத்திக் கொடுப்பதன் மூலம் அனைத்துச் செய்திகளையும் இந்த இணையத்தளத்தின் வழியாக உள்வாங்கக் கூடிய ஒரு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

அது மட்டுமா ? தமிழ் நாட்டின் பல முன்னணி எழுத்தாளர்கள் அசோகமித்திரன் , இந்திரா பார்த்தசாரதி , மாலன் , பா.ராகவன் ஆகியோர் உட்பட , பல பிரசித்தி பெற்ற எழுத்தாளர்கள் நா.கண்ணன் , ரமா சந்திரன் ஆகியோரின் எழுத்தாக்கங்கள் படைக்கப்பட்டு வருகின்றன.

வளர்ந்து வரும் எழுத்தாளர்கள் தமது எழுத்தாக்க முயற்சிக்கு அனுபவமிக்க எழுத்தாளர்களின் ஆக்கங்களோடு ஒப்பிட்டு தம்மை வளர்த்துக் கொள்வதற்கு இந்தப் பணி மிகவும் சிறந்த முறையில் உதவுகிறது.

கதை , கவிதை , கட்டுரை என பலவகையான ஆக்கங்களையும் தாங்கி வந்து கொண்டிருக்கிறது "தமிழ் சமாச்சார்.காம்" . பல புலம் பெயர் தமிழர்கள் , தம் நாட்டுக் கலாச்சார நிகழ்வுகளை , அவை தமிழரோடு பிணைந்த சூழலை மிகவும் தெளிவாகப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

அது தவிர பெண் எழுத்தாளர்கள் பங்குபெற மிகவும் ஏற்ற வகையில் நல்ல களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது தமிழ் சமாச்சார்.காம் . மிகவும் வியத்தகு விடயம் ஒன்று இந்ததளத்தில் நான் கண்டேன். அதாவது 91 வயதுடைய ஒரு மூதாட்டி , இந்தியாவின் சுதந்திரப் போராட்டக் காலத்தில் , ஊர் விட்டு ஊர் செல்ல வேண்டிய அந்தக் காலத்தின் கட்டாய பிராயாணத்தை மிகவும் அழகான ஒரு இலக்கிய கட்டுரையாக பதிவு செய்திருந்ததாகும்.

இத்தகைய ஆக்கங்கள் எமது வருங்காலச் சந்ததியினருக்கு , உலகத்தமிழருக்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

இன்றைய இணையத்தமிழ் வளர்ச்சி மிகவும் துரிதமான வேகத்தில் அதீத வளர்ச்சியடைந்துள்ளது. தமிழின் தொடர்ந்த விரிவாக்கல் இணைய வாயிலாகவே நடைபெறவேண்டும் என்பது
காலக்கட்டாயம். எமது தமிழ் உள்ளங்கள் எந்த அளவிற்கு இணையத்தில் தம்மை நிலைநிருத்திக் கொள்கிறார்களோ அந்த அளவிற்குத்தான் எதிர்காலச் சந்ததியும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் என்பதனை நாம் மறந்து விடக்கூடாது.

நண்பர் வெங்கடேஷ் போன்றோரின் அயராத , தன்னலமற்ற பணி வெற்றிபெறுவது வாசகர்களாகிய உங்களது கைகளிலேயே தங்கியுள்ளது. இணையத்தின் வளர்ச்சிக்கு ஆதரவு கொடுத்து தமிழைத் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து நிற்கச் செய்வோம்.

இந்த இணையத்தளத்தின் முகவரி " http://samachar.com/tamil/index.php ".

ஆக்கம் : சத்தி சக்திதாசன்



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# வாலியின் கலர்ப்பூக்கள்



தமிழெனும் வில்லெடுத்து கவி எனும் அம்பு கொண்டு இலக்கிய இதயங்களை ஊடுருவும் ஆற்றல் மிக்கவர்தான் கவிஞர் வாலி அவர்கள் . காலத்துக்கேற்ற கானங்களை காற்றோடு கலக்கவிடும் இந்தக் கவிதை வேந்தன் வாழும் சமகாலத்திலே நாமும் வாழ்கிறோம் என்பது , எமக்குப் பெருமை . இலக்கியச்சுனையில் மலர் கொய்து இதயக் கோவிலுக்குச் சாத்தும் ஓர் நிகரற்ற தமிழ்க்கவி இவர். இந்த இரண்டாவது ஆண்டு மலரிலே கவிஞர் வாலி அவர்களின் இதமான திரைகானம் ஒன்றை உற்று நோக்கலாம்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருக்காக , டி.எம்.எஸ் கம்பீரமாக காற்றலைகளிலே தவழ விட்ட பாடலது. எங்கே பார்ப்போமா ?

நாளொரு மேடை பொழுதொரு நடிப்பு
அவன் பேர் மனிதல்ல

ஏழே ஏழு சொற்களை மாலையாகக் கட்டி மனிதத்தின் வரவிலக்கணத்தை வரைந்து காட்டி விட்டார் இந்த மூத்த கவிஞர்.

நாவில் ஒன்று நினைவில் ஒன்று
அதன் பேர் உள்ளமல்ல

மேலே குறிப்பிட்ட அந்த வரைவிலக்கணத்திற்கு உட்பட்ட மனிதனின் மனம் எப்படிப்பட்டது , அதை உள்ளம் என்று உரைக்கலாமோ ? இல்லையே மனதில் எண்ணக்கூடியதை வார்த்தையில் வடிக்கக்கூடியவனாக அந்த நாடக மனிதன் இருக்க மாட்டானே !

உள்ளத்தில் வைத்ததை உதட்டிலும் வைப்பவன்
எவனோ அவனே மனிதன்

எவன் மனிதன் இல்லை என்று அறுதியிட்டுக் கூறினாரோ , அதே தொனியில் உண்மையான மனிதனாக இருப்பவனின் முக்கிய குணாம்சத்தை அதே இரண்டு வரிகளில் எடுத்தியம்புகிறார் இந்த நேர்மைக் கவிஞர்.

ஊரார் வேர்வையில் உடலை வளர்ப்பவன்
உலகத்தில் கோழைகள் தலைவன்

தன்னுடைய தலைவிதியை தனது சொந்தக் கைகளில் எடுத்துக் கொள்ளாத எவருமே வாழ்க்கையில் வெற்றியடைய முடியாது என்பது உண்மை . அதை எவ்வளவு அழகாகத் தமிழ் எனும் சந்தனம் தடவிய மலர்மாலையாக எமக்கு அணிவித்து மகிழ்விக்கிறார் இந்த அற்புதமான கவி.

காட்டில் நிலவாய் கடலில்மழையாய்
பிறந்தால் யாருக்கு லாபம்

மனிதன் பிறக்கிறான் , வளர்கிறான் , வாழ்கிறான் , மடிகிறான் எனும் இந்த குறுகிய சுவரை அழகாய்க் குத்திக் காட்டுகிறார் கவிஞர் வாலி. நமக்காக , நமக்குள்ளே வாழ்ந்து விட்டு மடிந்து போவதை காட்டுக்குள் ஒளிரும் நிலவிற்கும் , கடலினுள்ளே விழுந்து தன்னையும் உப்பாக்கிக் கொள்ளும் அந்த மழைநீருக்கும் ஒப்பானதாகக் காட்டிச் சிந்திக்க வைக்கிறார்.

பகையில் துணையாய் பசியில் உணவாய்
இருந்தால் ஊருக்கு லாபம்

பிரயோஜனமில்லாத மனித வாழ்க்கையை எப்படி ஊருக்கு உபயோகமானதாக மாற்றலாம் எனத் திவ்வியமாக எடுத்தியம்புகிறார் கவிஞர்.

கூரைகள் எல்லாம் கூட வளர்ந்தால்
கோபுரம் ஆவதில்லை
குருவிகள் எல்லாம் உயரப் பறந்தால்
பருந்துகள் ஆவதில்லை

மனிதர்கள் மனித மனத்தில் அலைமோதும் எண்ணங்களினால் பலவிதமான சிந்தனை வயப்படுவார்கள் . ஊருக்கோ அன்றி உறவுக்கோ எதுவித லாபமுன்றி வாழ்ந்து கொண்டு வெறும் அந்தஸ்தைக் காரணம் காட்டி தாம் சமுதாயத்தில் உயர்ந்தவர்கள் என்று காட்டிக் கொள்ளும் பலரைக் கண்ணுற்றுள்ளோம். அவர்களையெல்லாம் தமது கவித்திறமையால் இனங்காட்டி விடுகிறார் இந்த உன்னதக் கவிஞர்.

கவிஞர் வாலி தனக்கு வந்த தடைக்கல்லையெல்லாம் படிக்கல்லாக்கி முன்னேறியவர் . தனது வாழ்வில் தன்னைக் கைகொடுத்து தூக்கி விட்டவர்களை காலமெலாம் நினைத்துக் கொண்டிருப்பவர். உள்ளத்தில் இருப்பதையெல்லாம் தனது உதட்டில் தருவிக்கும் ஒரு நேரானா மனிதர். மனிதாபிமானம் மிக்கவர். அவர் தமிழைத் தொட்டிலாக்கி எமது நெஞ்சங்களையெல்லாம் குழந்தைகளாக்கி கனத்த வேளைகளை இலேசாகத் தாலாட்டி விடுகிறார்.

காலத்துக்கேற்றவாறு கானமமைக்கும் ஒரு கானச்சிற்பி , எத்தனையோ வருடங்களாக திரையிசையிலே அனைவருக்கும் ஈடு கொடுத்து முன்னணியில் இருந்து வருகிறார். சுறுசுறுப்பின் , உழைப்பின் முன்னுதாரணம் கவிஞர். வயதில் மூத்தவர் ஆனால் மனதில் இளையவர். இளம் நெஞ்சங்களைத் தூண்டில் போட்டு இழுக்கும் ஆற்றல் படைத்த வல்லவர். இவர் ஒரு சகாப்தத்தின் சரித்திரம். இவர் இன்னும் பல ஆண்டுகள் என் போன்ற ரசிகர்களின் ஆவல் தணிக்கும் பல திரைகானங்களையும் இலக்கிய ஆக்கங்களையும் தமிழ்கூறும் நல்லுலகிற்கு அளிப்பார் என்பது எனது திடமான நம்பிக்கை.

ஆக்கம் : சத்தி சக்திதாசன்


பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# சிறப்புச் சிறுகதை - திருமதி நிர்மலா ராஜு



ஆற்றல் , கனிவு , துணிச்சல் , திறமை அனைத்தையும் ஒன்றுகூட்டி தம்முள்ளே அடக்கி வைத்திருக்கும் அருமை நண்பி , நிலாச்சாரல்.காம் இணையத்தள ஆசிரியர் தமிழ்ப்பூங்கா இரண்டாவது ஆண்டு மலருக்கு ஒரு சிறப்பம்சமாக அருமையான சிறுகதை ஒன்றைப் படைத்துள்ளார் . எனது எழுத்துப் பணிக்கு உந்துகோலாய் பல அரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்து , சோர்ந்து போகும் வேளைகளிலெல்லாம் தட்டிக் கொடுத்து ஊக்குவிக்கும் இவரை நண்பர்களை அடைந்ததுவே ஒரு கொடையாகும் . இவரது புனைப்பெயர் நிலா.
எங்கே நீங்களும் அவரின் திறமையை ரசிக்க வேண்டாமா ?

## சுதந்திரப் பூங்காற்று

- நிலா

அந்த மருத்துவக் கல்லூரி கலை விழாவின் கடைசி நாள். அன்றைக்கு நிறைவு பெறும் கலைவிழாவின் ஹைலைட்டே மெல்லிசைக் கச்சேரிதான். நகரத்தின் அனைத்துக் கல்லூரி மாணவர்களும் திரண்டிருப்பார்கள். கலைவிழாவை நடத்துகிற கல்லூரி மாணவர்களுக்கு கடைசி நாள் எப்போதுமே விசேஷம்தான்

பெண்கள் விடுதி அமர்க்களப் பட்டுக்கொண்டிருக்க உமா கட்டுரைப் போட்டி ஒன்றுக்காக பாரதி கவிதைகளை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தாள். அறையில் அவள் அறைத்தோழி ஆர்த்தி வழக்கம் போல அவள் கூட்டத்தைக் கூட்டி இருந்தாள். சங்கவி, ராதிகா, விமலா, ராஜி, ஷ்ருதி இவர்களோடு ஆர்த்தியையும் சேர்த்து சூப்பர் சிக்ஸ் என்பார்கள். அந்தப்பெயரை அவர்களாகவே சூட்டிக் கொண்டார்களா அல்லது யாராவது வைத்தார்களா என்பது உமாவுக்குத் தெரியாது. ஆனால் அவர்களிடம் சூப்பர் என்று சொல்வதற்கு என்ன இருக்கிறது என்பதுதான் உமாவுக்கு என்றும் புரியாத புதிர்.

கல்லூரியில் சூப்பர் சிக்ஸை அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது என்கிற அளவுக்கு அவர்கள் பிரபலம். ஆறு பேரும் நுனிநாக்கில் ஆங்கிலம் பேசுவார்கள். பொது இடத்தில் தமிழ் தெரியாதது போல் அலட்டுவார்கள். கவர்ச்சியாய் ஆடை அணிவார்கள்..

சந்தர்ப்ப வசத்தால் உமா ஆர்த்தியின் அறைத்தோழி ஆன கட்டாயத்தில் அவர்கள் போடும் ஆட்டங்களை எல்லாம் அவள் வேடிக்கை பார்ப்பதோடு சரி. அவர்கள் மேல் பெரிதாய் கருத்தொன்றும் வைத்துக் கொள்ள மாட்டாள். அவரவர்களுக்கு அவரவர் வாழ்க்கை. அடுத்தவருக்குத் தொல்லை தராதவரை கருத்துச் சொல்ல என்ன இருக்கிறது என்பது அவளது கொள்கை.

"ஹே மேன், நீயே எல்லாத்தையும் இழுக்காதேடி" என்று விமலாவின் கையிலிருந்த சிகரெட்டைப் பிடுங்கி ரசித்து இழுத்த படியே ஆர்த்தி "உமி ஒரே ஒரு ட்ரை பண்ணேன்பா" என்றாள் உமாவிடம்.

உமா பதில் சொல்லாமல் புன்னகைத்து மறுபடியும் பாரதி கவிதைகளில் ஆழ்ந்தாள்.

"சரியான பத்தாம் பசலிடி. எங்கேர்ந்துடி வந்தா இவ?" சங்கவி கேலியாய்க் கூற "நாட்டுப்புறம்.. பட்டிக்காடு" என்று கோரஸாய் அவளைக் கிண்டலடித்தார்கள்

"பீர் ஒரு சிப்?" என்றாள் ஆர்த்தி விடாப்பிடியாக.

தலையை பலமாய் ஆட்டித் தன் மறுப்பைத் தெரிவித்தாள் உமா.

"ஏண்டி இப்படி இருக்கே? உன்னை என்ன குடிகாரி கவா சொல்றோம்? எப்போவாவது ஜாலியா இதெல்லாம் கூட டிரை பண்ணலன்னா என்ன லைஃப்?"

"எனக்கு பிடிக்கலைன்னா விட்டுடுங்களேன்"

"டிரை பண்ணாமலேயே பிடிக்கலைன்னா என்ன அர்த்தம்?"

"அப்பா பாப்பாகிட்டே சொன்னாரு பீர் குடிக்கறது கெட்ட பழக்கம்னு... " சங்கவி குழந்தை குரலில் மிமிக்ரி செய்ய அனைவரும் பெரிதாய் சிரித்தார்கள்.

விமலா சீரியசான குரலில் "இதையே உன் அண்ணன்கிட்ட சொல்லச்சொல்லு பார்கலாம். உங்கண்ணன் பாத்ரூம்ல திருட்டு தம் அடிச்சா தன் மரியாதை கெட்டிரக்கூடாதுன்னு பார்க்காத மாதிரி போவாரா இருக்கும். பொண்ணுன்னாதான் ஏகத்துக்கும் கெடுபிடி. அதுவும் உன்னை மாதிரி எல்லாத்துக்கும் தலை ஆட்டுற மாடுகள் இருக்கறவரைக்கும் அப்பன்கள் திருந்த மாட்டார்கள்" என்றாள் சூடாய்.

"பாரதியார் எல்லாம் படிக்கிறே. அவர் சொன்ன பெண்கள் விடுதலையைக் கடைப்பிடிக்க மாட்டியா? இங்கே என்ன உங்கப்பாவா வந்து பார்க்கப் போறாரு? சுதந்திரக் காற்றை சுவாசிக்க வா தோழி" ஷ்ருதி உசுப்பேற்றினாள்

உமாவுக்குச் சிரிப்பு வந்தது. பாரதியின் பெண் சுதந்திரம் எங்கெல்லாம் இழுபடுகிறது! இவர்களுக்குப் புரிய வைக்க எவ்வளவோ முயன்று பார்த்தாகிவிட்டது. தங்கள் வாதத் திறமையைக் காட்டுவதற்காக விவாதம் செய்வார்களே ஒழிய பேசுகிற சப்ஜெக்டில் ஒரு பிணைப்பு இருக்காது. வெறும் விதண்டாவாதத்தை வளர்த்துக் கொண்டு போவதில் என்ன பலன் என்று அவர்களோடு வாதம் செய்வதை முற்றிலும் தவிர்த்து வந்தாள் உமா. அன்றும் அதே போல உமா அத்தனையையும் அலட்சியப் படுத்தி வேலையில் ஆழ்ந்தாள்.

"சிட்டி பாய்ஸ் எல்லாரும் இன்னைக்கு இங்கேதான். காலேஜ்ல மட்டும் இல்லை, சிட்டிலேயே சூப்பர் சிக்ஸ் நாமாத்தான் இருக்கணும். ஒகே?" என்று கவனமாய் அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள்.

"லைட் ம்யூசிக் ஆரம்பிச்சிருச்சிப்பா. விநாயகர் துதி பாடறாங்க. Hurry up. அப்புறம் இடம் கிடைக்காது " பீர் வாசம் வராதவாறு சென்டை ஏகத்துக்கும் பீய்ச்சிக் கொண்டு கிளம்பினார்கள்.



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

"நீ வரலே?" என்று உமாவைப் பார்த்துக் கேட்க, "வரேனே" என்று அவர்களோடு கிளம்பினாள் உமா.

"ஏண்டி தினமும்தான் சல்வாரும் புடவையுமா வர்றே. இன்னைக்காவது கொஞ்சம் கிளாமரா வரலாமில்லே? இன்னைக்கும் புடவையா? உன்னைத் திருத்தவே முடியாது" ஆர்த்தி சலிப்போடு சொன்னாள்

மெல்லிசைக் கச்சேரிக்குக் கூட்டம் அலைமோதியது. சூப்பர் சிக்ஸைப் பார்த்ததும் விசில் பறந்தது. வித்தியாசமாய் ஒரு கோஷ்டி குலவை போட்டது. காகித அம்புகள் பறந்தன. அந்த வரவேற்பில் ஆறு பேரின் முகங்களும் பெருமையில் விகசித்தன.

ஸ்டேடியத்தின் அடிப்பகுதியில் மட்டும் கொஞ்சமாய் இடம் கிடைத்தது. தூணுக்கு அருகில் உமா ஒதுங்கிக் கொள்ள மற்றவர்கள் அருகே செட்டில் ஆனார்கள்.

தொடர்ந்து விழுந்து கொண்டிருந்த காகித அம்புகளைக் கொத்தாய் அள்ளி உமாவிடம் பெருமையாய்க் காட்டினாள் ஆர்த்தி. உமா புன்னகைத்துவிட்டு இசையில் கவனத்தைப் பதித்தாள். சற்று நேரத்தில் 'ராஸ்கல்ஸ்' என்று ஆர்த்தி யாரையோ திட்டுவது கேட்டுத் திரும்பிய உமா அவள் முகத்தில் எரிச்சலும் கோபமும் படர்ந்திருப்பதைப் பார்த்தாள். என்ன என்று சைகையில் கேட்க, தன் மீது அப்போதுதான் விழுந்த காகித அம்பையும் அதனோடு வந்த சிறு கல்லையும் காட்டினாள் ஆர்த்தி.

உமாவுக்குப் புரிந்து போனது. காகித அம்புகளில் கல்லை வைத்து எறிகிறார்கள். உமா காகித அம்புகள் வரும் திசையில் நோக்கினாள். புகை மண்டலத்துக்கு நடுவே கூச்சலும் குழப்பமுமாய் இருந்தது.

அவள் அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஆர்த்தியின் அலறல் சத்தம் கேட்க அதிர்ந்து திரும்பினாள். ஆர்த்தி அவளின் லோநெக் ஸ்லீவ்லெஸ் டி-ஷர்ட்டினுள்ளிருந்து புகைந்து கொண்டிருந்த சிகரெட் துண்டை எடுத்துக் காட்டி கண்கலங்கினாள். அவள் டி-ஷர்ட்டில் லேசாய் பொத்தல் விழுந்திருந்தது. உடம்பில் ஒன்றும் காயம் படவில்லை என்று தெரிந்தது. "திஸ் இஸ் டூ மச்" மற்ற மாணவிகளில் குரல்களின் வேகம் கொப்பளித்தது. ஆனால் எதிர்த்துக் கேட்கும் தைரியம் வரவில்லை "லெட் அஸ் கெட் அவுட் ஆஃப் ஹியர்" என்று அவர்கள் கிளம்ப ஆயத்தமாக, உமா அவர்களைப் பார்த்து, "இருங்க" என்று கையமர்த்தினாள். அவர்கள் குழப்பமாக விழித்துக் கொண்டு நிற்க உமா அந்த மாணவர்களை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

"ஏய் லூசு, எங்கப்பா போற? ஒரே ரெளடிஸா இருக்காங்கடி" என்றாள் சங்கவி. உமா அதையெல்லாம் பொருட்படுத்தாமல் கூச்சலிட்டுக் கொண்டிருந்த மாணவர்கள் முன் போய் நின்றாள். அவளை அங்கு எதிர் பார்க்காதவர்கள் சில கணங்கள் உறைந்து பின்பு பெரிதாய் ஒரு 'ஓ' போட்டார்கள்.

"எனக்கு ஒரு 30 செகண்ட் உங்ககிட்ட பேசணும்" என்று உமா சொன்னது அந்தக் கூச்சலில் யார் காதிலும் விழுந்தது போல் தெரியவில்லை. ஆனாலும் உமா பொறுமையாய் அங்கேயே நின்று கொண்டிருந்தது சில மாணவர்களின் கவனத்தைத் திருப்பியது.

"என்ன?" என்றான் கவனித்தவர்களில் ஒருத்தன்.

"ஒரு 30 செகண்ட் பேசணும்"

"யார்கிட்டே? என்கிட்டேயா?"

"உங்க எல்லார்கிட்டேயும்?"

"மறை கழன்றிருச்சா?" என்றான்.

உமா பதில் சொல்லாமல் தன் டிரேட்மார்க் புன்னகையோடு கை கட்டிக் கொண்டு அசையாமல் நிற்க, அந்த மாணவன் அவளைச் சுட்டிக்காட்டி ஏதோ அருகிலிருந்தவினிடம் சொல்ல அது மெல்ல மெல்லப் பரவி கூச்சலும் குழப்பமும் கொஞ்ச கொஞ்சமாய் அடங்கியது. அவ்வளவு நேரம் அங்கே என்ன நடக்கிறது என்று புரியாமல் ஸ்டேடியத்தை விட்டுக் கிளம்ப யத்தனித்துக் கொண்டிருந்த சூப்பர் சிக்ஸ் பெண்களும் அங்கு அமைதி நிலவியதை வியப்புடன் நோக்கினார்கள்.

அத்தனை பேர் கண்களும் தன் மீதிருப்பதை உணர்ந்த உமா கைகூப்பி "நன்றி" என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்தாள். "எல்லாரும் இங்கே எஞ்சாய் பண்றதுக்குத்தான் வந்திருக்கோம். உங்களுக்கு பாட்டுன்னா எவ்வளவு பிடிக்குமோ. அதே அளவுதான் எங்களுக்கும் பிடிக்கும்" அவள் பேசிக்கொண்டிருக்கும்போதே, "எங்களுக்கு தம்முன்னா ரொம்பப் பிடிக்கும். உங்களுக்கும் பிடிக்குமோ?" என்று யாரோ கேட்க, சிலர் சிரித்தாலும் சிலர் "கம்முன்னு இருடா மாப்பிள்ளே" என்று அவள் பேசுவதைக் கேட்கத் தயாரானார்கள்.

உமா தொடர்ந்து, "உங்களுக்கு எப்படி ஜாலியா எஞ்சாய் பண்ண உரிமை இருக்கோ. அதே அளவு எங்களுக்கும் இருக்குதானே? உங்களைப் போலத்தான் நாங்களும்? எங்க உடம்பிலயும் உங்களை மாதிரி ரத்தம், சதை, நரம்பு இதெல்லாம்தான் இருக்கு. உங்க சகோதரிகளுக்கும் அம்மாவுக்கும் கூட அப்படித்தான். வேணும்னா தொட்டுப்பாருங்க" என்று கை நீட்டினாள்.

கேலி பேசியவர்கள் வாயடைத்து நின்றார்கள். அந்த இடமே உறைந்து விட்டது போல ஒரு அகால அமைதி நிலவியது.

அவள் எதிர்பார்த்தபடியே யாரும் அவள் கைதொட முன்வராததைக் கண்டு மனதுக்குள் புன்னகைத்துக் தொடர்ந்தாள் உமா, "கல்லெடுத்து எறிஞ்சா எப்படி உங்களுக்கு வலிக்குமோ, அப்படித்தான் எங்களுக்கும் வலிக்கும். உங்களை யாராவது சிகரெட்டால சுட்டா உங்களுக்கு எப்படி இருக்கும்? தோல் கருகி எரியறதை விட மனசு பொசுங்கறது ஜாஸ்தியா வலிக்காது? அப்படித்தான் எங்களுக்கும் இருக்கு. உங்க ஒவ்வொருத்தரோட சகோதரியும் ஏதாவது காலேஜில படிப்பாங்கதானே, அங்கே இதே மாதிரி ரோவில கல்லும் சிகரெட்டும் விட்டு அவங்க மேல எறிஞ்சா நீங்க பொங்கிட மாட்டீங்க?" என்று கேட்க,

"எந்த நாயிடா அது சிகரெட் விட்டெறிஞ்சது?" என்று ஆங்காங்கே கண்டனக் குரல்கள் எழுந்தன.

"கேர்ள்ஸ் எல்லாம் கிளம்பறாங்க. நான் அவங்களை இருக்கச் சொல்லப்போறேன். எனக்கு உங்க மேல நம்பிக்கை இருக்கு" என்றவள் வாட்சைப் பார்த்து, "ஸாரி, 30 செகண்ட்சை விட ஜாஸ்தியா ஆயிடுச்சு. அமைதியா இருந்ததுக்கு தேங்க்ஸ்" என்று கீழிறங்கிப் போனாள்.



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

அவள் இறங்கி நடந்து கொண்டிருக்கும் போதே, "ஸாரி ஃபிரண்ட்ஸ்" என்று மாணவர்கள் மாணவியரை நோக்கி ஒரே குரலில் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்தனர். உமா திரும்பிப்பார்த்து அவர்களை நோக்கிக் கட்டை விரலை உயர்த்திக் காட்டித் தன் பாராட்டுதலைத் தெரிவித்தாள்.

மாணவிகள் அனைவரும் அந்த சந்தோஷ அதிர்ச்சியை நம்ப முடியாமல் திணறினர்.

மற்றவர்களுக்குப் புரிந்ததோ இல்லையோ ஆர்த்திக்கு ஆழமாய்ப் புரிந்தது இதுதான் பாரதி சொன்ன சுதந்திரமென்று.

உமாவுக்கு பெண் சுதந்திரம் பற்றிய தன் கட்டுரைக்கான வரிகள் மனதில் ஓடின:
காற்று ஒன்றுதான். அதில்தான் தென்றலும் உருவாகிறது; புயலும் உருவாகிறது. அது போலத்தான் சுதந்திரமும். நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்துத்தான் அது நம்மைப் பாதுகாப்பதும் பாழ்படுத்துவதும் அடங்கி இருக்கிறது

*************************

அன்பான வாசகர்களே ! இது நிர்மலா ராஜு அவர்களின் ஆழ்ந்த கருத்தாற்றலுடன் கூடிய திறமைக்கோர் எடுத்துக்காட்டு . இது ஓர் ஊற்று இன்று நாம் சுவைத்தது ஒரு வாளி நீரே !

---

## சிறப்புக் கட்டுரை --- கே.எம்.விஜயக்குமார்



இ - சங்கமம் ஆசிரியர் விஜயக்குமார் தமிழ்ப்பூங்கா வாசகர்களுக்காக இரண்டாவது ஆண்டு மலரின் சிறப்பம்சமாக வரைந்த கட்டுரை .
இணைய வாசகர்களுக்கு அறிமுகம் தேவையற்றவர் . தமிழ் இணையத்தளங்களினுள்ளே குறிப்பிடத் தக்கவைகளுள் ஒன்றான இ-சங்கமம் பற்றி ஏற்கனவே தமிழ்ப்பூங்கா வாசகர்கள் அறிந்து இருப்பீர்கள் . மிகவும் சுறுசுறுப்பான தம்பி விஜயக்குமார் தனியார் கம்பெனி ஒன்றில் "பேஃர்ச்சசிங் மனேஜர்" ஆகப் பணி புரிந்து வருகிறார். பலவழிகளிலும் எனக்கு உறுதுணையாக இருக்கும் தம்பிக்கும் எனது ஆழ்ந்த நன்றிகள்

செம்மொழி தமிழ்! இனி உலகெலாம் தடையில்லாமல் பரவும் நமக்கெல்லாம் பெருமையாகத்தான் இருக்கின்றது. இதற்கு உண்டான முயற்சிகள் வல்லுனர்களால் பல தளங்களில் நடந்து வருகின்றன.மணலில் எழுத ஆரம்பித்த தமிழன் சிலேட்டு,காகிதம் என பயணித்து இன்று கணினி, செல்லிடப்பேசியில் தமிழ் என வந்துள்ளான். உலகம் முழுவதும் தேமதுரதமிழ் பரவிட கனவு கண்டான் முண்டாசு கவிஞன். இந்த கனவு மெய்பட்டுள்ளது இன்று.
ஆங்கிலம் இருந்தால் தான் கணினியில் தகவல் பறிமாற்றம் செய்ய இயலும் என்ற நிலை இன்று இல்லை.
ஆங்கிலம் கொண்டு செய்கின்ற அனைத்து பணிகளையும் தமிழ் கொண்டு செய்ய இயலும் ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா?.
இன்று தமிழில் மின்னஞ்சல் பறிமாற்றம் என்பது உலகத் தமிழர்களிடியே சர்வசாதாரணம் ஒரு நாளைக்கு இலட்சக்கணக்கான மின்னஞ்சல்கள் தமிழில் பறிமாறிக்கொள்ளப்படுகின்றன.தமிழில் மின்சஞ்சிகைகள் ஒன்று இரண்டு என பரவி இன்று ஆயிரக்கணக்கில் உள்ளன (www.thinnai.com,www.thisaigal.com,www.e-sangamam.com). தமிழில் வலைப்பூக்கள் (webblogs) நாளொரு எண்ணம் பொழுதொரு எண்ணமுமாக வளர்ந்து இன்றைய கணக்குப்படி சுமார் 600+ மேல் பதியப்பட்டுள்ளன. இவற்றை நீங்களும் காணவேண்டும் www.thamizmanam.com இந்த வலைப்பூக்களை சுடச்சுட பட்டியலிட்டுள்ளது.
கணினியில் தமிழால் என்ன என்ன செய்ய இயலும் பார்ப்போம்:-
1.மின்னஞ்சல் (e-mail) தமிழில் உலகில் எந்த மூலையில் இருக்கும் தமிழர்க்கும் அனுப்ப இயலும்
2.Chat எனப்படும் இணையவழி அரட்டை முற்றிலும் தமிழிலேயே செய்ய இயலும்
3.வேர்ட்,நோட்பேடு போன்ற நிரலிகளில் தமிழில் உள்ளிட்டு ஆவணங்களை சேமிக்கவோ அச்செடுக்கவோ இயலும்
4.உங்களின் கருத்துக்களையும் ஆக்கங்களையும் தமிழிலேயே பகிர்ந்து கொள்ள இயலும்.
5.அப்படி பகிர்ந்து கொண்ட ஆக்கங்களை தமிழ் கொண்டு கூகுள் தேடு பொறியில் தேடி எடுக்க இயலும்
6.தரவுகளை (DATABASE) தமிழிலேயே உருவாக்க முடியும்.

இந்த பட்டியலில் குறிப்பிடா எண்ணற்ற பணிகளையும் தமிழ் கொண்டு கணினிகளில் செய்ய இயலும்.உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் 'தமிழ்ப்பூங்கா' இதழ் கூட கணினித்தமிழ் கொண்டு உருவாக்கப்பட்டதுதான்.

கணினியில் தமிழினை மேம்படுத்துவதற்காக உலகெங்கும் கருத்தரங்கங்களும்,மாநாடுகளும் நடந்துவருகின்றன.
கடந்த இருமாதங்களுக்கு முன் 7வது தமிழ் இணையமாநாடு சிங்கப்பூரில் நடந்தது இதில் 60 ம் மேற்பட்ட கணினி வல்லுனர்கள் பங்கேற்றனர்.ஒரு விசயம் உலக மொழிகளில் ஆங்கிலத்துக்கு அடுத்து அதிக வலைத்தளங்களும்,வலைப்பூக்களும் உள்ள மொழி தமிழ் தான்.

தமிழை கணினியில் பயன்படுத்துதல் என்பது தொடங்கி 10 ஆண்டுகளுக்குள் தான் ஆகிறது ஆனால் எந்த மொழிக்குமே இல்லாத அளவிற்கு தமிழ் இன்று வியத்தகு முன்னேற்றமடைந்துள்ளது. இதற்காக உழைத்துள்ள அனைத்து வல்லுனர்களையும் பாராட்டியே ஆக வேண்டும்.

"முரசு" மென்பொருளை உருவாக்கிய திரு.முத்து நெடுமாறன், "மயிலை" மென்பொருளினை உருவாக்கிய டாக்டர்.கலி யாணசுந்தரம் , இவை தவிர "இ-கலப்பை" முன்னோடி திரு முகுந்தராஜ் , "அழகி" அமைப்பாளர் திரு விஷி வி ஸ்வநாதன்,கணினி வல்லுனர் திரு.உமர் எனும் இளம் தலைமுறையின் அரிய கண்டுமிடிப்புக்கள், தமிழ் கணினியில் வளர வழிகோலியுள்ளது.



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

கணினியில் தமிழ் வளர்ந்து கொண்டுள்ளது என நாம் மார்தட்டி கொண்டாலும் ஒரு கோணத்தை நாம் சிந்திக்கவேண்டும்.தன்னார்வலர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் தவிர்த்து, பிற சதவிகத்தில் எத்தனை பேருக்கு கணினித் தமிழ் தெரிய வந்திருக்கிறது என்பது ஒரு பெரிய விவாததிற்குரிய விசயம். கணினி பயன்படுத்தும் மாணவர் சமுதாயம் மற்றும் பொது மக்களில் இன்னும் எண்பது சதவிகிதத்தினருக்கு கணினித் தமிழ் சென்றடையவில்லை. எத்தனை சதவிகித மக்களுக்கு எழுத்துருக்களைப் பற்றியும், அவற்றைப் பயன்படுத்தும் முறைகள் பற்றியும் தெரிந்திருக்கிறது என்பது கேள்விக்குறியே. கணினியில் தமிழினை பயன்படுத்த உதவும் நிரலிகள் அனைத்தும் இலவசமாக கிடைத்தும் இப்படி ஒரு நிலை நீடிக்கின்றது. கடைக்கோடி தமிழனும் கணினியில் தமிழை பயன்படுத்த செய்யவேண்டும்.இதற்காக அனைவரும் இணைந்து ஓர் இயக்கம் காண வேண்டும்

தமிழுக்கான எழுத்துருக்கள் டாம், டாப், டிஸ்கி, என வளர்ந்து யுனிகோடில் வந்து நின்றுள்ளது. இன்று அனைத்து இணைய வலைப்பூக்களும் யுனிகோடு குறியீட்டு முறையினைத்தான் பயன்படுத்துகின்றன. யுனிகோடு குறியீடு தமிழுக்கு கி டைத்துள்ள ஒரு வரப்பிரசாதம்.

சரி வாசகர்களே இந்த கட்டுரையினை படித்த பின் உங்களுக்கும் கணினியில் தமிழினை பயன்படுத்தும் ஆவல் வந்துள்ளதா? உலகத்தமிழர்களுடன் உங்கள் கருத்துகளை பகிர்ந்து கொள்ளும் ஆவல் எழுந்துள்ளதா? யுனிகோடு தமிழை பயன்படுத்துவது எப்படி ? சந்தேகம் எழுந்துள்ளதா? கவலை கொள்ளாதீர்கள்! இவற்றை கற்றுக்கொள்ள பெரிய கணினி நிபுணத்துவம் தேவையில்லை ஒரு ஐந்தாம் வகுப்பு படித்திருந்தாலே போதும் அவ்வளவு எளிது. இதற்கான வழிகளை அடுத்த இதழில் உங்களுக்குச் சொல்வேன்.

-

கே.எம்.விஜயகுமார்.

*******************************************************************

# கவிக்களம்

இந்த இதழின் கவிக்களத்திலே மற்றும் கவிஞர்கள் தமது கவித்திறன் கூட்டி தமிழ் வடித்துளார்கள். சுவைத்து மகிழுங்கள். பின் உங்கள் கருத்தைப் பகிருங்கள்.

சித்திரைத் தமிழ்ப்புத்தாண்டு

சித்திரையே எழில்
முத்திரையே
சொல்லிவிடு உன்
சூட்சுமத்தை

எத்தனையோ தமிழ்
மாதங்களும்
இன்னமுதத் தேன்
அளந்தாலும்

முத்தொளிரும் தமிழ்ப்
புத்தாண்டில்
முரசொலித்தே உன்
முகமெடுத்து

முத்தமிழர் ஏன்
முன்வைத்தார்
மொழிவாயே என்
சித்திரையே

.

அத்தைமகள் விழி
மார்கழியும்
அமுதளக்கும் நிலத்
தைமகளும்

முத்தமிடும் பொற்
கார்த்திகையும்
முகிலவனின் நல்
ஐப்பசியும்

எத்தனையோ இம்
மாதிரியாய்
முத்தமிழர் தம்
மாதங்களும்

சித்திரமாய்ப் பண்
பாடிவர
சித்திரையே நீ
ஏனடியோ.

கத்தரியாய்த் துயர்
துண்டாடி
கவிபாடும் தீப்
பிழம்பரசி

எத்தனையோ இருள்
எழுந்தாலும்
எரிப்பாயே அருள்
நிறைப்பாயே

சித்திரையே தவப்
பொற்கொடியே
சூரியனும் உன்
சொற்படியே

முத்தெடுக்கும் நீள்
மூச்சழகே
முறைதானே நீ
தலைமகளே.

முத்துரதம் மண்
ஊர்ந்துவர
மேற்தளத்தில் தமிழ்
வீற்றிருக்க

எத்திசையும் வளர்த்
தூயதமிழ்
எழுந்தோங்க வளம்
விண்முட்ட

புத்தாண்டின் புது
நல்வாழ்த்தாய்
புவியெங்கும் தமிழ்ச்
சுரம்பாட

சித்திரையே நீ
வந்துவிட்டாய்
செந்தமிழின் தேன்
தந்துவிட்டாய்

*

அன்புடன் புகாரி

நண்பர்களே ! மேலேயுள்ள கவிதை கனடாவில் வசிக்கும் கவிஞர் புகாரி அவர்கள் தமிழ்ப்பூங்கா வாசகர்களுக்காக தெரிவு செய்து அனுப்பிய அவரது கவி தையாகும்.



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

## புதுக்காற்று

களம் கண்ட மானுடத்தைக்
கடல் கொண்ட கோரங்கள்
புதிதல்லத் தமிழனுக்குக்
கதியிழந்து போவதற்கு !
முதற்சங்க காலத்தே
கபாடபுரம் கொண்டதுவும்
இடைச்சங்க காலத்தே
தென்மதுரை தாழ்ந்ததுவும்
பஃறுளி யாற்றுடனே
பன்மலை அடுக்கத்தையும்
வங்கக் கடல் பொங்கி
வாரி விழுங்கியதும்
கரங்கட்கு வலுவேற்றும்
வரலாற்றுத் தழும்புகளே !
இனத்திற்கு விட்ட கொடும்
இயற்கையின் சவால்களே !

முற்ற நனைந்த எமக்குக்
குளிரென்ன ? கூதலென்ன ?
பல ஆமியுடன் மோதிய நாம்
சுனாமியுடன் போவோமோ ?

மங்காது மறையாது
மாண்புடனே வாழ்வதற்கு
போராடிக் கொண்டிருந்த
முன் வரிசை வீரர்களை
அரவமின்றி ஊரோடு
அலையடித்துப் போனாலும்
மலையாக நின்று இனத்தை
நிலையாக்கக் கரம் கொடுப்போம்

நோரோடு போனவைகள்
நெஞ்சை விட்டு நீங்காது
நினைவில் நின்று அகலாது
உயிரோடு ஒன்றாகி
வைரத்தின் திண்மை தரும்

போராடும் உறுதி பெற்றுப்
புதுக்காற்றை வரவைக்கும்
புத்தாண்டின் வரவெமக்கு
புது உலகைத் தோற்றுவிக்கும்

கவிஞர் க.மனோகரன்

*****************

## களத்தினில் குதித்திடு

ஆழிநிலம் வெடித்துப்
பேரலைகள் பொங்கினவே !
ஊழி பிறந்தது போல்
உலகமெல்லாம் நடுங்கியதே !
சமுத்திரம் பொங்கியதால்
சாவலைகள் எழுந்தனவே !
அலைதவழும் கரையெல்லாம்
அழுதலையும் நிலையாச்சே !

தாய்மடியென்றே நாம்
தவழ்ந்து விளையாடும் கடல்
பேய் உருவம் தாங்கிப்
பெருவேகம் கொண்டு பல
ஆயிரம் தலை கொள்ள
அசுகையின்றி வந்ததுமேன் ?
பாயுடன் தாய் சேய்களையும்
பறித்தெறிந்து போனதுமேன் ?

பகல் வெய்யில் ஏறமுன்னர்
படுக்கையினைச் சுருட்டமுன்னர்
திகில் மரணம் தந்திங்கு
திடுமென்று வந்ததுமேன் ?
பல்லாண்டு வாழ்ந்திருந்த
பழம்குடிகள் தளம் மறைய
சொல்லாமல் கொள்ளாமல்
சுருட்டி அடித்ததுமேன் ?

பதிலேதும் அறியாதே
பதறியது போதுமடா !
கதியேதும் காணாது
கலங்கியதும் போதுமடா !
இழந்ததனை நெஞ்சிருத்தி
இருப்பதனைக் காப்பாற்ற
இதயத்தை இரும்பாக்கி
களத்தினிலே குதித்திடடா !

கவிஞர் க. மனோகரன்

நண்பர்களே ! லண்டனில் மோடர்ன் நகரில் வசிக்கும்
நண்பர் கவிஞர் மனோகரன் தமிழ்ப்பூங்கா
வாசகர்களுக்காகப் படைத்த கவிதை



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

கடந்த வருடம் நான் தமிழகத்திற்கு விடுமுறையில் சென்றிருந்தபோது எனது மனைவி பிறந்த மண்ணுக்குச் சென்றிருந்தேன் . அங்கே மனைவியினது பால்ய நண்பரொருவர் ஓர் உயர்நிலைப்பள்ளி நடத்தி வருகிறார்.அந்தப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் எனது தமிழார்வம் பற்றி ஒரு சிறு சொற்பொழிவாற்றும் வண்ணம் அந்த நண்பர் இட்ட அன்புக் கட்டளையை ஏற்று இந்தச் \சிறியேனின் சிற்றறிவுக்கு எட்டியவாறு மனதில் இருந்த கருத்துக்களை அம்மாணவச் செல்வங்களுடன் பகிர்ந்து கொண்டேன். அப்போது எனக்கு நன்றி கூறும் முகமாக அந்தப் பள்ளி ஆசிரியை ஒருவர் , ஓர் கவி இயற்றி அதைப் படித்துக் காட்டினார். அந்தக் கவிதைக் கணம் என்னை சில வினாடிகள் பேச்சற்று நிறுத்தி விட்டது . இந்தச் சாதாரண மனிதனை மனதில் நிறுத்திப் புனிதப்பணி புரியும் ஆசிரியை சொல்லின்பம் அளித்ததை என்னால் மறக்க முடியாது. அந்தக் கவிதையின் இனிமையை உங்களுடன் பகிர்ந்து கொள்ள இதோ அந்தக் கவிதை.

வணக்கம் !
தலைமையாசிரியர்,
நன்றி கூற
என்னை முன்மொழிந்ததைச் சற்று
முன்னதாகவே மொழிந்திருந்தால்
நானும் ...
நல்ல தமிழில், நாலு வார்த்தைகள்
நாடியிருப்பேன்
நானோ ...
இப்பொழுது நடுக்கத்தில்
ஆனாலும்
இவ்வளவு நேரம்
வேற்று நாட்டவர்
தமிழ்த் தாகம் கொண்டு ,
அழகு தமிழாய்,
அருமைத் தமிழை,
இனிய தமிழில்
தன்னடக்கத்தோடு உரையாற்றிய
உயர்திரு. சக்தி அவர்களுக்கு
நாம் நம்
நன்றியைக் கூற கடமைப்பட்டுள்ளோம்
பஸ்ஸில் ஏறி
மம்மிகளுக்கு
டாடா சொல்லும்
குழந்தைகளைக் காண விரும்பும்
பெற்றோர்கள்!
ஆங்கில மோகம் கொண்டும்
ஆங்கிலத்தில் பேச முடியவில்லையேஎன்று
அங்கலாய்த்துக் கொண்டு
அலையும் நம்
மம்மிகளுக்கும்
தமிழ் உணர்வைத் தூண்டியுள்ளார்
அதற்காக,
நாம் நம்
நன்றியைக் கூறக் கடமைப்பட்டுள்ளோம்
நாம் அறிந்த மொழிகளிலே
தமிழ் மொழிபோல் இனிதாவது
எங்கும் காணோம் - என்ற
பாரதி வரிகள்
படிக்கும் போது
ஏற்பட்ட பரவசத்தை விட
இவ்வரிகள் அனுபவித்த
அன்பர் சக்தி அவர்கள்
அயல்நாட்டவர் கூறுகையில்
ஆழமாய்
உணர்வாய்
உடம்பில் உள்ள செல்களை
எழுப்பி
முத்திரை பதிக்கிறதே !
அதற்காக ,
நாம் , நம்
நன்றியைக் கூறக்
கடமைப்பட்டுள்ளோம்
சின்னச் சின்ன சொற்களில்
சிலேடை கூறி
நம்மைச் சிரிப்பிலும்
சிந்தனையிலும்
ஆழ்த்தினாரே!
அதற்காக நாம், நம்
நன்றியைக் கூறக்
கடமைப்பட்டுள்ளோம்
சித்திரமும் கைப்பழக்கம்
செந்தமிழும் நாப்பழக்கமுண்மைதான்
ஆங்கிலத்தில் தான்
பேச வேண்டும்
என்ற கட்டாயச் சூழல்
இருந்தாலும்
செந்தமிழும்
அவர் நா
நன்கு பழக்கம்
என்று சிறப்பாக நிரூபித்தாரே !
அதற்காக
நாம் நம்
நன்றியைக் கூறக்
கடமைப்பட்டுள்ளோம்
வெளிநாட்டில் வேலை கிடைக்க
புதிய படிப்பேதும்
இல்லை என்று
நகையாகவும்
சுவையாகவும்
நயமாகவும்
இந்தியாவின்
எதிர்கால முன்னேற்றம் பற்றி
நம்பிக்கை ஒளி
ஏற்றினாரே !
அதற்காக
நாம் நம்
நன்றியைக்
கூறக்கடமைப்பட்டுள்ளோம்
கன்னித் தமிழ் மீது
காதல் கொண்ட காரணத்தால்
செந்தமிழை
செழுந்தமிழாய்
"மு" விற்கு அழுத்தம் கொடுத்தார் -
"கலைஞர்"
அதனை நினைவூட்ட
நம்மிடையே
வந்ததற்காக
நாம் நம்
நன்றியைக் கூறக் கடமைப் ப்ட்டுள்லோம்
இத்தகையோர்
வருகையை நேசிக்கவும்
சுவாசிக்கவும்
நம் தமிழ் மண்ணிற்கு
சுவடுகள் பதிக்க
நாம் , நம்
நன்றியைக் கூறக் கடைப்பட்டுள்ளோம்
இவர் வருகையை
மீண்டும் எதிர்பார்த்து
தமிழ் தருக
இனிய தமிழ் மோகம் தருக
தமிழ் வளர்க்க வருக
தமிழ் உள்ளம் வருக
என்றும்
நாம் நம்
நன்றியைக் கூறக் கடமைப்பட்டுள்ளோம்
ஆசிரியை நிஷா

******************************************

நண்பர்களே !

இந்தக் கவிதையை எழுதிய அந்த

ஆசிரியையை நான் முன்பே அறிந்தவனல்ல , தமிழ் மணம் கமழும் தமிழ்நாட்டில் ஓரத்தில் அமர்ந்துள்ள கிராமத்தில் ஒரு பள்ளி . அதன் மாணவர்களிடையே நண்பரின் வேண்டுகோளைத் தட்டாது சில நிமிடங்கள் எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டதிற்காக, எதுவித முன்னறிவித்தலுமின்றி அழகிய தமிழ் கருத்துக் கவிமாலையை எனது


கழுத்தில் மாட்டிய அந்தச் சகோதரிக்கு , இந்தப் புகழுக்கு நான் ஏற்றவன் தானா எனும் சந்தேகத்தோடு எனது நன்றிகளைத்

தெரிவித்துக் கொள்கிறேன்.



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

# உங்கள் அன்பு அறிவிப்பாளர் - சிறப்புக் கட்டுரை



அமைதியான , ஆனால் கணீரென ஒலிக்கும் கம்பீரமான தமிழ்க்குரலுக்குச் சொந்தமான , எமது ,மனங்களில் எல்லாம் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தின் முதுகெலும்பாக விளங்கிய எங்கள் அன்பு அறிவிப்பாளர் , அண்ணன் பீ.எச். அப்துல் ஹமீது அவர்கள் எனது அன்பு வேண்டுகோளுக்கிணங்கி தமிழ்ப்பூங்கா வாசகர்களுக்காக அருமையான ஒரு கட்டுரை ஒன்றைத் தொகுத்து வழங்கியுள்ளார். நான் பல தடவைகள் முன்பு கூறியதைப் போன்று இந்தத் தமிழ்ப்பூங்கா படைக்கும் பணியிலே நான் சந்தித்த , சந்திதுக் கொண்டிருக்கும் அன்பு உள்ளங்களின் நட்பு ஒன்றே நானடைந்த பயன்களில் தலையாயது , அந்த வரிசையிலே உலகெங்கும் பறந்து எம் ஈழத்தமிழரின் புகழ்படைக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தாலும் எனது அன்பான வேண்டுகோளுக்கிணங்கி இந்தக் கட்டுரையை வழங்கிய அண்ணனுக்கு எனது அன்பான நன்றிகள்.

## வானலைகளில் வளர்ந்த மெல்லிசை

இலங்கையில் ஜனரஞ்சக இசைமரபு, இந்தியத்திரையிசையின் ஆளுமைக்குள்ளேயே வளர்ந்து வந்திருக்கிறது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோருக்குத் தென்னிந்தியத் திரை இசையின் தாக்கம் இருந்து வருவதைப் போன்று, சிங்கள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோருக்கு வட இந்தியத்திரையிசையின் மீது ஏற்பட்ட மோகமும், தலைமுறைகள் கடந்து தொடர்கிறது.

பொருள் புரியாவிடினும் இலக்கணம் கடுமையாக இல்லாத ஹிந்தி மொழியில் இயல்பாகவே உள்ள இசைப்பாங்கு, மொழிவித்தியாசமில்லாமல் இசைப்பிரியர்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

ஹிந்தித் திரைப்படப்பாடல்களை இலங்கை மக்கள் மத்தியில் பிரப லய்படுத்தியதில் இலங்கை வானொலிக்கு முக்கிய பங்குண்டு. சுமார் நான்கு தசாப்தகாலத்துக்கு முன்பு காலைமுதல் மாலைவரை ஹிந்தித் திரையிசைப்பாடல்களே, முழுக்க ஆக்கிரமித்த சிங்கள வர்த்தக ஒலிபரப்பில் சரள-கீ என்ற பெயரில் மிகக்குறைந்த நேரம் மட்டுமே சுனில்ஷாந்த , W.D அமரதேவ,கோகிலாதேவி போன்ற பாடகர்களின் பாடல்கள் இடம்பெற்று வந்தன. இப்பாடல்களைப் பாடுவதற்கும்கூட வானொலி நிலையத்தாரால் நடத்தப்படும் தேர்விலே சித்தியடைந்த பாடகர்,பாடகிகள் மட்டுமே அழைக்கப்படுவார்கள்.

வர்த்தகசேவையைப் பொறுத்த அளவில் பி.எல்.ஏ சோமபாலா எனும் தயாரிப்பாளர் இப்பாடல்களை வர்த்தகசேவையின் டி கலையகத்திலே நான்கே நான்கு ஒலிவாங்கிகளின் துணையோடு ஒலிப்பதிவு செய்வார்.இசையமைப்புப் பின்னனியில் ஜனாப் டி.எஃவ் லத்தீப்பின் கடுமையான உழைப்பிருந்தும்கூட இசையமைப்பு பி.எல்.ஏ சோமபாலா என்றுதான் லேபல் குத்தப்படும். வரும் பாடகர்,பாடகிகளில் பெரும்பாலும் ஹிந்தித் திரையிசை மெட்டுக்களால் கவரப்பட்டவர்கள், அம்மெட்டுக்களுக்கேற்றவாறு , அல்லது அவரற்றின் சாயலிலே மெட்டுக்களை உருவாக்கி,சிங்களச்சொற்களைப் புகுத்திப் பாடிவிட்டுச் செல்வார்கள்.

அபூர்வமாய்ச் சொந்த மெட்டுக்களைப் பாடியவர்களும் உண்டு. புதிதாய் வந்த ஹிந்தித் திரையிசை மெட்டைத்தழுவி ஒரு சிங்களப்பாடல் ஒலிப்பதிவானால் அடுத்தநாளே அதன் மூலப்பாடல் தட்டு(ஹிந்தி) இசைத்தட்டுக் களஞ்சியத்திலிருந்து மாயமாய் மறைந்து விடும் என்று சிலர் வேடிக்கையாய்க் கூறுவதுண்டு.(அதில் எந்தளவு உண்மையுண்டோ நானறியேன்).

எப்படியோ ஹிந்தித் திரையிசைப்பாடல்களுடன் போட்டி போட முடியாத, இந்நாட்டு மெல்லிசைப்பாடல்கள்(சரள்-கீ) ஒரு சிலவற்றைத் தவிர நேயர்களின் வரவேற்பைப் பெருமளவில் பெறவில்லை.

ரேடியோ சிலோன், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமாக மாறியபின் வந்த மாஅதிபர்களிலே சுசில் முனசிங்ஹ அவர்களின் காலத்திலேதான் சிங்கள மெல்லிசை கலைஞர்களுக்கு திடமான அத்திவாரத்துடன் வானொலியில் ஒரு களம் அமைந்தது.

வெகுதுணிச்சலுடன் ஹிந்திப் பாடல்களின் ஆக்கிரமிப்பைக்குறைத்து, 85% சிங்களப்பாடல்களே ஒலிபரப்பப்படவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார். ஆரம்பத்தில் சிங்கள நேயர்களுக்குச் சப்பென்று இருந்தாலும், வேறு வானொலிகளே இல்லலத நிலையில் கேட்கக் கேட்க ஒரு தனி ரசனை வளர ஆரம்பித்தது. புதிய புதிய திறமைகளும் வெளிச்சத்துக்கு வர ஆரம்பித்தன.

புதிய தலைமுறை இசையமைப்பாளர்களும் உருவானார்கள். சிங்களத் திரையிசை எனும் எல்லைக்கு வெளியே , சிங்கள மெல்லிசைப்பாடல்களுக்கு தனி அந்தஸ்தினை உருவாக்கித் தந்தோரில் விக்டர் ரட்நாயக்காவிற்குத் முக்கிய பங்குண்டு. மிகக்குறுகிய காலத்திற்குள்ளே அவரது பாடல்கள் ஜனரஞ்சக அந்தஸ்தினைப் பெற்று தனிநபர் இசைநிகழ்ச்சி நடத்தும் அளவு புகழ் பெற்றார்.

இந்தக் காலகட்டத்திலேதான், முஸ்லீம்சேவையின் இஸ்லாமியகீதங்களின் பாணியிலும் சிலமாற்றங்கள் ஏற்பட்டன.மர்ஹீம் எம்.எச்.குத்தூஸ் அவர்களின் வழிகாட்டலில்,மர்ஹீம் மொஹமட்சாலி,மற்றும் டீ.எஃவ் லத்தீப்.கே.எம்.ஸவாகீர் போன்றோரின் பங்களிப்பு,நம்மவர் பாடிய இஸ்லாமிய கீதங்களின் ஒலிநயத்தில் ஒரு ஈர்ப்பை நம்நாட்டு நேயர்களின் மத்தியில் உருவாக்கியது.

தமிழ் மெல்லிசைப்பாடல்களைப் பொறுத்த அளவில் அதன் நதிமூலம் வர்த்தகசேவையில்தான் ஆரம்பமானது.

முழுக்க,முழுக்க தென்னிந்தியத் திரையிசைப்பாடல்களே ஆக்கிரமித்திருந்த அன்றைய தமிழ் வர்த்தக சேவையிலும், திரு சுசில் முனசிங்ஹ அவர்கள் சிங்களசேவைக்காக எடுத்த அதிரடி முடிவை அமுல் படுத்தியிருந்தால் என்னவாகியிருக்கும்?

நமது நேயர்கள் தாராளமாக திருச்சி வானொலிக்கோ அல்லது சென்னை வானொலிக்கோ தமது செவிகளைத் திருப்பியிருப்பார்கள்.

ஆயினும் நம்நாட்டுக் கலஞர்களின் திறமைக்கு ஒரு வடிகால் வேண்டும் எனும் ஏக்கம் அறுபதுகளின் பிற்பகுதியில் வர்த்தகசேவையின் புதிய அறிவிப்பாளார்களாக வந்த என்போன்றவர்களுக்கு இருந்து வந்தது. இவ்வேளையில் மறைந்த மூத்த அறிவிப்பாளர் எஸ்.கே பரராஜசிங்கம் அவர்கள், காலஞ்சென்ற இசையமமைபபாளர் எம்.கே றொக்சசமி அவர்கள் துணையோடு, பாரம்பரிய நாட்டுப்பாடல்களுக்கு புது இசைவடிவம் கொடுத்து மெலிபன் கவிக்குரல் எனும் விளம்பரதாரர் நிகழ்ச்சியில் பாடிவந்தார்.

தனியாருக்குச் சொந்தமான பிறவுண்ஸ் ஸ்டூடியோவில் ஒருசில வாத்தியக் கருவிகளின் துணையோடு, அந்நிகழ்ச்சி ஒலிப்பதிவு செய்யப்பட்டு வானொலி நிலையத்திற்கு அனுப்பப்படும். ஒரேயொருதடவை ஒலிபரப்பாகி காற்றோடு காற்றாக கலந்து மறைந்து நேயர்களது நினைவை விட்டும் அகன்றுபோகும்.

ஆயினும் அந்த ஒலிப்பதிவு நாடாக்களை ஒரு நினைவுக்காக, திரு பரராஜசிங்கம் சேகரித்து வைத்திருந்ததை ஓராண்டுக்குப் பின் அறிந்த நான், அவரிடம் இருந்து அவற்றைப்பெற்று வானொலி நிலையத்திற்கு கொண்டு வந்து, இசைத்தட்டுக் களஞ்சியத்தில் விளம்பரங்கள் பதிவதற்காக வைக்கப்பட்டிருந்த ரசாயணமுலாம் பூசிய அலுமினியத் தட்டுக்களில் சிலவற்றை மேலதிகாரிகள் அனுமதி பெறாமலே எடுத்து (ஒருவகைத்திருட்டு ?) தொழில்நுட்ப உதவியாளராகவிருந்த அருமை நண்பர் குமார் கனகரட்ணத்தின் உதவியோடு பதிவுசெய்து வைத்துக் கொண்டேன்.

தினந்தோறும் மாலை 4 மணிக்கு ஒலிபரப்பாகும் இசைக்களஞ்சியம் நிகழ்ச்சியில், கடைசியாக தனிப்பாடல் என்ற பெயரில், தமிழகத்தின் தண்டபாணித் தேசிகர், அல்லது ஆர்.பாலசரஸ்வதி தேவி பாடிய பாடலை ஒலிபரப்புவது வழக்கம் .

அதற்குப்பதிலாக ஒருநாள் நான் பதிவு செய்து வைத்திருந்த பாடல்களில் ஒன்றை , நம் நாட்டுப்பாடல் கேட்போம் என அறிவித்து ஒலிபரப்பினேன்.

மேலே அலுவலகத்தில் ஒலிபரப்பைக் கேட்டுக்கொண்டிருந்த முன்னாள் கட்டுப்பாட்டாளர் திரு. விவியன் நமசிவாயம் அவர்கள் பாடல் முடிவதற்குள் கலையகத்திற்குள் வந்துவிட்டார்.

எனக்கோ கைகால்கள் எல்லாம் உதறல் எடுத்தன. அனுமதி பெறாமல் பாடலைப் பதிவுசெய்ததும் , ஒலிபரப்பியதும் பெருங்குற்றம்.உடனடியாகச் சீட்டைக்கிழித்திருக்கலாம். என்னை வீட்டுக்கனுப்பியிருக்கலாம்.




பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

ஆனால் அவரது தூர தரிசனம் காரணமாக, அவ்வாறு செய்யாமல், எனது நன்னோக்கத்தைப் புரிந்துகொண்டு என்னை நெருங்கிக் கேட்டார் .. ஏன் இப்பிடிச் செய்யுறீர்..? உமக்கு நான் வாரந்தோறும் தனியாகப் பதினைந்து நிமிடம் ஒதுக்கித் தருகிறேனே .. ஈழத்துப் பாடல்கள் என்ற தலைப்பில் மேலும் சில பாடல்களையும் உருவாக்கி தனி நிகழ்ச்சியாக வழங்கும்படி பணித்தார்.(அப்படிப்பட்ட உயர்ந்த குணமுடைய மனிதர்களை இப்போது காண்பதரிது).

அதன்பின்னர் திரு.பரராஜசிங்கமும் நானும் சேர்ந்து நடத்தி வந்த அரங்கேற்றம் எனும் நிகழ்ச்சியில் பங்குகொண்டவர்களில் சிறந்தவற்றை தெரிவு செய்து, இசைத்தட்டுக்களாகப் பதிவு செய்து வைத்துக் கொண்டு, ஏற்கனவே பதிவுசெய்து வைத்திருந்த பாடல்களையும் கலந்து ஞாயிறு தோறும், ஈழத்துப்பாடல்கள் என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சியைத்தொகுத்து வழங்க ஆரம்பித்தேன் .

இப்படி ஒரு களம் அமைந்ததில் வளரத்துடிக்கும் கலஞர்கள் பெரும் ஆனந்தமடைந்தார்கள்.

விளைவு, திருகோணமலையில் புகழ்பெற்ற இசைக்குழுவாக இருந்த பரமேஸ்-கோணேஸ் இரட்டையர்கள் கொழும்புக்கு வந்து, களனியில் உள்ள சரஸவி ஒலிப்பதிவுக்கூடத்தில் பெரும் செலவில் நான்கு பாடல்களை ஒலிப்பதிவு செய்து இலங்கையின் முதலாவது தமிழ் மெல்லிசைத் தட்டை உருவாக்கி , அதனை வானலைகளில் அரங்கேற்றுவதற்காக என்னிடம் கொண்டு வந்து ஒப்படைத்தார்கள்.

அந்தப்பாடல்களில் ஒன்றுதான் ,"உனக்குத் தெரியுமா ... நான் உன்னை நினைத்தது .. " அதேசமயம் யாழ்மண்ணில் தமிழ்பைலா பாணியில் பாடிவந்த இளைஞர் நித்தி கனகரத்தினத்தின் பாடல்களால் கவரப்பெற்ற அன்பர் கனகசபை (முன்பு May fair ஹோட்டலில் பணிபுரிந்தவர்) நித்தியை கொழும்புக்கு வரவழைத்து அதே சரஸவி கலையகத்தில், க்ளொட் ஃபெர்ணாண்டோ, பப்பா மிஸக்கீன் போன்ற இசைக்கலைஞர்களின் துணையோடு நான்கு பாடல்களை ஒலிப்பதிவு செய்து இசைத்தட்டாக்கி என்னிடம் கொண்டுவந்து தந்தார்.

ஈழத்துப்பாடல்கள் நிகழ்ச்சியில், ஒலிபரப்பான நித்தியின் “சின்னமாமியே ..” மற்றும் “கள்ளுக்கடை பக்கம் போகாதே “ பாடல்கள் காட்டுத்தீ போல் பரவி தென்னிந்தியத் திரையிசைப்பாடல்களை விட அமோக வரவேற்பைப் பெற்றன.

(பின்னாளில் தமிழகத்தில் மதுவிலக்குப் பிரசாரத்துக்குக் கூட , நித்தியின் “கள்ளுக்கடைப் பக்கம் போகாதே..” பாடல் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரால் தெரிவு செய்யப்பட்டது ஒரு வரலாறு)

ஈழத்துப்பாடல்கள் நிகழ்ச்சியில் துள்ளிசைப்பாடல்களும், புதுமெட்டமைப்புப் பெற்ற பாரம்பரிய நாட்டுப்பாடல்களும் கலந்து ஒலிபரப்பானது ஏதோ சாம்பார் கலவை போல இருப்பதாகக் கருதிய திரு.விவியன் நமசிவாயம் , ஈழத்துப்பாடல்கள் நிகழ்ச்சிக்கு மேலதிகமாக வேறொருநிகழ்ச்சியையும் உருவாக்கி அதற்கு ஈழத்துத் தமிழ்பொப்பிசை எனும் பெயரையும் சூட்டி, அதனையும் தயாரித்து வழங்குமாறு என்னைப் பணித்தார்.

அதிலிருந்து ஆரம்பமான பொப்பிசைபாடல்காளின் வளர்ச்சியால், நித்தி கனகரத்தினம், ஏ.ஈ.மனோகரன், எஸ்.ராமச்சந்திரன், அமுதன்அண்ணாமலை, வி.முத்தழகு, எஸ்.வி.ஆர்.கணபதிப்பிள்ளை , ஸ்டெனிசிவானந்தன், டோபல்ராகல், எம்.ஜே.எம்.அன்சார், இமானுவேல் என ஏராளமான கலைஞர்கள் வெளிச்சத்துக்கு வந்து , ஏராளமான ரசிகர்களை இலங்கையிலும் , வெளிநாடுகளிலும் பெற்றார்கள்.

அதுமட்டுமல்ல, வில்சனின் தண்டர் ஸ்பார்க்கஸ் , பரமேஸ்-கோணேஸ், யாழ் கண்ணன் கோஷ்டி, பின் அவரோடு இணைந்த நேசன் தியாகராஜா, மவுண்ட்(ச்)சயிம்ஸ்,கோணேஸ்வரா இசைக்குழு, நீரோ இசைக்குழு, எனப் பல்வேறு இசைக்குழுவினரும் , இசையமைப்பாளர்களும் பெயர் பெற முடிந்தது.

வானொலி மூலம் கிடைத்த ஜனரஞ்சக அந்தஸ்து காரணமாக பொப்பிசைப்புயல்- எனும் பெயரில் கொழும்பு,கண்டி,மட்டக்களப்பு,யாழ் என இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் மக்கள் நிரம்பி வழிந்த மேடைநிகழ்ச்சிகளையும் நடத்த முடிந்தது.

பைலா சக்கரவர்த்தியான எம்.எஸ்.பெர்ணாண்டோ கூட தமிழ்ப்பொப்பிசைப்பாடல்கள் பலவற்றைப்பாடி மேடைநிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார். யாழ்மண்ணிலே தமிழ் ரசிகர்கள் , எம்.எஸ் பெர்ணாண்டோ அவர்களைத் தமது தோள்களிலே சுமந்து ஊர்வலம் வந்த காட்சி. இன்னும் எனது மனக்கண்ணில் நிழலாடுகிறது. (எம்.எஸ் இறப்பதற்கு ஒருவாரத்துக்கு முன்பு, வானொலி நிலையத்தின் வாசலில் பழைய நினைவுகளைச் சொல்லி கண்ணீர் மல்க ... எவ்வளவு ஒற்றுமையாக இருந்தோம், இனத்துவேஷ அரசியல்வாதிகளால் இருகூறாகப் பிரிந்து விட்டோமே ... என்று கலங்கினார்).

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் புதுவருடம், தீபாவளி, பொங்கல் போன்ற விசேட தினங்கள் வரும்போதெல்லாம் விளம்பரதாரர்கள் தமது நிகழ்ச்சியில் சினிமாப்பாடல்கள் வேண்டாம் நமது பொப்பிசைப்பாடல்களைப் போடுங்கள் எனக்கேட்கும் அளவு, தமிழ் பொப்பிசைப்பாடல்கள் புகழ்பெற்று விளங்கின.

பல்கலைவேந்தர் சில்லையூர் செல்வராசன் அவர்காள் கூட பொப்பிசைப்பாடல்களை இயற்றித் தன்குரலில் பாட ஆரம்பித்ததும் சில புத்திஜீவிகளின் கவனமும் தமிழ்பொப்பிசையின்பால் திரும்பியது. அதன்பயனாக. கொழும்பு தேயிலை பிரசார மண்டபத்தில் பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோர் தலைமையில் பொப்பிசை பற்றி ஒரு ஆய்வுக் கருத்தரங்கே நடந்தேறியது.

இவ்வளவு பிரபலமான ஒரு இசையூடகத்தின் மூலம் சமூகத்திற்குப் பயன்படும் நல்லெண்ணக்கருத்துக்களைப் பரப்பலாம் என்ற வழிகாட்டலும் கிடைத்தது. நமது பாடல்கள் என்று பெருமைப்படும் அளவு வளர்ந்து வந்த தமிழ்பொப்பிசை நாளடைவில் தேய்ந்து அழிந்தது. 83ம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் இருந்த இடமே இல்லாமல் போனது ஒரு துரதிர்ஷ்டமே .

இப்பொழுதெல்லாம் இருமொழிகளில் பாடும் திறமையுள்ளள ஏ.ஈ மனோகரன் மட்டுமே அந்த அடையாளத்தை மேடைகளில் அவ்வப்போது நிலை நிறுத்தி வருகிறார். அத்துடன் தற்போது அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞான விரிவுரையாளராயிருக்கும் நித்தி கனகரத்தினமும் வருடத்துக்கொருமுறை எங்காவது ஒருநாட்டில் விழா மேடையொன்றில் பாடுவதோடு சரி.

பொப்பிசை கவனிபாரற்றுப் போனாலும், வர்த்தக சேவையில் ஆரம்பமான மெல்லிசைப்பாடல் முயற்சியை, தேசியசேவையில் ஆரோக்கியமான முறையில் வளர்த்தெடுக்க, எழுபதுகளின் நடுப்பகுதியில் , உரிய நடவடிக்கைகளை எடுத்தவர்களில் திருமதி. பொன்மணி குலசிங்கம் அவர்களைப் பாராட்ட வேண்டும்.

கர்நாடக இசைக்கலைஞர்கள் மட்டுமே இருந்த வாத்தியக்கோஷ்டிப்பிரிவில் மெல்லிசைக்கென்றும் ஒரு தனிப்பிரிவை உருவாக்கி, அக்குழுவிற்குத்தலைவராக பிரபல திரைப்பட இசைஅமைப்பாளர் ஆர்.முத்துக்குமாரசுவாமி அவர்கள் நியமிக்கப்பட்டார். ஆரம்பத்தில் அம்பிகா தாமோதரம் பாடிய மெல்லிசைப்பாடல்களுக்கு திரு.மணிபாகவதர் இசைஅமைக்க , திருமதி மீனா மகாதேவன் பாடியபாடல்களுக்கு ஆர்.முத்துக்குமாரசுவாமி அவர்கள் இசையமைத்தார்.

இவையே தேசியசேவையால் உருவாக்கப்பட்ட ஆரம்பகால மெல்லிசைப்பாடல்கள். பின் ஏராளமான பாடல்களுக்கு, ஆர்.முத்துக்குமாரசுவாமி மற்றும் டீ.எஃவ்.ல்த்தீப் ஆகியோரே இசையமைத்து கொண்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து வெளியில் இருந்து வரும் இசையமைப்பாளர்களின் படைப்பாற்றலுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

.

எம்.கே.றொக்சாமி,ஷெல்டன்பிரேமரத்ன,எம்.எச்.செல்வராஜா,கே.எம்.ஸவாகிர், கண்ணன் நெசம் இரட்டையர்,போன்றோரின் அற்புதமான இசையும் நாவற்குழியூர் நடராசன்,கவிஞர் கந்தவனம்,முருகையன்,ஈழத்து ரத்தினம்,பஊீல் காரியப்பர்,சாஅது,செ.ஜெயபாலன்,குணரத்தினம் போன்றோரின் பாடல் வரிகளும் சேர்ந்து , அகில இந்திய



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

வானொலியின் மெல்லிசைப்பாடல்களைவிட சிறந்த பாடல்களாய் மிளிர வைத்தன. அந்நாளில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் திரையிசைப்பாடல்களே இல்லாமல் நடந்த -இசைப்பிருந்தா- எனும் மெல்லிசை நிகழ்ச்சிக்கு மண்டபம் நிரம்பிவழியும் அளவு ரசிகர்கள் வந்துகுவிந்ததும் ஒரு வரலாறுதான். பின்னாளில் வந்த இளைய இரட்டையர், கணேசராஜா, இக்பால்-ஜெகன்,போண்ரோரின் பங்களிப்பில் உருவான பாடல்களும் சந்தனமேடை தயாரித்த பாடல்களும் திரையிசையோடு ஒப்பிடும் அளவிற்கு ஒலிநயத்தில் சிறந்து விளங்கின.

ஆனால் !!!

இன்றைய நிலை ???

வானொலி நிலையத்தில் கலைஞர்களுக்கு போக்குவரத்துச் செலவிற்கு மட்டுமே பயன்பட்டுவந்த சன்மானம் கூட இல்லையென நிறுத்தப்பட்ட நாளில் இருந்து தமிழ் மெல்லிசைக் கலைஞர்களின் சுய ஆக்கத் திறமைகள் தேக்கமடைந்த நிலையிலேயே இருந்து வருகின்றன. பாடுவதைத் தொழிலாகக் கொண்ட கலைஞர்களும் இசைக்குழுக்களும் திருமணவீடுகளிலும் எப்போதாவது பொதுமேடைகளிலும் தென்னிந்தியத் திரைப்படப்பாடல்களையே பாடிப்பாடி தம் சுயத்தை இழந்து கொண்டிருக்கிறார்கள். தனியார் தொலைக்காட்சியிலும் நம்நாட்டுக் கலைஞருக்கான ஒரேயொரு நிகழ்ச்சியில் திரையிசைப்பாடல்களைப் பாடவைத்து புதிய திறமைகளை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் அபூர்வமாக நல்ல குரல் வளம் கொண்டோரைத் தேர்ந்தெடுத்து, நம்நாட்டுக் கவிஞர்களின் பாடல் வரிகளை நம் இசை அமைப்பாளர்காளின் இசைஅமைப்பில் பாடவைத்து மீண்டும் மெல்லிசைக்கு உயிர்கொடுக்க அவர்களுக்கும் மனமில்லை.

இலங்கைத் தமிழ் திரைப்படங்கள் இனி உருவாகுமா ? என்ற கேள்விக்குறிக்கு மத்தியிலே , நம்நாட்டு இசைக்கலைஞர்கள்,நடிப்பாற்றல் மிக்கோர், இசையமைப்பாளர்கள், கவிஞர்கள் அனைவரையும் போற்றி வளர்க்க வேண்டிய கடமை, அரச ஊடகங்களான வானொலிக்கும், தொலைக்காட்சிக்குமே உண்டு. வர்த்தக நேரத்தை முதன்மையாகக் கொண்டு இயங்கும் தனியார் ஊடகங்களை நாம் வற்புறுத்த முடியாது. சிங்களக் கலைஞர்களைப் பொறுத்த அளவில் அவர்களுக்கு வெளியில் இருந்து வரும் போட்டிகளைச் சமாளிக்கக் கூடிய அளவிற்கு, தனியார் தொலைக்காட்சிகளும் வானொலிகளும் அரச ஊடகங்களும் தாராளமான பொருட்செலவில் வாய்ப்புகளையும் வசதிகளையும் வழங்கி வருகிறார்கள். ஆனால் தமிழ்க்கலைஞர்களைப் பொறுத்த அளவில்...? அரச ஊடகங்களில் சிறுபான்மையினரின் நிகழ்ச்சிகளுக்கு. மாற்றாந்தாய் பிள்ளைக்கு வழங்கப்படும் அளவிலேயே வாய்ப்புகளும் நிதி ஒதுக்கீடுகளும் கிடைக்கின்றன. கேபிள் கலாசாரம் இலங்கையெங்கும் புற்றுநோய்போல பரவி வீட்டுக்குள் இருந்தபடியே நம் மக்கள் பலவித கலாச்சாரக் கலப்புடைய அலங்கார நிகழ்ச்சிகளுக்கு அடிமையாகிக் கொண்டு வரும் இன்றைய காலகட்டத்தில் நம் கலைஞர்களின் படைபாற்றலுக்கும், சுயதிறமைக்கும் மீண்டும் ஒரு வடிகால் கிடைக்குமா ? காலம்தாம் பதில் சொல்ல வேண்டும்.

தமிழ் அறிஞர்கள் , தமிழ் அரசியல்வாதிகள்,தமிழ்க்கலைகளின் காவலர்கள்,தமிழின் பெயரால் இயங்கும் சங்கங்கள் தங்கள் கவனத்தை இந்நாட்டு இசைக்கலைஞர்கள் பாலும் திருப்பினால் சிலவேளை விடிவு பிறக்கலாம்.

அன்புடன்

உங்கள் அன்பு அறிவிப்பாளர்

பி.எச். அப்துல் ஹமீது

## வாரியார் சொல்கிறார்

எல்லோருக்கும் நல்லவனாகவும் , எல்லோரையும் மகிழச் செய்கிறவனாகவும் ஒருவன் இருக்க முடியாது . சந்திரன் குளிர்ந்த அமுத கிரணங்களை உலகிற்கு வழங்குகிறான். முழு நிலவைக் கண்டு எல்லா உயிர்களும் உவகையுறுகின்றன. ஆனால் முழு நிலவைக் கண்டு தாமரை குவிந்து விடுகின்றது. சந்திரன் தாமரைக்கு என்ன தீங்கு செய்தான் ?
ஒன்றுமேயில்லை .

சந்திரனைப் போல் உலகுக்கு நன்மை செய்யும் நல்லோரைக் கண்டு சில புல்லோர்கள் இகழ்வார்கள்; வெறுப்பார்கள் ; பகைப்பார்கள் ; அதனால் நல்லோர்க்கு ஒன்றும் குறைவு உண்டாகாது.


கங்கை நீர் சிறந்தது . அதனினும் சிறந்தது அபிஷேக நீர். அதனினும் உயர்ந்தது ஏழைகட்காக உழைக்கும் ஒரு உத்தமனுடைய முகத்தில் துளிர்க்கும் வியர்வை நீர்.

சொல் உண்மையுடன் கூடியதாக இருக்க வேண்டும். உண்மையில் நன்மை கலந்திருக்க வேண்டும். அன்புடன் பேசுக. நிதானமாகப் பேச வேண்டும். அழமுடையதாகச் சிந்தித்துப் பேசுக. சமயமறிந்து பேசுக.
அவையறிந்து பேசுக.

*******************



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது



# கொஞ்ச நேரம் !

## நன்றி சொல்ல வேண்டும்

கடந்த 09.04.2005 அன்று லண்டனில் நடைபெற்ற எனது " தமிழ்ப்பூங்காவில் வண்ண மலர்கள் " புத்தக வெளியீட்டு விழாவுக்கு சமூகம் தந்த உற்றார் , உறவினர் , நண்பர்கள் அனைவருக்கும் எனது சார்பிலும் , எனது குடும்பத்தின் சார்பிலும் மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது தவிர இந்த விழாவிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியவர்களுக்கும் , மற்றும் வாழ்த்துக்களை தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகள். இந்த விழா சிறப்பாக நடந்தேற உதவிய நண்பர்கள் அனைவருக்கும் மனமுவந்த நன்றிகள் .

அனவருக்கும் இந்த விழா மிகவும் வெற்றிகரமாக நடந்தது என்பதினை மிகவும் மகிழ்ச்சியோடு அறியத்தருகிறேன்.

தமிழைப் பாடுவேன் ! தமிழைப் பாடுபவர்களைப் பாடுவேன் !

*******************************************************************************

## வேண்டுகோள்

நண்பர்களே !

நற்செய்தியொன்று , தமிழ்ப்பூங்காவின் வீச்சு மேலும் பலரை நோக்கி இருக்க வேண்டும் எனும் காரணத்தால் இந்த இதழில் இருந்து , இதைக் கணணி வழியான பி.டி.எவ் (pdf) எனும் கோப்பாக்கும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளேன் . தயவு செய்து அடுத்த இதழில் இருந்து மின்னஞ்சல் (இ-மெயில்) மூலமாக பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி படைத்தவர்கள் , உங்களுடைய இ-மெயில் விலாசத்தை தொலைபேசியூடாகவோ அன்றி இ-மெயில் மூலமாகவோ எனக்கு அறியத்தந்தால் மிகுந்த உதவியாயிருக்கும் . இ-மெயில் வசதியற்றவர்களுக்கு தொடர்ந்தும் தபால் மூலமாகவோ அன்றி நேராகவோ கிடைக்கும். இந்த முயற்சிக்கு எனக்கு முழு ஆதரவு நல்கிய கே.எம் விஜயக்குமார் , திருமதி நிர்மலா ராஜூ , திரு விஷி விஸ்வநாதன் , திரு.முகுந்த்ராஜ் , மற்றும் அனைத்து நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

*******************************************************************************

## மகிழ்ச்சியோடு


தமிழ்ப்பூங்கா வாசகர்களுக்கு ஒரு நற்செய்தி . கடந்த இதழில் வெளியான சிறுகதை "ஊமைராகம்" இசையும் கதையுமாக்கப்பட்டு லண்டனில் இயங்கும் "கானக்குயில்" எனும் வானொலியின் வானலைகளில் தவழ்ந்தது . இந்த வானொலி முன்னைநாள் இலங்கை தமிழ் ஒலிபரப்புச் சேவையின் முன்னனி அறிவிப்பாளர்களில் ஒருவரான திருமதி யோகா தில்லைநாதன் அவர்களால் நடத்தப்படுவது என்பது குறிப்பிடத்தக்கது . அத்துடன் இந்த இசையும் கதையும் , முன்னனி ஊடகவியலாளரும் , வழக்கறிஞரும் முன்னைநாள் இலங்கைத் தமிழ் வானொலி சேவையின் அறிவிப்பாளர்களில் ஒருவருமான திரு விமல் சொக்கநாதன் அவர்களால் தயாரிக்கப்பட்டு , குரலாக்கம் கொடுக்கப்பட்டது என்பதுவும் மிகவும் பெருமைக்குரியதாகும்.

கானக்குயில் வானொலிக்கும் , திரு விமல் சொக்கநாதனுக்கும் தமிழ்ப்பூங்கா சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******************************************************************************



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது



- கதை , கட்டுரைகளில் வரும் பெயர்கள் , சம்பவங்கள் கற்பனையே
- ஆக்கங்களில் வரும் கருத்துக்கள் , மற்றும் படைப்புக்களுக்கு , படைப்பாளிகளே பொறுப்பு
- ஏதாவது ஆக்கங்கள் வேறு இணையத்தளங்களிலோ அன்றி சஞ்சிகைகளிலோ இருந்து உபயோகிக்கப்பட்டிருந்தால் அவை தெளிவாக குறிப்பி டப்பட்டுள்ளன
- பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

தொடர்புகட்கு

சத்தி சக்திதாசன்
+ 44 (0)7986 944205
ஈ _ மெயில் : thasan@talk21.com



பதிப்புரிமை அனைத்தும் சத்தி சக்திதாசனுக்கே உரித்தானது

## *¾Á¢úôâí¸¡ 5*

## *À¾¢ôÒÃ¢¨Á «¨ÉòÐõ º³¾¢ ºì¾¢¾¡ºÛì§¸ ¯Ã¢ò¾¡ÉÐ*